29.10.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பாசுமதிக்கு 'புவிசார் குறியீடு' கிடைக்குமா?




புதுடில்லி,:பாசுமதி அரிசிக்கு, 'புவிசார் குறியீடு' பெறுவதில் உள்ள சிக்கலுக்கு, இந்தியாவும், பாகிஸ்தானும் இணைந்து தீர்வு காணுமா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. பிரியாணி அரிசி எனப்படும் பாசுமதி அரிசியின் பூர்வீகம், பஞ்சாப். இந்தியா - பாகிஸ்தான் பிரிவினையின் போது, பஞ்சாப் இரண்டாகப் பிரிந்தது. தற்போது, பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் உள்ள பஞ்சாப் மாநிலங்களில், பாசுமதி அரிசி விளைகிறது. இதுதவிர, ஹரியானா, மேற்கு உத்தர பிரதேசம், உத்தரகண்ட், ஜம்மு - காஷ்மீர், ஹிமாச்சல பிரதேசம், டில்லி ஆகிய இடங்களிலும், பாசுமதி அரிசி விளைகிறது. பாசுமதியின் விளைச்சல்,

உற்பத்தி, விற்பனை ஆகியவற்றிற்கு, சட்டபூர்வ உரிமையை பெற, புவிசார் குறியீடு உதவுகிறது. எனவே, பாசுமதிக்கு புவிசார் குறியீடு கோரி, இந்தியாவும், பாகிஸ்தானும் அறிவு சார் சொத்துரிமை வாரியத்திடம் விண்ணப்பித்துள்ளன. இந்நிலையில், மத்திய பிரதேசமும், 13 மாவட்டங்களில், பாசுமதி அரிசியை பாரம்பரியமாக பயிரிட்டு வருவதாகக் கூறி, புவிசார் குறியீட்டிற்கு விண்ணப்பித்துள்ளது. இதை, பாகிஸ்தான் ஏற்க மறுத்து, அறிவுசார் சொத்துரிமை மேல்முறையீட்டு வாரியத்தில், முறையீடு செய்துள்ளது. இந்த வழக்கில், அடுத்த வாரம் தீர்ப்பு வழங்கப்பட உள்ளது. புவிசார் குறியீடு கோரிய விண்ணப்பத்தை, மத்திய பிரதேசம் திரும்பப் பெற்றால், இந்தியா - பாக்., இணைந்து, கூட்டாக, பாசுமதிக்கான புவிசார் குறியீடு பெறலாம். அப்படி இல்லாத பட்சத்தில், புவிசார் குறியீடு யாருக்கும் கிடைக்காத நிலை ஏற்படும். இதை சீனா பயன்படுத்தி, பாகிஸ்தானிடம் இருந்து, பாசுமதி நெல்லை பெற்று, பயிர் செய்து, உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய காத்திருக்கிறது. இதற்காகவே, கென்யா, தான்சானியா, எத்தியோப்பியா மற்றும் கிழக்கு ஆப்ரிக்காவைச் சேர்ந்த சில நாடுகளில், பாசுமதி நெல் விளைவதற்கு ஏற்ற நிலங்களை, சீனா, வளைத்துப் போட்டுள்ளது. 'சீனா, குறைந்த விலையில் பாசுமதி அரிசியை ஏற்றுமதி செய்தால், இந்தியாவிற்கு தான் பாதிப்பு ஏற்படும்; ஏனெனில், பாசுமதி விளையும் பகுதியில், 95 சதவீதம், இந்தியாவிற்குள் உள்ளது' என, வேளாண் விஞ்ஞானி ஒருவர் தெரிவித்தார். அதனால், காஷ்மீர் பிரச்னையை தள்ளி வைத்து விட்டு, உடனடியாக, பாசுமதி அரிசியை காப்பாற்ற வேண்டிய பொறுப்பு, இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் உள்ளது. அதற்கு, மத்திய பிரதேசம், புவிசார் குறியீடு தொடர்பான விண்ணப்பத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டும். சட்டப்பூர்வ உரிமை:ஒரு குறிப்பிட்ட பகுதியில், முதன் முதலாக விளைவிக்கப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட பாரம்பரிய கலாசாரத்துடன் தொடர்புடைய

பொருளுக்கு, அந்த இடத்தை மையமாக வைத்து, புவிசார் குறியீடு வழங்கப்படுகிறது. இதனால், சட்ட பாதுகாப்பு கிடைக்கிறது. இந்த குறியீடு பெற்ற பொருளை பிறர் தயாரிக்கவோ, விற்பனை செய்யவோ கூடாது.

இந்தியாவில் புவிசார் குறியீடு வழங்கப்பட்ட பொருட்கள்:

* பனாரஸ் பட்டு
* டார்ஜிலிங் தேயிலை
* பாஷ்மினா சால்வை
* சந்தேரி பட்டு
* நீலகிரி தேயிலை
* மலபார் மிளகு
* நாக்பூர் ஆரஞ்சு
* காஞ்சிபுரம் பட்டு
* கூர்க் காபி
*அசாம் தேயிலை

## வடகிழக்கு பருவ மழை குறையுமா?

பெங்களூரு,: வடகிழக்கு பருவ மழை வழக்கத்தை விட அதிகமாக பொழியும்; குறைவாக பெய்யும் என, இரு மாறுபட்ட கருத்துகளால், பொதுமக்கள் மற்றும் விவசாயி களிடையே குழப்பம் ஏற்பட்டுள்ளது.இந்தாண்டு அக்டோபர், நாள்தோறும் வறண்டும், வெப்பம் அதிகரித்தும் காணப்படுகிறது.வழக்கமான, 29 டிகிரி செல்ஷியஸ் வெப்ப நிலை இருக்க வேண்டிய காலகட்டத்தில், 31.32 டிகிரி வெப்பம் சுட்டெரிக்கிறது.இந்திய வானிலை ஆய்வு மையம் (ஐ.எம்.டி.,) இயக்குனர் கீதா அக்னிஹோத்ரி கூறியதாவது:அக்டோபர், எப்போது மே, 2வது

மழை காலமாக கருதப்படும். அக்., 20ம் தேதி துவங்கும் வடகிழக்கு பருவமழை இம்முறை தாமதமாவதால், வடக்கிலிருந்து வீசும் காற்று, அடிமட்டத்தில் வீசுகிறது. வடமேற்கு காற்று தடைபட்டுள்ளது. பெங்களூரில் வெப்பமும், வறண்ட நிலையும் தொடர்ந்திருக்கும். நவம்பர் முதல் வாரம் வரை கூட நீடிக்கலாம். இதனால், இந்தாண்டு குளிர்காலம் மிகவும் பாதிக்கும். இதுபோன்ற சூழ்நிலை, ஏற்கனவே பல முறை ஏற்பட்டுள்ளது.இந்த பருவநிலை மாற்றத்தால், வடகிழக்கு பருவ மழையின் அளவு குறையக்கூடும்.இவ்வாறு அவர் கூறினார். சில தினங்களுக்கு முன், வடகிழக்கு பருவ மழை தாமதமானாலும், இந்த ஆண்டு அதிக அளவில் மழை பொழியும் என, தகவல் வெளியாகி இருந்தது. தற்போது, பருவ மழை குறையக் கூடும் என இயக்குனர் எச்சரித்து உள்ளார்.இதுபோன்ற மாறுபட்ட தகவல்களால் குழப்பம் ஏற்பட்டுள்ளது.இதற்கிடையில், விவசாய அறிவியல் பல்கலைக்கழக தலைவர் டாக்டர் சிவராமு கூறியதாவது:வழக்கமாக, தென்மேற்கு பருவமழை முடிந்தவுடன், 3வது வாரத்தில் வடகிழக்கு பருவ மழை துவங்கும். தற்போது பருவநிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது; ஆனால், விவசாயிகளின் பயிர் திட்டங்களில் மாற்றம் செய்யவில்லை. பெங்களூருவின் பருவ நிலையிலும் மாற்றத்தை கொண்டு வரும். கடந்த, 1990 முதல் இரு பருவ மழைகளுக்கும் இடையிலான இடைவெளி அகன்று வருகிறது.உலகளவில் ஏற்பட்டுஉள்ள வெப்ப மாறுத லும், கான்கிரீட் கட்டடங்கள் எண்ணிக்கை அதிகரித்ததுமே இதற்கு காரணம். மொத்தமாக பெய்யும் மழையின் அளவு வழக்கமானது தான் என்றாலும், பகிர்ந்தளித்து பெய்யும் மழை வித்தியாசமாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**மைசூரு மலர் கண்காட்சி 3 லட்சம் பேர் பார்வை**

மைசூரு, : "மைசூரு குப்பண்ணா பூங்காவில், இந்தாண்டு நடந்த, 10 நாள் மலர் கண்காட்சிக்கு, மூன்று லட்சம் பேர் வந்துள்ளனர்," என, தோட்டக்கலை துறை துணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி கூறினார். மைசூரு தசரா திருவிழாவை முன்னிட்டு, குப்பண்ணா பூங்காவில், அபூர்வமான மலர் கண்காட்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த, 10 நாள் கண்காட்சியில், ஹம்பி கல் தேர் போன்று மலர்களால் உருவாக்கப்பட்ட தேர், அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது. தோட்டக்கலை துறை துணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது:இந்தாண்டு மலர் கண்காட்சிக்கு, மூன்று லட்சம் பேர் வந்தனர். 2013ல், இரண்டு லட்சம் பேரும், 2014ல், 2.4 லட்சம் பேரும் வந்துள்ளனர். இந்தாண்டு, ஒரு சில நாட்களில், 35 ஆயிரம் பேருக்கு மேல் பார்வையாளர்கள் வந்தது, இதுவே முதல் முறை. குப்பண்ணா பூங்காவில் கடை அமைக்க விடப்பட்ட ஏலம் மற்றும் நுழைவு கட்டணம் மூலம், 51 லட்சம் ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. இதுவரை மைசூரில் நடத்திய மலர் கண்காட்சிகளிலேயே இந்தாண்டு தான், முதன் முதலாக அதிக வருவாய் கிடைத்துள்ளது. இந்த மலர் கண்காட்சியை ஏற்பாடு செய்ய தோட்டக்கலை துறை, 45 லட்சம் ரூபாய் செலவழித்தது. இவ்வாறு அவர் கூறினார்.

**கிலோவுக்கு ரூ.30 குறைந்தது துவரம் பருப்பு**

பதுக்கல் மீதான நடவடிக்கையை மத்திய அரசு தீவிரப்படுத்தி உள்ளதால், ஒரு வாரத்தில், துவரம் பருப்பு விலை, கிலோவுக்கு, 30 ரூபாய் வரை குறைந்துள்ளது. மற்ற பருப்பு வகைகளின் விலையும் குறைந்து வருகிறது.வட மாநிலங்களில் விளைச்சல் குறைவால், தமிழகத்திற்கு பருப்பு வரத்து குறைந்தது; பற்றாக்குறையால் விலை உயர்ந்தது. பெரு முதலாளிகள், பருப்பு வகைகளை பதுக்கினர்.எப்போதும் இல்லாத வகையில், துவரம் பருப்பு, ஒரு கிலோ, 210 ரூபாய்; பாக்கெட், 225 ரூபாய் வரை உயர்ந்து, மக்களை

திக்குமுக்காட வைத்தது. இதையடுத்து, பதுக்கல்காரர்கள் மீது மத்திய அரசு எடுத்த கடும் நடவடிக்கையால், 13 மாநிலங்களில், 75 ஆயிரம் டன் பருப்பு சிக்கியது.

| பருப்பு வகை | அக்., 22 | அக்., 28 |
|---|---|---|
| | (ஒரு கிலோ விலை ரூபாயில்) | |
| துவரம் பருப்பு | 210 | 180 |
| தான்சானியா | 170 | 150 |
| உளுத்தம் பருப்பு | 180 | 165 |
| பர்மா உளுந்து | 160 | 150 |
| பாசிப்பருப்பு | 140 | 125 |
| கடலை பருப்பு | 80 | 75 |

பருப்பு வகைகளை பதுக்கியோர், அவசர அவசரமாக சந்தைக்கு அனுப்பி வருவதால், ஒரு மூட்டை துவரம் பருப்பு, 20 ஆயிரம் ரூபாயில் இருந்து, 17 ஆயிரம் ரூபாயாகக் குறைந்துள்ளது; கிலோவுக்கு, 30 ரூபாய் குறைந்துள்ளது. மற்ற பருப்பு வகைகளின் விலையும் கிலோவுக்கு, 15 ரூபாய் வரை குறைந்துள்ளன.இதுகுறித்து தமிழ்நாடு மளிகை வியாபாரிகள் சங்கத் தலைவர் எஸ்.பி.சொரூபன் கூறியதாவது: பதுக்கல்காரர்கள் மீது மத்திய அரசு எடுக்கும் கடும் நடவடிக்கை தொடர்வதாலும், தமிழக அரசு, நவ., 1 முதல், ஒரு கிலோ, 110 ரூபாய்க்கு விற்க முயற்சிப்பதாலும், பயந்து போன பெரு நிறுவனங்கள், முடக்கி வைத்த பருப்பு மூட்டைகளை சந்தைக்கு அனுப்பி வருகின்றன. இதனால், விலை குறைந்து வருகிறது.தீபாவளிக்குள், துவரம் பருப்பு ஒரு கிலோ, 150 ரூபாய்க்குள் வரும். மற்ற பருப்பு வகைகளின் விலையும் கிலோவுக்கு, 20 ரூபாய் குறைய வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**கடைகளில் பருப்பு வகைகள்இருப்பு வைக்க கட்டுப்பாடு**

மொத்த விற்பனை மற்றும் சில்லரை விற்பனை வணிகர்கள், குறிப்பிட்ட

அளவில், பருப்பு வகைகளை இருப்பு வைக்க, உணவு துறை உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில், பருப்பு வகைகளின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இதுகுறித்து, சென்னை, சேப்பாக்கம் எழிலகத்தில், உணவு துறை அமைச்சர் காமராஜ், செயலர் சிவ்தாஸ் மீனா, உணவு வழங்கல் துறை ஆணையர் கோபாலகிருஷ்ணன் ஆகியோர், பருப்பு வணிகர் களுடன், நேற்று ஆலோசனை நடத்தினர். இதுகுறித்து, உணவு மற்றும் கூட்டுறவு துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: மாநகராட்சி பகுதிகளில் மொத்த வணிகர்கள், 2,500 குவின்டால் அனைத்து பருப்பு வகைகள்; சில்லரை வணிகர்கள், 62 குவின்டால் இருப்பு வைக்க அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. மற்ற பகுதிகளில், மொத்த வணிகர்கள், 1,250 குவின்டால்; சில்லரை வணிகர், 50 குவின்டால் இருப்பு வைக்க வேண்டும். மக்களை பாதிக்காத வகையில் குறைந்த விலையில், பருப்பு விற்பனை செய்ய ஒத்துழைப்பு வழங்குமாறு வணிகர்களிடம் கேட்டு கொள்ளப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

## குமரியில் தொடர்மழை: வெள்ள அபாயம்

நாகர்கோவில்:குமரி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக மாவட்டத்தின் அனைத்து அணைகளுமே முழு கொள்ளளவை எட்டிவருகின்றன. பெருஞ்சாணி, சிற்றாறு-1, சிற்றாறு-2 அணைகள் உச்ச அளவை நெருங்கியதால்கரையோர பகுதி மக்களுக்கு கடந்த வாரமே வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது. இந்நிலையில் 48 அடி கொள்ளளவு கொண்ட பேச்சிப்பாறை அணை நீர்மட்டம், நேற்று முன்தினம் மாலை 42 அடியை எட்டியது. வழக்கமாக அணை நீர்மட்டம் 42 அடி ஆனதும் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படும். அதன்படி, நேற்று வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது.கோதையாறு, குழித்துறை தாமிரபரணி ஆற்று பகுதிகளான திற்பரப்பு, திருவரம்பு, மூவாற்று முகம், திக்குறிச்சி, குழித்துறை, முஞ்சிறை பகுதிகளில் பொது

மக்களுக்கு தண்டோரா மூலமாக வெள்ள அபாய எச்சரிக்கை அறிவிக்கப்பட்டது. மலையோர பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணைகளுக்கு வரக்கூடிய நீர்வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் பொதுப்பணித்துறை அதிகாரிகள் அணைகளை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். கலெக்டர் சஜ்ன்சிங்சவான் நேற்று காலை பேச்சிப்பாறை அணையை ஆய்வு செய்தார். பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சுப்பிரமணியன் கூறியதாவது:பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு-1, சிற்றாறு-2 அணைகளின் நீர்மட்டம் உச்ச அளவை எட்டி வருகின்றன. இதனால் நான்கு அணைகளும் தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது. எந்த நேரத்திலும் அணை நிரம்ப வாய்ப்புள்ளது. அணையில் இருந்து உபரிநீர் வெளியேற்றுவதற்கும், அணையில் இருந்து தண்ணீர் திறப்பதற்கும் தயார் நிலையில் உள்ளோம். இதனால் கரையோர பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர், என்றார். மாணவர் பலி: மாவட்டத்தில் உள்ள 917 குளங்களில் 100 சதவீதம் நிரம்பின. 652 குளங்கள் 75 சதவீதமும், 273 குளங்கள் 50 சதவீதமும், 198 குளங்கள் 25 சதவீதமும் நிரம்பி உள்ளன. தொடர் மழையால் ரப்பர் பால் வெட்டும் தொழிலும், செங்கல் உற்பத்தியும் முழுமையாக ஸ்தம்பித்துள்ளன.கன மழை காரணமாக திற்பரப்பு அருவியில் வெள்ளம் ஆர்ப்பரித்து கொட்டி வருகிறது சுற்றுலா பயணி கள் ஆனந்த குளியலிட்டு வருகிறார்கள். குழித்துறை தாமிரபரணி ஆறு, வள்ளியாறு, பரளியாறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. பரளியாற்றில் குளிக்க சென்ற திருவனந்தபுரம் வட்டியூர்காவு பகுதியை சேர்ந்த மாணவர் அபிலாஷ் 20, தண்ணீரில் மூழ்கி இறந்தார்.

நெல்லை அணைகளுக்கு நீர் வரத்து

திருநெல்வேலி: திருநெல்வேலி மாவட்டத்தில் நேற்றுதுவங்கிய வடகிழக்கு பருவமழையின் தாக்கம் நெல்லை மாவட்டத்தில் தெரிந்தது.மாவட்டம் முழுவதும் நேற்று பலத்த மழை பெய்தது. பிற்பகல்

2 மணிக்கு பெய்யத்துவங்கிய மழை மாலை சிறிதுநேர இடைவெளிக்கு பிறகு, இரவிலும் தொடர்ந்தது. மழையினால் பாபநாசம், மணிமுத்தாறு உள்ளிட்ட அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளுக்கு கணிசமான அளவு நீர்வரத்து உள்ளது.

### 24 மணி நேரத்துக்கு கன மழை எச்சரிக்கை



சென்னை:தமிழகத்தில், நேற்று துவங்கிய வடகிழக்கு பருவமழை, தீவிரமடைந்து வருகிறது. 'கடலோர மாவட்டங்களில், அடுத்த, 24 மணி நேரத்துக்கு கனமழை பெய்யும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.இதுகுறித்து, வானிலை ஆய்வு மைய இயக்குனர் ரமணன், நேற்று காலை கூறியதாவது: வங்க கடலின் தென்மேற்கு பகுதியில், நிலை கொண்டுள்ள காற்று அழுத்த தாழ்வு நிலை அப்படியே தொடர்கிறது.இதையடுத்து, தமிழக கடலோர மாவட்டங்களில் மழை பெய்ய துவங்கி விட்டது. 'வடகிழக்கு பருவமழை துவங்கி விட்டது' என, அதிகாரப்பூர்வமாக அறிவிக்கிறோம். காற்று அழுத்த தாழ்வு நிலை தீவிரம் அடைவதால், அடுத்த, 24 மணி நேரத்துக்கு, தமிழக கடலோர பகுதிகளில் கன மழை பெய்யும்.பிற மாவட்டங்களில், ஒரு சில இடங்களில் மழை பெய்யும். சென்னையில், வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மழை அல்லது இடியுடன் கூடிய மழை, ஒரு சில இடங்களில் பெய்யும்.இவ்வாறு அவர் கூறினார்.நேற்று மாலை வரை

திருச்சி - 2.6; கடலூர் - 1.5; சென்னை, ராமேஸ்வரம் - 1.4; நாகப்பட்டினம் - 2 செ.மீ., மழை பதிவாகி உள்ளது என, 'ஸ்கைநெட்' என்ற தனியார் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கனமழை காரணமாக, கன்னியாகுமரியில், வெள்ள அபாய எச்சரிக்கை அறிவிக்கப்பட்டு உள்ளது.'மீனவர்கள் கடலுக்கு செல்ல வேண்டாம்' என, எச்சரிக்கப்பட்டு உள்ளனர்.புயலாக மாறுமா: வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்று அழுத்த தாழ்வு நிலை, புயலாக மாறி, தமிழகத்தை தாக்கும் நிலையில், மிக கடுமையான மழை பெய்யும். ஆனால், தற்போது நிலை கொண்டுள்ள காற்று அழுத்த தாழ்வு நிலை, புயலாக மாற வாய்ப்பு குறைவு என, வானிலை ஆய்வு மையம் கூறுகிறது. மையத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், 'வங்க கடலின் தென்மேற்கு பகுதியில் நிலை கொண்டுள்ள, காற்றழுத்த தாழ்வு நிலை, அப்படியே தொடரும் என்றே தெரிகிறது. புயலாக மாற வாய்ப்பு மிகவும் குறைவாக உள்ளது. இந்நிலை அப்படியே தொடருமானால், தமிழகத்தின் கடலோர மாவட்டங்கள் மற்றும் பிற மாவட்டங்களில், மிதமான மழை பரவலாக பெய்யும்' என்றார். நீர் மின் நிலையங்களில் 24 மணி நேர உற்பத்தி: தமிழ்நாடு மின் வாரியத்திற்கு, நீலகிரி மாவட்டம் - குந்தா; கோவை - காடம்பாறை, ஈரோடு, நெல்லையில், 2,288 மெகா வாட் திறன் உடைய, 44 நீர் மின் நிலையங்கள் உள்ளன.தற்போது, வடகிழக்கு பருவ மழை துவங்கி உள்ளதால், நீர் மின் நிலையங்களில், முழு அளவில் உற்பத்தி செய்வது குறித்து, சென்னை,மின் வாரிய அலுவலகத்தில், மின் உற்பத்தி இயக்குனர் சிவபிரகாசம், நேற்று ஆய்வு கூட்டம் நடத்தினார். இதில், நீர் மின் நிலைய அதிகாரிகள் பங்கேற்றனர்.இதுகுறித்து, அதிகாரிகள் கூறியதாவது: தற்போது, அணைகளுக்கு தண்ணீர் வரத்து நன்கு உள்ளது. எனவே, 24 மணி நேரமும், மின் உற்பத்தி செய்ய

பொறியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு உள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**கருவேலம் காடாகிய நீர் நிலைகளால் ஆபத்து! தாழ்வான பகுதிகளில் மழைநீர் சூழும்**



கடலூர்: மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான நீர் நிலைகள் பராமரிப்பின்றி கருவேலங்காடுகளாக மாறி வருவதால் துவங்கியுள்ள வடகிழக்கு பருவமழை காலத்தில் கிடைக்கும் மழை நீரை சேமிக்க முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளதோடு, கனமழை பெய்தால் மழைநீர் வடிய வழியின்றி பெரும் பாதிப்பு ஏற்படும் ஆபத்து நிலவி வருகிறது.

கடலோரத்தில் அமைந்துள்ள கடலூர் மாவட்டத்தில் விவசாயமே பிரதான தொழிலாக உள்ளது. மாவட்டத்தில் 7.5 லட்சம் ஏக்கர் பரப்பளவில் விவசாயம் செய்யப்படுகிறது. இதில் 2 லட்சம் ஏக்கர் விளை நிலங்கள் ஆறுகள், ஏரி மற்றும் குளங்கள் மூலம் பாசன வசதி பெற்று வருகிறது.பிற விளை நிலங்கள் அனைத்தும் ஆழ்குழாய் மூலமே பாசன வசதி பெற்று வருகின்றன.இதன் காரணமாகவும், மாவட்டத்தில் மக்கள் தொகை பெருக்கம் காரணமாகவும் நிலத்திடி நீரை பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது.

மாவட்டத்தின் விவசாய தேவைக்காக மழை நீரை சேமித்து வைத்து, கோடை காலத்தில் பயன்படுத்தும் வகையில் பொதுப்பணித்துறை பராமரிப்பில் வீராணம், பெருமாள், வெலிங்டன் மற்றும் வாலாஜா போன்ற பெரிய ஏரிகள் உட்பட 229 நீர் நிலைகளும், ஊராட்சி நிர்வாகங்களின் கீழ் 674 குளம், குட்டைகள் உள்ளன. இவைத் தவிர வருவாய் மற்றும் கோவில் குளங்களும் உள்ளன.

இந்த நீர் நிலைகளுக்கு மழை நீரைக் கொண்டு வரவும், நிரம்பினால் உபரி நீரை வெளியேற்றி வேறு நீர் நிலையை நிரப்பும் வகையில் கால்வாய் வசதிகளை நமது முன்னோர்கள் ஏற்படுத்தி வைத்துள்ளனர். நீர் நிலைகளையும், நீர் வரத்து வாய்க்கால்களையும் நமது முன்னோர்கள் ஆண்டிற்கு ஒருமுறை (கோடை காலத்தில்) துார் வாரி ஆழப்படுத்தி சுத்தம் செய்து வைத்தனர். காலப்போக்கில் இந்த மராமத்து பணியை அரசும், விவசாயிகளும் மறந்துவிட்டனர். இதனால், பெரும்பாலான நீர் நிலைகளும், நீர் வரத்து வாய்க்கால்களும் துார்ந்து விட்டதோடு, கருவேலம் காடுகளாக மாறியுள்ளது.

இதனால், மாவட்டத்தில் நேற்று முன்தினம் துவங்கியுள்ள வடகிழக்கு பருவமழையில் கிடைக்கும் நீரை, நீர் நிலைகளில் சேமிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அப்படியே சேரும் மழை நீரையும், நீர் நிலைகளில் அடர்ந்து வளர்ந்துள்ள கருவேல மரங்கள் உறிஞ்சிவிடும் என்பதால், மழை நீர் வீணாகும் ஆபத்து உள்ளது.

மாவட்டத்தில் முக்கிய ஆறுகளான பெண்ணையாறு, கெடிலம், மணிமுக்தாறு, வெள்ளாறு மற்றும் பாசன வடிகால் வாய்க்கால்கள் துார்ந்தும், கருவேலம் மரங்கள் அடர்ந்தும் வளர்ந்துள்ளதால், கனமழை பெய்தால் மழைநீர் வழிந்தோட வழியின்றி அருகாமையில் உள்ள தாழ்வான பகுதிகளில் மழைநீர் சூழும் ஆபத்து உள்ளது. எதிர்வரும் ஆபத்தை உணர்ந்து மாவட்ட நிர்வாகம் இனியேனும் நீர் நிலைகள்,

பாசன மற்றும் வடிகால் வாய்க்கால்களில் உள்ள கருவேல மரங்களை அகற்றிட விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பழைய ஆயக்கட்டுக்கு தண்ணீர் தேவை! அமராவதி விவசாயிகள் முறையீடு



திருப்பூர் : "நாற்றங்காலில் உள்ள நாற்றுக்களை, 20 நாட்களுக்குள் நடவு செய்ய வேண்டியிருப்பதால், பழைய ஆயக்கட்டு வாய்க்காலில், 300 கன அடி தண்ணீர் வழங்க வேண்டும்' என, அமராவதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைகேட்பு கூட்டம், திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது; கலெக்டர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார். நேர்முக உதவியாளர் (வேளாண்) அல்தாப் வரவேற்றார். வேளாண் துறை இணை இயக்குனர் (பொ) மகேந்திரன்,

கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் குமார் முன்னிலை வகித்தனர். கோரிக்கைகளை வலியுறுத்தி, விவசாயிகள் பேசினர்.

அமராவதி நதிநீர் பாசன பாதுகாப்பு இயக்க பொது செயலாளர் லிங்கம் சின்னசாமி: தென்னை விவசாயிகள், அரசு காப்பீடு திட்டத்தில் நிவாரணம் பெற முடியவில்லை. காங்கயம் காளைகளை அபிவிருத்தி செய்ய உத்தரவிட வேண்டும். தாராபுரம் பகுதியில் கூடுதலாக, இரண்டு தடுப்பணை அமைக்க வேண்டும்.

உழவர் உழைப்பாளர் கட்சி மாவட்ட செயலாளர் ஈஸ்வரமூர்த்தி: அமராவதி தண்ணீரை நம்பி, தாராபுரம் நான்கு வாய்க்கால் பகுதியில் உள்ள விவசாயிகள், நெல் நாற்று தயாரித்துள்ளனர். விரைவில், நடவு பணி துவங்க வேண்டியுள்ளது. பழைய ஆயக்கட்டு பகுதியில் உள்ள கீழ்வாய்க்காலில், 10 நாள் இடைவெளியில் தண்ணீர் விட்டால் மட்டுமே, நெல் சாகுபடி நடக்கும். நாற்றங்காலில் உள்ள நாற்றுக்களை, 20 நாட்களில் நடவு செய்தாக வேண்டும். எனவே, 300 கன அடி அளவுக்கு, பழைய ஆயக்கட்டுக்கு தண்ணீர் வழங்க வேண்டும். கூட்டுறவு தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் வழங்கிய மக்காச்சோள விதை, காலாவதியாகி இருந்ததால், முளைப்பு திறன் குறைந்து நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்க தலைவர் நல்லசாமி: கீழ்பவானி பகுதியில், 18 ஆயிரம் ஏக்கர் நிலத்தில், நெல் சாகுபடி நடக்க இருப்பதால், விரைந்து தண்ணீர் வழங்க வேண்டும். கலப்பட எண்ணெய் தயாரிப்பதாக புகார் வந்துள்ளதால், தீவிர ஆய்வு நடத்த வேண்டும்.

பி.ஏ.பி., திட்ட பகிர்மான குழு முன்னாள் தலைவர் கோபால்: கண்டியன் கோவில் பகுதியில், மும்முனை மின் இணைப்பு வழங்க வேண்டுமென, நீண்ட நாட்களாக வலியுறுத்தி வருகிறோம். மும்முனை இணைப்பு

வழங்குவதாக கூறி, சில கட்சியினர், தலா, 500 ரூபாய் வீதம் வசூலித்து வருகின்றனர். மின்வாரியம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்க தலைவர் துரைசாமி: தனியார் உரக்கடைகளில், "பொட்டாஸ் - 50' கிலோ, 760 ரூபாய்க்கு கிடைக்கிறது. தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில், 800 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. விவசாயிகளுக்கு குறைந்த விலையில் உரம் வழங்க வேண்டும்.இவ்வாறு, விவசாயிகள் கூறினர்.

கலெக்டர் பேசுகையில்,""வடகிழக்கு பருவமழை விரைவில் துவங்குமென அறிவிக்கப்பட்டுள்ளதால், அணைகளின் நீர் நிர்வாகத்தில் பிரச்னை இருக்காது. தாராபுரம் பகுதியில் கூடுதல் தடுப்பணை அமைக்க பரிசீலிக்கப்படும். தாராபுரம் பழைய ஆயக்கட்டுக்கு தண்ணீர் திறப்பது குறித்து, அதிகாரிகளிடம் ஆலோசித்து முடிவெடுக்கப்படும். மும்முனை இணைப்பு வழங்க வசூல் நடப்பது குறித்து மின்வாரியம் விசாரிக்க வேண்டும். விவசாயிகளின் கோரிக்கைகளை பரிசீலித்து, விரைவில் அந்தந்த துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.

## கேரள வாடல் நோயால் தென்னைக்கு ஆபத்து! நடவடிக்கை எடுக்க வலியுறுத்தல்

பொள்ளாச்சி: 'கேரள வாடல் நோயால், தமிழக எல்லையில் தென்னைகள் அழியும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக புகார் கூறும் விவசாயிகள், தடுக்க தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, விவசாயிகள் வேண்டு கோள் விடுத்தனர். பொள்ளாச்சி சப் - கலெக்டர் அலுவலகத்தில் மாதாந்திர விவசாயிகள் குறைதீர் கூட்டம் நேற்று நடந்தது. சப் - கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜெகடே தலைமை வகித்தார். ராமபட்டணம் விவசாயிகள்: கிராமத்தை ஒட்டியுள்ள வாய்க்காலை தூர்வாரி, 50 எக்டர் விளை

நிலங்கள் பாசனம் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். தரமற்றதாக மாறிவரும் தாவளம் ரோட்டை தார்ரோடாக மாற்ற வேண்டும்.

ஆழியார் பாசனத்திட்ட விவசாயிகள் சங்கத்தலைவர் சின்னச்சாமி: பொள்ளாச்சி பகுதியில், 85 சதவீதம் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தென்னையில் இருந்து கிடைக்கும்

இளநீரை விற்பனை செய்வதற்காக திப்பம்பட்டியில் இளநீர் ஏலமையம் திறக்கப்பட்டது. ஆனாலும், விவசாயிகள் இம்மையத்துக்கு இளநீரை கொண்டு வருவதில்லை. அப்படியே கொண்டு வந்தாலும் விலை கிடைப்பதில்லை.

இம்மையத்துக்கு விவசாயிகளை வரவழைக்க, மரத்திலிருந்து இளநீரை இறக்கும் கூலியும், போக்குவரத்து செலவும் வழங்கிட வேண்டும். மேலும், வியாபாரிகளை ஏலமையத்துக்கு வரவழைக்க வேண்டும். தென்னையில் வாடல் நோய் தாக்குதல்: கேரளாவை ஒட்டியுள்ள, பொள்ளாச்சியின் மேற்குப்பகுதியில் கேரள வாடல் நோயால் தென்னைகள் அழிந்து வருகின்றன. இதை கட்டுப்படுத்தும் மருந்துகளை வேளாண் அதிகாரிகள் பரிந்துரைக்க வேண்டும். தவிர, உயரமான மரங்களில் மருந்து தெளிக்க கருவிகள், மருந்துகளை மானிய விலையில் வழங்கிட வேண்டும்.

கேரள வாடல் நோய் குறித்து தென்னை சாகுபடியாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, கட்டுப்படுத்தும் முறைகளை தெரிவிக்க வேண்டும். பாசனத்துக்காக ஆழியார் அணையில் இருந்து வழக்கமாக, 60 நாட்கள் தண்ணீர் விட வேண்டும். ஆனால், தற்போது, 34 நாட்கள் மட்டுமே தண்ணீர் திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது, முழுமையான சாகுபடிக்கு உதவாது. எனவே, 60 நாட்கள் தண்ணீர் விட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனைமலைப்பகுதியில் பாசனத்துக்காக உள்ள ஐந்து கிளை வாய்க்கால்கள் துார்வாரப்படாமல் புதர்மண்டிக்கிடக்கிறது. துார்வாரவும் விவசாயிகளே செலவு செய்து வருகின்றனர். ஊரக வேலைவாய்ப்பு திட்ட பணியாளர்களைக்கொண்டு, இவ்வாய்க்கால்களை துார்வார நடவடிக்கை எடுக்க வேண்டும். திப்பம்பட்டி ஆறுச்சாமி: பொள்ளாச்சி பகுதியில் விவசாய நிலங்களில் செம்மண் வெட்டி, கடத்தப்படுவது அதிகரித்துள்ளது. தவிர, அரசு வேலைகளுக்காக ஒப்பந்ததாரர்கள் புறம்போக்கு நிலங்களில் செம்மண் வெட்டி எடுத்து பயன்படுத்துகின்றனர். இதை தடுக்க வேண்டும்.

பட்டீஸ்வரன்: ஆனைமலை யில் ஆற்றுநீரில் கழிவு நீர் கலப்பது அதிகரித்துள்ளது. ஆனைமலையின் கழிவுகள், கோவில்களின் கழிவுகள் பாசன நீரில் கலப்பது தொடர்கிறது. இதை தடுக்க அதிகாரிகள் நடவடிக்கை இல்லை. ஆற்றில் படித்துறை இல்லாததால் பக்தர்கள் குளிப்பதில் சிரமம் உள்ளது. வயதானவர்கள் விபத்தில் சிக்குகின்றனர். எனவே, ஆற்றங்கரையில் படித்துறை அமைக்க வேண்டும்.

## மீன்பிடி உரிமம் குத்தகைக்கு விட முடிவு: மேட்டூர் அணை மீனவர்கள் சோகம்

மேட்டூர்: கடந்த, பிப்.,12ல் நடக்க இருந்த ஏலம் ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், மீண்டும் மேட்டூர் அணை மீன்பிடி உரிமத்தை ஏலம் விட, மீன்வளத்துறை முடிவு செய்துள்ளது.

மேட்டூர் அணை, 152 சதுர கி.மீ., நீர்பரப்பு பகுதியை கொண்டது. சுற்றுப்பகுதியில், 72 கிராமத்தை சேர்ந்த, 2,000 மீனவர்கள் அணையில், 50 ஆண்டுகளுக்கும் மேலாக மீன்பிடிக்கின்றனர். தினமும் அதிகபட்சமாக, ஒரு டன் மீன் பிடிபடுகிறது. அணையில், ஐந்து ஆண்டு மீன்பிடிக்கும் உரிமத்தை தனியாருக்கு குத்தகைக்கு விட மீன்துறை முடிவு செய்தது. இதற்காக, கடந்த பிப்.,12ம் தேதி சென்னையில் ஏலம் நடக்க

இருந்தது. மீன்பிடி உரிமத்தை குத்தகைக்கு விடக்கூடாது என, மேட்டூர் அணை மீனவர் நல பாதுகாப்பு சங்கம் சார்பில் கடந்த ஜன.,27 ம் தேதி உயர்நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்ட நிலையில், கடந்த பிப்.,12 ம் தேதி நடக்க இருந்த ஏலமும் ஒத்தி வைக்கப்பட்டது. ஏலம் நடக்காததால் மேட்டூர் அணை மீனவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். இந்நிலையில், சேலம் மாவட்டம், மேட்டூர் அணை, ஆணைமடுவு, கோவை மாவட்டம் பில்லூர், கடலூர் மாவட்டம், வீராணம் உள்பட, மாநிலம் முழுவதும், 17 நீர்த்தேக்கங்களில் மீன்பிடிக்கும் உரிமத்தை பொது ஏலம் நடத்தி, ஐந்து ஆண்டு தனியாருக்கு குத்தகைக்கு விட மீன்வளத்துறை முடிவு செய்துள்ளது. மேலும், மேட்டூர் அணையில் மீன்பிடிக்கும் உரிமத்தை குத்தகைக்கு எடுக்க விரும்புவோர், நவ.,16ம் தேதிக்குள் டெண்டர் போட வேண்டும் என மீன்வளத்துறை அறிவித்துள்ளது.

### வேளாண் சாகுபடி விழிப்புணர்வு முகாம்

தலைவாசல்: பெரம்பலூர், ரோவர் வேளாண் கல்லூரி மாணவியர், தலைவாசல் அருகே, வீரகனூர் மற்றும் காட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் முகாமிட்டு, வேளாண் சாகுபடி குறித்து, விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தனர். தெடாவூர் புதூர் கிராமத்தில், கால்நடை விழிப்புணர்வு மற்றும் நோய் தடுப்பு, ஆடு, மாடுகளுக்கு செயற்கை முறை கருவூட்டல், சினை பரிசோதனை, மலடு நீக்கம், ஆண்மை நீக்கம், தடுப்பூசி போடுதல் குறித்த முகாம் நடந்தது. வீரகனூரில் முகாமிட்டுள்ள, மாணவியருக்கு, கால்நடை பராமரிப்பு, நோய் தடுப்பு முறைகள் குறித்து, கால்நடை டாக்டர் வினோத், செயல் விளக்கம் அளித்தார். காட்டுக்கோட்டை கிராமத்தில், ஐக்கிய விவசாயிகள் சங்க, மாநில தலைவர் வையாபுரி தலைமையில், இயற்கை முறை சாகுபடி குறித்து கூட்டம் நடந்தது. இதில் மாணவியருக்கு, மண் புழு உரம், கால்நடை

கழிவு உரம் பயன்பாடு குறித்து எடுத்துரைக்கப்பட்டது. வேளாண் தொழில் நுட்ப சாகுபடி குறித்து, மாணவியர், விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தனர்.

### மேட்டூர் கால்வாய் பாசன நீர் நிறுத்தம்

மேட்டூர்: பாசன பகுதியில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்ததால், மேட்டூர் கால்வாயில் நேற்று மாலை, 5 மணிக்கு தண்ணீர் நிறுத்தப்பட்டது. மேட்டூர் அணையில் இருந்து மேட்டூர் கிழக்கு,மேற்கு கால்வாயில் கடந்த ஆக.,20ம் தேதி முதல், பாசனத்துக்கு நீர்திறக்கப்பட்டது. இதன் மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு மாவட்டத்தில், 45 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. பாசன பகுதியில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்ததால், மேட்டூர் கிழக்கு, மேற்கு கால்வாயில் நேற்று மாலை, 5 மணிக்கு தண்ணீர் நிறுத்தப்பட்டது. தண்ணீர் படிப்படியாக குறைந்ததால், நேற்று மாலை மேட்டூர், காவேரி கிராஸ், செக்கானூர் பகுதியில் கரையோர மக்கள் கால்வாயில் இறங்கி மீன்பிடித்தனர்.

### மழைநீர் வீணாவதை தடுக்க கோரிக்கை

நாமக்கல்: நாமக்கல் மாவட்டத்தில், மழைநீர் வீணாவதை தடுக்க, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை துவங்கி உள்ள நிலையில், நேற்று முன்தினம், நாமக்கல், மோகனூரில், கனமழையும், ராசிபுரம், ப.வேலூர் பகுதியில் லேசான மழையும் பெய்தது. அதேபோல் நேற்று மதியம், நாமக்கல், பள்ளிபாளையம், குமாரபாளையம், ப.வேலூர் என, மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. இந்த மழை, மேலும் நீடிக்கும் என்பதால், விவசாயிகள் தங்களது விளை நிலங்களில், உழவு பணியை தீவிரப்படுத்தி உள்ளனர். குறிப்பாக, பல்வேறு இடங்களில் நாற்று நடவு செய்யும் பணி

முடிக்கிவிடப்பட்டுள்ளது. வடகிழக்கு பருவமழை குறிப்பிட்ட அளவுக்கு மேல் பெய்யும் என, எதிர்பார்க்கப்படுகிறது. அதன் மூலம், ஏரி, குளம், குட்டைகளில் நீர் நிரம்பி, நிலத்தடி நீர்மட்டம் உயர்வதுடன், கிணறுகளில் தண்ணீர் இருப்பு அதிகரிக்கவும் வாய்ப்பு உள்ளதாக விவசாயிகள் நம்பிக்கையில் உள்ளனர். 'பருவமழையை பயன்படுத்தி, மழைநீர் வீணாவதை தடுக்க, ஆங்காங்கே உள்ள ஏரி, குளம், குட்டைகளில் திருப்பி, சேமித்து வைக்க, மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்பதே, பல்வேறு தரப்பினரின் எதிர்பார்ப்பு.

## மாடியில் அதிகரிக்கும் காய்கறி தோட்டம்

கூடலூர்: கூடலூர் அருகே, மாடி தோட்டத்தில், வீட்டுக்கு தேவையான காற்கறியை, இயற்கை விவசாயம் மூலம் உற்பத்தி செய்வது அதிகரித்து வருகிறது.

கூடலூர் பகுதிகளில், வீட்டுக்கு தேவையான காய்கறிகள், தோட்டங்களில் இயற்கை முறையில் உற்பத்தி செய்வது கடந்த காலங்களில் இருந்து வந்தது. தற்போது, இயற்கை விவசாயமும் மறைந்து, காய்கறி உற்பத்தியும் குறைந்து வருகிறது.

இந்நிலையில், இப்பகுதியில் உள்ள சில மாடிகள், இயற்கை காய்கறியை உற்பத்தி செய்யும் தோட்டங்களாக மாறி வருகின்றனர். குடும்ப தலைவிகள் பலர், விவசாயத்தில் ஆர்வத்துடன் களம் இறங்கி உள்ளனர். இதில், சளிவயல் பகுதியில் ஒரு வீட்டின் மாடியில் காய்கறி தோட்டத்தை உருவாக்கி உள்ள, வல்சா கூறுகையில்,“வீட்டு தோட்டத்தில், முதன் முதலாக, பிளாஸ்டிக் பைகளில் பயிரிடப்பட்ட தக்காளி உள்ளிட்ட செடிகளில் அதிக மகசூல் கிடைத்து வருகிறது.

அடுத்த முயற்சியாக, காய்கறி தோட்டத்தை உருவாக்கி உள்ளோம். வீட்டில் உள்ள பெண்கள் முயற்சித்தால், ஓய்வு நேரத்தில் இம்முறையில்

வீட்டுக்கு தேவையான காய்கறிகளை தாங்களே உற்பத்தி செய்ய முடியும்," என்றார்.

## தேயிலை வாரியம் எச்சரிக்கை, விவசாயிகளை வட்டமிடும் இடைத்தரகர்கள்

மஞ்சூர்: 'தேயிலை வாரியத்தால் வழங்கப்படும், சலுகைகளை பெற, சிறு விவசாயிகள் இடைத்தரகர்களை நம்ப வேண்டாம்' என, தேயிலை வாரியம் அறிவுறுத்தி உள்ளது. நீலகிரி மாவட்டத்தில், குன்னூர், கோத்தகிரி, கூடலூர், குந்தா உள்ளிட்ட நான்கு இடங்களில் தேயிலை வாரிய அலுவலகம் செயல்பட்டு வருகிறது. தேயிலை வாரியம் சிறு விவசாயிகளுக்கு தேவையான உதவிகளை செய்து வருகிறது.

### சலுகைகள்

தேயிலை வாரியத்தால் சிறு விவசாயிகளுக்கு, புது நடவு திட்டம், நீர் பாசன திட்டம், தேயிலை சிறப்பு அபிவிருத்தி திட்டம், மாற்று பயிர் நடவு திட்டம், புனரமைப்பு கவாத்து திட்டம், தாழ்த்தப்பட்ட சிறு தேயிலை விவசாயிகளுக்கான சிறப்பு திட்டம், ஸ்மார்ட் கார்ட் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களுக்கான சலுகைகளை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### இடைதரகர் ஆதிக்கம்

தேயிலை வாரியத்தில் பெறப்படும் இத்தகைய சலுகைகளுக்கு, தக்க ஆவணங்களை சமர்பிக்க வேண்டிய அவசியம் உள்ளது. இதை தொடர்ந்து, இடைத்தரகர்கள், சிறு விவசாயிகளின் வீடுகளுக்கு நேரடியாக சென்று, 'அனைத்து ஆவணங்களை சரி செய்வதாகவும், அதற்குண்டான பணத்தை கொடுத்தால், தேயிலை வாரிய அதிகாரிகளை சந்தித்து, அதற்கான சலுகைகளை பெற்று தருகிறோம்' எனக்கூறி, வருவதாக, வாரியத்துக்கு புகார் வந்துள்ளது. குறிப்பாக, குந்தா பகுதியில் இடைத்தரகர்களிடம் சிலர் ஏமாந்து பணமும் கொடுத்துள்ளனர்.

### யாரையும் நம்ப வேண்டாம்

தேயிலை வாரிய செயல் இயக்குனர் பால்ராசு கூறுகையில், "தேயிலை வாரியம் விவசாயிகளுக்கு பல்வேறு சலுகைகள் அளித்து வருகிறது. சலுகைகளை பெற விரும்பும் விவசாயிகள், அந்தந்த பகுதியில் உள்ள தேயிலை வாரிய அலுவலகத்தை அணுக வேண்டும். விவசாயிகளுக்கு தேவையான விளக்கங்களை அங்குள்ள அதிகாரிகள் அளிக்கின்றனர். சில இடங்களில் இடைத்தரகர்கள் சுற்றி வருவதாக புகார் வந்துள்ளது. இடைத்தரகர்களை நம்பி விவசாயிகள் ஏமாற வேண்டாம். ஏமாறினால் தேயிலை வாரியம் பொறுப்பல்ல. எந்த சந்தேகம் இருந்தாலும் தேயிலை வாரியத்தை அணுக வேண்டும்," என்றார்.

### மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

க.பரமத்தி: க.பரமத்தி ஒன்றியம் பகுதியில், 50 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாயம் நடக்கிறது. இதில் பெரும்பாலும் மானாவாரி விவசாய நிலமாக உள்ளது.கடந்த, பத்தாண்டுகளுக்கு முன்பு பருவமழை பொய்த்ததால், கால்நடைகளுக்கு தீவனமின்றி, விவசாயிகள் விலைக்கு வாங்கி வந்தனர். இதனால் மிகவும் சிரமப்பட்டனர். இந்தாண்டு தென்மேற்கு பருவமழை ஓரளவிற்கு பெய்ததை நம்பி, இப்பகுதி விவசாயிகள் கம்பு, சோளம், கேழ்வரகு, மற்றும் பயிரு வகை போன்ற மானாவாரி பயிர்களை விதைத்தனர். இவை தற்போது பூக்கும் தருணம் எட்டியுள்ள நிலையில், கடந்த, 15 நாட்களாக மழையில்லாமல் வாடி வந்தது. இந்நிலையில் க.பரமத்தி பகுதியில் நேற்று மதியம் திடீரென, 5 மணி நேரம் பெய்தது. பருவ மழை துவங்கியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### அடர் நடவு முறையில் லாபம் பெற ஆலோசனை

திண்டுக்கல்:திண்டுக்கல்லில் விவசாயிகள் அத்ர் நடவு முறையில் பயிர்களை பயிரிட்டு லாபம் பெறலாம் என தோட்டக்கலை துணை இயக்குனர் ராமநாதன் கூறினார்.அவர் கூறியதாவது: தென்னை வளர்க்கும் விவசாயிகள் தென்னையில் ஊடுபயிராக அடர் நடவு முறையில் "கொக்கோ'வை பயிரிடலாம். இது தென்னைக்கு ஏற்ற ஊடுபயிர் என்பதால் 3 முதல் 45 ஆண்டுகள் வரை பயனளிக்கும். ஒரு ஏக்கரில் பயிரிட்டால் ஆண்டுக்கு ரூ.20 ஆயிரத்திற்கும் கூடுதலாக லாபம் பெறலாம். இதுபோல, "மா'வில் அடர் நடவு முறையில் அல்போன்சா, பங்கனபள்ளி ரகங்களை பயிரிட்டு சாகுபடி செய்வதின் மூலமும் லாபம் பெறலாம். இந்த நடவு முறையில் "கவாத்து' செய்வது அவசியம். இதன் மூலம் பயிர் நன்கு செழித்து வளரும். இம்முறைகளை விவசாயிகள் பின்பற்றி வருமானத்தை பெருக்கலாம், என்றார்.

## தாண்டிக்குடி பகுதியில் கனமழை

தாண்டிக்குடி:தாண்டிக்குடி மற்றும் அதனைச்சுற்றியுள்ள மலைப்பகுதியில் நேற்று மாலை கனமழை பெய்தது.காலை முதலே வானம் மேகமூட்டத்துடன், குளிர் காற்று வீசியது. மதியம் சுட்டெரிக்கும் வெயில் நீடித்த நிலையில் மாலை 4 மணிக்கு சாரல் பெய்தது. தொடர்ந்து ஒரு மணி நேரம் தடியன்குடிசை, மணலூர் உள்ளிட்ட பல்வேறு பகுதியில் கனமழை பெய்தது. நேற்று துவங்கிய வடகிழக்கு பருவமழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து புதிய நாற்றுக்கள் நடவு செய்ய ஆயத்த பணிகளில் மும்முரம் காட்டி வருகின்றனர்.

## டிச.5 உலக மண்வள தினம் மத்திய அரசு அறிவிப்பு

திண்டுக்கல், :"இந்தியா முழுவதும் டிச., 5 ம் தேதி உலக மண்வள தினமாக கடைபிடிக்கப்படும்' என, மத்திய அரசு அறிவித்துள்ளது.விவசாயிகள் பயிர் விளைச்சலின் போது மண்ணிற்கு தேவையான ஊட்டச்சத்துக்களை இடுதல் அவசியம். மண்ணின் தன்மைக்கு ஏற்ப எந்த வகையான ஊட்டச்சத்துக்களை இடுவது என

விவசாயிகளுக்கு தெரிவதில்லை. இதனால் போதிய விளைச்சல் கிடைக்காமல் போகிறது. இதனை தடுக்க மண்மாதிரி சோதனை செய்யும் திட்டத்தை தமிழக அரசு கொண்டுவந்தது. இதனை பின்பற்றி பிற மாநிலங்களிலும் இச்சோதனையை செய்தனர். முதன் முதலில் தேசிய மண்வள அட்டை இயக்கத்தை பிரதமர் நரேந்திர மோடி கடந்த பிப்.,19ல் ராஜஸ்தான் மாநிலத்தில் துவக்கி வைத்தார். இந்த ஆண்டு முதல் டிச.5ம் தேதி நாடு முழுவதும் உலக மண்வள தினமாக கடைபிடிக்க மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. திண்டுக்கல் வேளாண் இணை இயக்குனர் சம்பத்குமார், தரக்கட்டுப்பாடு உதவி இயக்குனர் ரவிச்சந்திரன், வேளாண் அலுவலர் முத்துகுமார் கூறியதாவது: திண்டுக்கல்லில் பல்வேறு பகுதிகளில் 10 ஆயிரத்து 240 மண்மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டன. வரும் டிச., 5ம்தேதி உலக மண்வள தேதிக்குள் 40 ஆயிரத்து 240 மண்வள அட்டைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது, என்றனர்.

## தரிசு நிலத்தில் வருவாய் அளிக்கும் "லெமன் கிராஸ்'

தாண்டிக்குடி:தரிசு நிலத்தில் பராமரிப்பின்றி வருவாய் அளிக்கும் லெமன் கிராஸ் சாகுபடியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.தாண்டிக்குடி மலைப்பகுதியில் எலுமிச்சை வாசனை அளிக்கும் புல் அதிகளவு கரடு, சரிவான வனப்பகுதியில் உள்ளது. இவ்வகை புல் மண் அரிப்பு, நீர் சேமிப்பிற்கு உதவியாக உள்ளது. லெமன் கிராஸ் எனறழைக்கப்படும் இவற்றை "தரகு' என்றும் கூறுவர். இவற்றிலிருந்து எடுக்கப்படும் சிட்ரோனால், சிட்நூல், ஜெரேனியா எண்ணெய் அழகு சாதனப் பொருட்கள் பயன்பாட்டில் முக்கிய பங்கு வகிக்கிறது. விவசாயப்பயிர்களுக்கு பூஞ்சாண கொல்லியாகவும் பத்ன்படுகிறது. இவற்றின் இலையை சிறிதளவு தேனீருக்கு பயன்படுத்துவதால் உடலில் சுறுசுறுப்பும், நோய் எதிர்ப்பு அதிகரிக்க உதவுகிறது. வீடுகளில் கொசு விரட்டியாகவும் பயன்படுகிறது. வருசநாடு மலைப்பகுதியில் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு விவசாயிகள் நடவு செய்து எண்ணெய் எடுத்து

விற்பனை செய்தனர். காலப்போக்கில் இதன்பயன்பாட்டை தவிர்த்து விட்டப்படியால் வனப்பகுதி கரடுகளில் இவற்றை காண முடிகிறது. ஒரு ஏக்கர் தரிசு நிலத்தில் மானாவாரியாக இவ்வகை புல்லை நடவு செய்தால் ஆண்டுக்கு எண்ணெய் மூலம் ரூ. ஒன்றரை லட்சம் வரை லாபம் ஈட்டலாம் என தோட்டக்கலை ஆராய்ச்சி நிலை விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். குறைவாக உள்ள இவ்வகை புல் மூலம் கிடைக்கும் எண்ணெய்க்கு வெளிநாடுகளில் மவுசு உள்ளது. தரிசு நிலத்தில் லாபம் ஈட்டும் இவ்வகை புல்லை நடவு செய்ய இனி மேலாவது விவசாயிகள் முயற்சிக்கலாம்.

**பகலில் மேகமூட்டம்: மாலையில் குளிர்**

கொடைக்கானல்: கொடைக்கானலில் மாறிய சீதோஷ்ண நிலையால், மாலை நேரங்களில் குளிர் வாட்டி எடுப்பதால், சுற்றுலா பயணிகள் அறைக்குள் முடங்கி கிடக்கின்றனர். ஆயுதபூஜை விடுமுறைக்கு பின் சுற்றுலா பயணிகள் கூட்டம் குறைந்துள்ளது. காலை நேரங்களில் பல இடங்களில் மேகமூட்டத்துடன், ரம்மியமான சூழ்நிலை இருந்தாலும் மாலையில் விரைவாகவே குளிர் வாட்டுகிறது. இருசக்கர வாகனங்களில் செல்லும் பொதுமக்கள் பாதுகாப்பாக ஸ்வெட்டர், ஜெர்கின் போன்றவற்றை அணிந்து செல்கின்றனர். சில்லென்று வீசுகின்ற குளிரை ரசித்த வண்ணம் சுற்றுலாபயணிகள் செல்கின்றனர். மாலை நேரங்களில் விரைவாகவே அறைக்கு திரும்புகின்றனர். அறைகளுக்குள் ஹீட்டரை பயன்படுத்தி குளிரை போக்குகின்றனர். டிசம்பர் மாதங்களில் காலை, மாலை, நேரங்களில் பனி நிலவும். புல்வெளி பகுதிகளில் பனி படர்ந்து காணப்படும். தற்போது அக்டோபர் மாத இறுதியில் பனி குளிர் நிலவு கின்றது. மாறிய சீதோஷ்ண நிலையால் பலர் மருத்துவ மனைகளுக்கு சென்று சிகிச்சை பெறுகின்றனர்.

**மாணவர்களுக்கு மரக்கன்று வழங்கல்**

சாணார்பட்டி,:சாணார்பட்டி அருகே கோ. அய்யாபட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளி மாணவர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.இங்கு முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் பிறந்த நாள் "இளைஞர் எழுச்சிநாள்' விழாவாக கொண்டாடப் பட்டது. தலைமை ஆசிரியர் வின்செண்ட் பால்ராஜ் தலைமை வகித்தார். ஆசிரியை கிளாரா ரோஸ்லின் மேரி வரவேற்றார். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் பரிசு பெற்றனர். பள்ளி வளாகத்தினுள் நடுவதற்கு 50 மரக்கன்றுகளும், மாணவர்கள் வீடுகளில் வளர்ப்பதற்கு 150 மரக்கன்றுகளும் வழங்கப்பட்டது. ஆசிரியர்கள் அமலதாஸ், காளியப்பன், கிரிஜாபாய், சந்தோசராணி அப்துல்கலாம் குறித்து பேசினர். ஆசிரியை கேத்தரின் அனிதாபாய் நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார்.

## செண்டு பூ விலை சரிவு நத்தம் விவசாயிகள் கவலை

நத்தம், :நத்தம் பகுதியில் செண்டுமல்லி பூ விலை ஒரே வாரத்தில் கிலோவிற்கு ரூ.90 வரை சரிவடைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். நத்தம் வட்டாரத்தில் செந்துறை, மணக்காட்டூர், குடகிபட்டி, மேற்கிபட்டி, பிள்ளையார்நத்தம், கோட்டைப்பட்டி, கருத்தழகன்பட்டி, அய்யனார்புரம் பகுதிகளில் அதிக அளவில் விவசாயிகள் செண்டு பூ சாகுபடி செய்கின்றனர். நடவு செய்ததில் இருந்து 90 நாட்களுக்குள் பூக்கத் துவங்கும். செழிப்பான தண்ணீர் பாசனம் இருந்தால் தொடர்ந்து இரண்டு மாதங்களுக்கு குறையாமல் பலன் தரும். இப்பகுதியில் விளையும் பூக்கள் பெரும்பாலும் நத்தம் மற்றும் மதுரை மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு வாரத்திற்கு முன்பு முகூர்த்த நாட்கள், சரஸ்வதி பூஜை போன்ற பண்டிகைகள் இருந்தது. இதனால் கடந்த வாரத்தில் கிலோ ரூ.120 வரை விற்பனையான செண்டு பூ விலை நேற்று சரிவடைந்து ரூ.30க்கு விற்றது. விலை குறைவால் ஏற்படும் நஷ்டத்தை நினைத்து விவசாயிகள் கவலை

அடைந்துள்ளனர். இதனால் அறுவடை செய்யாமல் பூக்களை செடியிலேயே விடும் நிலை ஏற்பட்டுள்ளது. அடுத்து வர இருக்கும் "புனிதவெள்ளி' பண்டிகை சமயத்தில் மீண்டும் விலை உயராதா என்ற ஏக்கத்துடன் விவசாயிகள் உள்ளனர்.

**தேனியில் பருப்பு பதுக்கலை தடுக்க 4 குடோன்களில் அதிகாரிகள் "ரெய்டு'**

தேனி, :பருப்பு பதுக்கலை தடுக்க தேனியில் மாவட்ட வழங்கல் அதிகாரிகள், உணவு கடத்தல் தடுப்பு பிரிவு அதிகாரிகள் "ரெய்டு' நடத்தினர்.நாடு முழுவதும் பருப்பு பதுக்கலை தடுக்க, அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். தேனியில் உள்ள வியாபாரிகள் வடமாநிலங்களில் இருந்து பருப்பு வகைகளை கொள்முதல் செய்து, தமிழகத்தின் பிற மாவட்டங்களுக்கும், கேரளா மற்றும் இலங்கைக்கும் அனுப்பி வருகின்றனர். இந்நிலையில், தேனியில் பருப்பு பதுக்கலை தடுக்க மாவட்ட வழங்கல் அலுவலர் பேபி தலைமையில் அலுவலர்கள் மற்றும் உணவு கடத்தல் தடுப்பு பிரிவு போலீசார் இணைந்து 4 குடோனர்களில் "ரெய்டு' நடத்தினர். அரசு அனுமதியுடன் உளுந்து, துவரை, பாசிப்பருப்பு உட்பட அனைத்து வகை பருப்புகளையும் 10 டன் வரை இருப்பு வைத்துக் கொள்ளலாம். அதற்கு மேல் இருப்பு இருந்தால் பருப்புகள் பறிமுதல் செய்யப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். அதிகாரிகள் சோதனையை தொடர்ந்து தேனியில் நேற்று மொத்த மார்க்கெட்டில் பருப்பு விலை குறைந்து காணப்பட்டது. உளுந்து கிலோ 160 க்கும், துவரம் பருப்பு 175 க்கும், பாசிப்பருப்பு 115 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. இதேபோல் எண்ணெய், பயறு, மசாலா வகைகளின் விலைகளும் குறைந்திருந்தன. மாவட்டம் முழுவதும் இருந்து வந்திருந்த சில்லரை வியாபாரிகள் அதிகளவு பருப்பு வகைகளை கொள்முதல் செய்தனர்.

## தாண்டிக்குடியில் பலத்த மழை

தாண்டிக்குடி, :தாண்டிக்குடி மற்றும் அதனைச்சுற்றியுள்ள மலைப்பகுதியில் நேற்று மாலை கனமழை பெய்தது.காலை முதலே வானம் மேகமூட்டத்துடன், குளிர் காற்று வீசியது. மதியம் சுட்டெரிக்கும் வெயில் நீடித்த நிலையில் மாலை 4 மணிக்கு சாரல் பெய்தது. தொடர்ந்து ஒரு மணி நேரம் தடியன்குடிசை, மணலூர் உள்ளிட்ட பல்வேறு பகுதியில் கனமழை பெய்தது. நேற்று துவங்கிய வடகிழக்கு பருவமழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்து புதிய நாற்றுக்கள் நடவு செய்ய ஆயத்த பணிகளில் மும்முரம் காட்டி வருகின்றனர்.

## திராட்சை ஏற்றுமதியை ஊக்குவிக்க தோட்டக்கலைத்துறை முயற்சி

தேனி, :கம்பம் பகுதியில் விளையும் திராட்சையை அதிகளவில் ஏற்றுமதி செய்ய தோட்ட கலைத்துறை அதிகாரிகள் முயற்சி எடுத்து வருகிறார்கள்.தேனி மாவட்டத்தில் கம்பம், கூடலூர், சுருளிப்பட்டி, காமயகவுண்டன்பட்டி, ராயப்பன்பட்டி, உத்தமபாளையம், சின்னமனூர், ஓடைப்பட்டி, காமாட்சிபுரம் உள்ளிட்ட பகுதியில் தரம் வாய்ந்த திராட்சை சாகுபடி நடக்கிறது. இந்த திராட்சைக்கு உரிய விலை இல்லாமலும், விற்பனை வாய்ப்பு இல்லாமலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். எனவே திராட்சை விவசாயிகளுக்கும் ஏற்றுமதி வாய்ப்புகளை உருவாக்கித்தர, தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் முயற்சி எடுத்து வரு கிறார்கள். இதற்காக புனேயில் உள்ள திராட்சை ஆராய்ச்சி மையத்தின் மூலம் வெளிநாட்டு வியாபாரிகளுடன் தேனி மாவட்ட தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தொடர்பு கொண்டு வருகின்றனர்.

**நீரின்றி காயும் நெல் நாற்றாங்கால்கள் மஞ்சளாறு அணை திறக்க வேண்டும்: விவசாயிகள் கோரிக்கை.**

தேவதானப்பட்டி, :மஞ்சளார் அணையில் இருந்து முதல்போக நெல் சாகுபடிக்கு நீர் திறப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால், நெல் நாற்றாங்கால்கள் நீரின்றி காய்ந்து வருவதாகவும், அணையை திறக்க கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் விவசாயிகள் கூறியுள்ளனர். தேனி மாவட்டம், தேவதானப்பட்டி அருகே உள்ள மஞ்சளார் அணையின் மொத்த உயரம் 57 அடி. மேற்குத்தொடர்ச்சி மலையில் உள்ள வரட்டாறு, மஞ்சளாறு, மூலாறு, தலையாறு ஆகிய நீர்பிடிப்பு பகுதியில் பெய்யும் மழைநீர் மஞ்சளாறு அணைக்கு வருகிறது. இதன் மூலம் திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் உள்ள புதிய மற்றும் பழைய ஆயக்கட்டு பகுதியான 5,200 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இம்மாத துவக்கத்தில் அணையின் நீர்பிடிப்பு பகுதியில் பெய்த கனமழையால் அணை நிரம்பியது. தற்போது அணையில் 56.80 அடிநீர் உள்ளது. அணைக்கு 176 கன அடிநீர் வரத்து உள்ளது. அணையில் இருந்து கடந்த 20 நாட்களாக 176 கன அடிநீர் ஆற்றில் வெளியேற்றப்படுகிறது. ஆண்டுதோறும் அக்., 15 க்கு பிறகு முதல் போக நெல் சாகுபடிக்காக அணை திறக்கப்படும். ஆனால் இந்த ஆண்டு அக்டோபர் மாதம் முடியும் நிலையிலும் அணை திறப்பதற்கான வாய்ப்புகள் தெரியவில்லை. இந்த அணை நீரை நம்பி எருமலைநாயக்கன் பட்டி, டி.வாடிப்பட்டி, புல்லக்காபட்டி, தேவதானப்பட்டி பகுதி விவசாயிகள் நெல் நாற்றாங்கால் பணியை மேற்கொண்டனர். தற்போது நெல் நாற்றுகள் நடவுக்கு தயாராக நிலையில் உள்ளது. அணை திறக்காததால் நீரின்றி நாற்றாங்கால்களில் நாற்றுகள் காய்ந்து வருகின்றன. எனவே தாமதம் இன்றி மஞ்சளார் அணையில் இருந்து முதல் போக நெல்சாகுபடிக்கு தண்ணீர் திறக்க,

கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரியுள்ளனர்.

பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்,"முதல் போக நெல் சாகுபடிக்கு அணையில் இருந்து தண்ணீர் திறக்க அனுமதி கேட்டு அரசுக்கு பரிந்துரை செய்துள்ளோம். உத்தரவு கிடைத்தவுடன் அணை திறக்கப்படும்,' என்றார்.

**வயல்களில் களைக்கொல்லி மருந்து தெளிக்க விசைத் தெளிப்பான்களை சரிசெய்யும் விவசாயிகள்**

ராமநாதபுரம்: ராமநாதபுரத்தில் விவசாயப்பணிகள் துவங்கியதால் விசைத்தெளிப்பான் கருவிகள் பழுதுபார்க்கப்பட்டு வருகின்றன. ராமநாதபுரம் மாவட்டத்தில் 1,66,392 எக்டேர் பரப்பில் விவசாயப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் 1,28,196 எக்டேர் பரபில் நெல், 2,717 எக்டேரில் சோளம், 889 எக்டேரில் கம்பு, 1,448 எக்டேரில் கேழ்வரகு, 2,733 எக்டேரில் பருத்தி, 6,112 எக்டேரில் நிலக் கடலை, 16,292 எக்டேரில் மிளகாய், 1,636 எக்டேரில் எள், 231 எக்டேரில் கரும்பு, 145 எக்டேரில் வாழை, 1,748 எக்டேரில் மல்லி, 512 எக்டேரில் சிறு தானியங்கள் பயிரிடப்படுகின்றன. மாவட்டத்தில் 2.25 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு விதை பெருக்கு திட்டத்தின் கீழ் நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்து பயிர்கள் மற்றும் வேளாண் இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன. நடப்பாண்டு பருவமழை துவங்கி யதையடுத்து மாவட்டத்தின் பல இடங்களில் தற்போது விவசாயப் பணிகள் தீவிரமடைந்துள்ளன. ஒரு மாத பயிராக உள்ள நெற்பயிரில் களை எடுக்கும் பருவம் தற்போது துவங்கியுள்ளது. இதனால் விவசாயிகள் தங்களிடம் உள்ள விசைத் தெளிப் பான்களை பழுதுபார்க்க துவங்கி உள்ளனர். கடந்த ஒரு வாரமாக தினமும் 25க்கும் மேற்பட்ட விசைத் தெளிப் பான்களை பழுது நீக்கி களைக்கொல்லி மருந்து தெளிப்பில்

பயன்படுத்தி வருகின்றனர். காரேந்தலைச் சேர்ந்த விவசாயி ஒருவர் கூறுகையில்,"" புதிய விசைத் தெளிப்பான் வாங்க ரூ.5 ஆயிரம் தேவைப் படுகிறது. இதனால் ஏற்கனவே உள்ள விசைத்தெளிப்பானை சரி செய்து பயன் படுத்தி வருகிறோம். நெல், மிளகாய் விதைப்பு செய்துள்ளோம். மழையை எதிர்பார்த்துள்ள எங்களுக்கு உரிய நேரத்தில் உரம் வழங்க மாவட்ட நிர்வாகம் நட வடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.

## பனை விதை நடவு

ராமநாதபுரம்: இருமேனி அலைகாத்தவலசை கடற்கரையில் ரூரல் வொர்க்கர்ஸ் டெவலப்மென்ட் சொசைட்டி சார்பில் பனைவிதை நடும் விழா நடந்தது.

அதன் இயக்குனர் சாத்தையா தலைமை வகித்தார். ஊராட்சித்தலைவர் செல்வம் முன்னிலை வகித்தார். திட்ட ஒருங்கிணைப்பாளர் கனகவள்ளி வரவேற்றார். வார்டு உறுப்பினர் சேகர், ஊராட்சி செயலர் ராஜேந்திரன் பங்கேற்றனர். வட்டார ஒருங்கிணைப்பாளர் ராசாத்தி நன்றி கூறினார். கடற்கரையில் 5 ஆயிரம் பனை விதைகள் நடவு செய்யப்பட்டன.

## விலை குறையாத துவரம் பருப்பு விருதுநகரில் மக்கள் பாதிப்பு

விருதுநகர்: அரசின் நடவடிக்கையால் துவரம் பருப்பு விலை குறைந்த நிலையில் ,விருதுநகரில் பெரும்பாலான கடைகளில் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.210க்கு விற்கப்படுவதால் மக்கள் பாதிக்கின்றனர்.

வடமாநில உற்பத்தி குறைவு, பதுக்கல் காரணமாக கடந்த சிலவாரங்களாக துவரம் பருப்பு விலை அதிகரித்தது. இதனால் மக்கள் பாதிக்கப்பட்டனர். பதுக்கலுக்கு எதிரான மத்திய அரசு நடவடிக்கை காரணமாக இந்தவார துவக்கத்தில் 100 கிலோ துவரம் பருப்பு மூடை 21,000 ரூபாயில் இருந்து 3,000 ரூபாய் குறைந்து 18,000 ரூபாய்க்கு விற்கப்பட்டது. அதன்படி ஒருகிலோ துவரம் பருப்பு 180 ரூபாய்க்கு

விற்கப்பட வேண்டும். ஆனால் விருதுநகரில் பெரும்பாலான கடைகளில் கிலோ 200, 210 ரூபாய் என விற்கப்படுகிறது. விலைகுறைவு குறித்து கேட்டால் கடை உரிமையாளர்கள் சரியான பதில் கூறுவதில்லை . சில கடைகளில் விலை உயர்வுக்கு முன்புள்ள பருப்புகளின் விலை குறிப்பு மேல் புதிய விலையை குறிப்பிட்டு விற்கின்றனர். இதனால் பொதுமக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். மக்கள் பாதிப்பைத்தடுக்க இது போன்ற கடைகளில் ஆய்வு மேற்கொண்டு பதுக்கல் பருப்புகளை கூடுதல் விலைக்கு விற்கும் கடைகளை கண்டறிந்து கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

## நெல்லையில் பலத்தமழை அணைகளுக்கு நீர் வரத்து

திருநெல்வேலி: நெல்லையில் நேற்று பலத்த மழை பெய்தது. திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாகவே அவ்வப்போது மழை பெய்துவந்தது.

இந்நிலையில் வானிலை மைய அறிவிப்பின்படி நேற்று துவங்கிய வடகிழக்கு பருவமழையின் தாக்கம் நெல்லை மாவட்டத்தில் தெரிந்தது. மாவட்டம் முழுவதும் நேற்று பலத்த மழை பெய்தது. பிற்பகல் 2 மணிக்கு பெய்யத்துவங்கிய மழை மாலை சிறிதுநேர இடைவெளிக்கு பிறகு

இரவிலும் தொடர்ந்தது. மழையினால் பாபநாசம், மணிமுத்தாறு உள்ளிட்ட அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளுக்கு கணிசமான அளவு நீர்வரத்து உள்ளது.

## குமரியில் தொடர்மழையால் நிரம்புகிறது அணைகள் தாழ்வான பகுதிகளில் வெள்ள அபாய எச்சரிக்கை

நாகர்கோவில்: குமரி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழை காரணமாக மாவட்டத்தின் அனைத்து அணைகளுமே அதன் முழு கொள்ளளவை எட்டிப்பிடித்துக்கொண்டிருக்கிறது. இதனால் அணை

மற்றும் ஆற்றின் தாழ்வான பகுதிகளில் வாழும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பெருஞ்சாணி, சிற்றாறு-1, சிற்றாறு-2 அணைகள் உச்ச அளவை நெருங்கியதால் கரையோர பகுதி மக்களுக்கு கடந்த வாரமே வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டிருந்தது. இந்நிலையில் 48 அடி கொள்ளளவு கொண்ட பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் நேற்று முன்தினம் மாலை 42 அடியை எட்டியது. வழக்கமாக அணை நீர்மட்டம் 42 அடி ஆனதும் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படுவது வழக்கம். அதன்படி நேற்று வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது.

கோதையாறு, குழித்துறை தாமிரபரணி ஆற்று பகுதிகளான திற்பரப்பு, திருவரம்பு, மூவாற்று முகம், திக்குறிச்சி, குழித்துறை, முஞ்சிறை பகுதிகளில் பொது மக்களுக்கு தண்டோரா மூலமாக வெள்ள அபாய எச்சரிக்கை அறிவிக்கப்பட்டது. மலையோர பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணைகளுக்கு வரக்கூடிய நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் பொதுப்பணித்துறை அதிகாரிகள் அணைகளை தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். கலெக்டர் சஜ்ன்சிங்சவான் நேற்று காலை பேச்சிப்பாறை அணையை ஆய்வு செய்தார்.

இது குறித்து பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சுப்பிரமணியன் கூறியதாவது:

பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு-1, சிற்றாறு-2 அணைகளின் நீர்மட்டம் உச்ச அளவை எட்டி வருகிறது. இதனால் நான்கு அணைகளும் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது. எந்த நேரத்திலும் அணை நிரம்ப வாய்ப்புள்ளது. அணையில் இருந்து உபரிநீர் வெளியேற்றுவதற்கும், அணையில் இருந்து தண்ணீர் திறப்பதற்கும் தயார் நிலையில் உள்ளோம். இதனால் கரையோர பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

மாவட்டத்தில் உள்ள 917 குளங்களில் 100 சதவீதம் தண்ணீர் நிரம்பி உள்ளன. 652 குளங்கள் 75 சதவீதமும், 273 குளங்கள் 50 சதவீதமும், 198 குளங்கள் 25 சதவீதமும் நிரம்பி உள்ளன. தொர் மழையால் ரப்பர் பால் வெட்டும் தொழிலும், செங்கல் உற்பத்தியும் முழுமையாக ஸ்தம்பித்துள்ளது.

கன மழை காரணமாக திற்பரப்பு அருவியில் வெள்ளம் ஆர்ப்பரித்து கொட்டி வருகிறது சுற்றுலா பயணிகள் ஆனந்த குளியலிட்டு வருகிறார்கள். குழித்துறை தாமிரபரணி ஆறு, வள்ளியாறு, பரளியாறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. பரளியாற்றில் குளிக்க சென்ற திருவனந்தபுரம் வட்டியூர்காவு பகுதியை சேர்ந்த மாணவன் அபிலாஷ் 20, தண்ணீரில் மூழ்கி இறந்தார்.

**பேச்சிப்பாறை அணை 42 அடியை எட்டியது கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை**

நாகர்கோவில்: கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் அணைகளில் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. பெருஞ்சாணி மற்றும் சிற்றாறு ஒன்று மற்றும் இரண்டு அணைகள் நிரம்பி விட்டதால் அதன் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் 48 அடி கொள்ளளவு கொண்ட பேச்சிபாறை அணை 42 அடியை எட்டியுள்ளது. இந்த அணையில் 42 அடி தண்ணீர் நிரம்பியதும் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படுவது வாடிக்கை. அதன் அடிப்படையில் நேற்று பேச்சிப்பாறை அடிவார மக்களுக்கும், குழித்துறையாற்று கரையோர மக்களுக்கும் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அØணியை 24 மணி நேரமும் அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## மானாவாரி நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பம்



மானாவாரி சாகுபடியில், தொழில்நுட்பங்களை முறையாகப் பின்பற்றி நிலக்கடலை சாகுபடி செய்தால், அதிக மகசூலும் கூடுதல் லாபமும் பெறலாம் என, வேளாண் துறை அறிவுறுத்தியுள்ளது.

நிலம் தயாரித்தல்: மணற்பாங்கான வண்டல், செம்மண், கருவண்டல் நிலங்கள் ஏற்றவை. சட்டிக் கலப்பையைப் பயன்படுத்தி உழுத பின்னர் 3

அல்லது 4 முறை இரும்புக் கலப்பை அல்லது நாட்டுக் கலப்பையால் கட்டிகள் நன்கு உடையும் வரை உழவேண்டும். குறைந்த ஆழத்தில் மண் கடின அடுக்கு உடைய நிலத்தை உளிக் கலப்பையால் 50 செமீ இடைவெளியில் ஒரு திசையில் உழவேண்டும். பின்னர் நேர் எதிர் திசையில் உழவேண்டும். இவ்வாறு 3 ஆண்டுக்கு ஒருமுறை செய்யவேண்டும். பின்னர் 12.5 டன் தொழு உரம் அல்லது நன்கு மக்கிய தென்னை நார்க்கழிவு இடவேண்டும். மண் கடின அடுக்கைத் திருத்த 2 டன் சுண்ணாம்புடன் தொழு உரம் நன்கு மக்கிய தென்னை நார்க்கழிவு 12.5 டன் என்ற அளவில் ஒரு ஹெக்டேருக்கு இடவேண்டும்.

பாத்தி: நீர் அளவு, நீர், மண்ணின் வகையைப் பொருத்து 10 சதுர மீட்டர் வரை பாத்தி அமைக்கவேண்டும். டிராக்டரை உபயோகப்படுத்தினால் பாத்தி அமைப்பானைப் பயன்படுத்தலாம். அல்லது 60 செமீ இடைவெளியில் வரப்புகள் அமைத்து இடையில் வாய்க்கால் அமைக்கவும் மற்றும் வரப்புகளின் இரண்டு பகுதியிலும் விதைக்கவும். அல்லது 60 செ.மீ அகலத்துக்கு படுக்கை அமைக்கவும் மற்றும் 15 செமீ அளவுக்கு வாய்க்கால் அமைக்கவும். படுக்கைகளின் இரண்டு பகுதிகளிலும் விதைக்க வேண்டும்.

உரம்: மண் பரிசோதனை அடிப்படையில் தழை, மணி, சாம்பல் சத்துகள் இடவேண்டும். மண் பரிசோதனை செய்யாவிட்டால் மானாவாரி நிலத்துக்கு 10: 10: 45 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து தரும் ரசாயன உரங்கள் இடவேண்டும். வேளாண் துறையால் பரிந்துரைக்கப்பட்ட நுண்ணூட்டச்சத்து கலவை 12.5 கிலோவுடன் உலர்ந்த மணலைப் பயன்படுத்தி 50 கிலோவாக தயாரித்து விதைத்தவுடன் மண் பரப்பில் தூவவேண்டும். நுண்ணூட்டக் கலவையை மண்ணுடன் ஒன்றாக சேர்க்கக்கூடாது.

துத்தநாகக் குறைபாடு: இலைப் பரப்பில் லேசான மஞ்சள் நிறக் கோடுகள் தோன்றும் முதிர்ந்த நிலையில் பச்சைப் பற்றாக்குறை,

நுனிமொட்டு வளர்வது தடைபடும். துத்தநாகம் குறைவாக உள்ள மண்ணுக்கு ஹெக்டேருக்கு 25 கிலோ துத்தநாக சல்பேட் இடவேண்டும்.

இரும்பு குறைபாடு: நரம்புகளுக்கிடையே பச்சையக் குறைவு, நுனி, வளர்ச்சி குறையும். இதைப் போக்க இரும்பு சல்பேட் கரைசலை விதைத்த 30, 50ஆவது நாளில் தெளிக்கவேண்டும்.

போரான் குறைபாடு: இளம் இலைகளில் வளர்ச்சி தடைப்பட்டு குட்டையான புதர் அமைப்பு தரும். காய் வளர்ச்சி பாதிக்கப்படும்; விதையில்லாக் காய் தரும். 10 கிலோ போராக்ஸ், 200 கிலோ ஜிப்சம் விதைத்த 45ஆவது நாளில் இடவேண்டும்.

கந்தகக் குறைபாடு: குன்றிய வளர்ச்சி, ஒரே மாதிரி பச்சையக் குறைபாடுள்ள தாவரங்கள் சன்னமான தண்டு, வரை போன்ற அமைப்பு ஆகியவை கந்தகக் குறைபாட்டின் அறிகுறி.

விதையளவு: ஹெக்டேருக்கு 120 கிலோ பருப்பு போதும். தடிமன் விதையாக இருந்தால் ஹெக்டேருக்கு 175 கிலோ தேவை.

இடைவெளி: செடிகளின் வரிசைகளுக்கிடையே 30 செ.மீட்டரும், செடிகளுக்கிடையே 10 செ.மீட்டரும் இருக்கவேண்டும். வளை தேமல் நோய் பரவிய இடங்களில் 15-க்கு 15 செமீ என்ற இடைவெளி தேவை.

விதைநேர்த்தி: ஒரு கிலோ விதையுடன் 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடியைக் கலக்கவும். இதை விதைக்கும் முன் (சற்று முன்னர்) செய்யவேண்டும். இது உயிர் உரங்களுடன் கலக்க ஏதுவானது. இவ்வாறு நேர்த்தி செய்யப்பட்ட விதைகளை பூஞ்சாணக் கொல்லிகளுடன் கலக்கக்கூடாது. விதைகளை திரம் அல்லது மாங்கோசெப்புடன் ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவிலோ அல்லது கார்பாக்சின், கார்பென்டாசிமுடன் ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவிலோ அல்லது கார்பென்டாசிமுடன் ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் என்ற அளவிலோ கலக்கவும். விதைகளை எ.டின்.யு. 14 ரைசோபியம் (600 கிலோ- ஹெக்டேர்) உடன் கஞ்சி விதை நேர்த்தி

செய்யப்படாவிட்டால், 2 கிராம் ரைசோபியத்துடன் 25 கிலோ எரு, 25 கிலோ மணலுடன் கலந்து விதைக்க வேண்டும்.

களை மேலாண்மை: களை முளைப்பதற்கு முன்: ஃப்ளுகுளோரலின் 2 லிட்டரை 900 லிட்டர் தண்ணீரில் கலந்து தட்டை விசிறி நுண்குழாய் மூலம் அளிக்க வேண்டும். தொடர்ந்து நீர்ப் பாய்ச்ச வேண்டும். 35 முதல் 40 நாள்களுக்கு பிறகு கைக்களை எடுக்க வேண்டும். களைக்கொல்லி பயன்படுத்தவில்லையென்றால் 20, 40ஆவது நாளில் 2 கைக்களை, மண்வெட்டியால் களையெடுக்க வேண்டும். 2ஆவது கைக்களை எடுத்த பின்பு மண் அணைக்க வேண்டும்.

ஜிப்சம் இடுதல்: ஒரு ஹெக்டேருக்கு 400 கிலோ வீதம் 75வது நாளில் மானாவாரிப் பயிருக்கு செடிகளின் ஓரமாக மண்ணின் ஈரத்தன்மையைப் பொருத்து இடவேண்டும். மண்ணைக் கொத்தி ஜிப்சம் இட்டு மண் அணைக்கவேண்டும். கால்சியம், கந்தகக் குறைபாடுள்ள நிலங்களில் ஜிப்சம் இடுதல் நல்ல பலன் தரும். ஜிப்சத்தின் மொத்த அளவில் பாதியை ரசாயன உரங்களுடன் அடியுரமாக மானாவாரி, இறவைப் பயிரில் நூற்புழுக்களால் ஏற்படும் காளஹஸ்தி மெலடி மற்றும் நிலக்கடலையில் உண்டாகும் சொறி போன்ற பாதிப்புகளைக் குறைக்க முடியும்.

ஊட்டச்சத்து கலவை தெளிப்பு: பெரிய பருப்பு ரகங்களில் காய்களின் பருப்பின் வளர்ச்சி குறைபாடு என்பது ஒரு பெரிய இடர்பாடு ஆகும். தவிர்த்து நல்ல வளர்ச்சியடைந்த முழுமையான பருப்புகளைப் பெற பல ஊட்டச்சத்துகளை கலந்து தெளிக்கவெண்டும். இக்கலவையைத் தயாரிக்க டி.ஏ.பி 2.5 கிலோ, அம்மோனியம் சல்பேட் 1 கிலோ மற்றும் போராக்ஸ் (வெண்சுரம்) 0.5 கிலோவை 37 லிட்டர் தண்ணீரில் ஒன்றாகக் கலந்து ஓரிரவு முழுவதும் வைத்திருக்கவேண்டும். மறுநாள் காலை இந்தக் கலவையை வடிகட்டினால் 32 லிட்டர் வரை தெளிந்த ஊட்டச்சத்து நீர் கிடைக்கும். இதை 468 லிட்டர் தண்ணீருடன் சேர்த்து 500 லிட்டர் அளவில் சுமார் 25 மற்றும் 35ஆவது நாளில் தெளிக்கவேண்டும்.

அறுவடை: முதிர்ந்த இலைகள் காய்ந்துவிடுதல் மற்றும் மேல்மட்ட இலைகள் மஞ்சளாவதும் முதிர்ச்சியைக் குறிக்கும். கால அளவைப் பொருத்து பயிரைக் கண்காணித்து, தோராயமாக ஒருசில செடிகளைப் பிடுங்கி காய்களை உரிக்கவேண்டும். ஓட்டின் உள்புறம் வெள்ளையாக இல்லாமல் பழுப்பு கலந்த கருப்பு நிறத்தில் இருந்தால், அது முதிர்ச்சி நிலையைக் குறிக்கிறது. அறுவடைக்கு முன் நீர்ப்பாய்ச்ச வேண்டும். காய்ந்த நிலம் சுலபமாக அறுவடைக்கு உதவுகிறது. மண்ணில் போதுமான ஈரப்பதம் இருப்பின் அறுவடைக்குமுன் நீர்பாய்ச்சத் தேவையில்லை. அறுவடைக்கு முந்தைய பாசனத்துக்கு நீர் இல்லையெனில் நாட்டுக் கலப்பையைப் பயன்படுத்தி செடிகளைப் பிடுங்கி ஆள்களைக் கொண்டு மண்ணிலுள்ள காய்களைச் சேமிக்கவேண்டும்.

பிடுங்கப்பட்ட செடிகளைக் குவியலாக வைக்கக்கூடாது. ஏனெனில் ஈரமாக உள்ளபோது, குறிப்பாகக் கொத்து ரகங்கள் முளைக்கத் தொடங்கும். செடிகளிலிருந்து காய்களைப் பிரிக்க நிலக்கடலை பிரிப்பானைப் பயன்படுத்தலாம். காய்களை 4 அல்லது 5 நாள்வரை வெயிலில் உலர்த்தவேண்டும். 2 அல்லது 3 நாள் இடைவெளியில் 2 அல்லது 3 நாள் காயவைப்பது முழுவதுமான காய்தலுக்கு உதவும். வெப்பநிலை அதிகமாக இருக்கும்போது நேரடியாக வெயிலில் காயவைப்பதைத் தவிர்க்க வேண்டும். காய்களைக் கோணிப்பைகளில் கட்டி மணற்பரப்பின் மீது சேகரித்து வைக்கலாம். காய்ந்த காய்களுக்கு ஈரப்பதம் வருவதைத் தவிர்க்க வேண்டும்.

## குளிர்காலத்தில் நல்ல மகசூல் தரும் பட்டாணி!



விவசாயிகள் குளிர்காலத்தில் நல்ல மகசூல் தரும் பட்டாணி பயிரைத் தேர்வு செய்வதன் மூலம் நல்ல பலனைப் பெற முடியும் என, தோட்டக்கலைத் துறை அறிவுறுத்தியுள்ளது.

ரகங்கள்: போனிவில்லி, புளுபேண்டம், அர்கெல், அலாஸ்கா லின்கோலின், அசாத் ரகங்கள் ஏற்றவை.

மண், தட்பவெப்பநிலை: மணல்சாரியான செம்மண் பூமியிலும், களிமண் நிறைந்த நிலங்களிலும் வளர்ந்தாலும், வடிகால் வசதி கொண்ட பொல பொலப்பான இருபொறை மண் நிலங்களில் நன்கு வளரும். களர், உவர் நிலங்களில் வளராது. பட்டாணி குளிர்காலத்தில் சிறந்த வளர்ச்சியும், மகசூலும் தரவல்லது. பருவம்: பிப்ரவரி - மார்ச், அக்டோபர் - நவம்பர் மாதங்கள் பயிரிட ஏற்ற பருவம்.

விதையளவு: ஹெக்டேருக்கு 100 கிலோ விதை போதும். 40-க்கு 10 செ.மீ. இடைவெளியில் விதைக்க வேண்டும்.

நிலம் தயாரித்தல்: நிலத்தை 3 அல்லது 4 தடவை மடக்கி உழ வேண்டும். கடைசி உழவில் 20 டன் மக்கிய தொழு உரம் இட்டு உழவேண்டும். பின்பு 45 செ.மீ இடைவெளியில் பார்கள் அமைக்கவேண்டும்.

விதை, விதைப்பு: விதை மூலம் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த விதைக்கும் முன்பு ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் திரம் அல்லது நான்கு கிராம் ட்ரைகோடெர்மா விரிடி கொண்டு விதை நேர்த்தி செய்யவேண்டும். பின்பு 2 கிலோ பாஸ்போ பாக்டீரியத்தை மண்ணுடன்

கலக்கவேண்டும். பார்களின் பக்கவாட்டில் விதைகளை 34 செமீ ஆழத்தில் ஊன்றவேண்டும். விதைக்கு விதை 10 செமீ இடைவெளி விட்டு விதையை ஊன்றவேண்டும்.

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை: பார்களின் ஓரங்களில் தழைச்சத்து 60 கிலோ, சாம்பல் சத்து 70 கிலோ கொடுக்கக்கூடிய ரசாயன உரங்களை அடியுரமாக இடவேண்டும்.

நீர் நிர்வாகம்: விதைத்தவுடன் ஒரு தண்ணீரும், பின்னர் 3 நாள் கழித்து உயிர்த்தண்ணீரும் விடவேண்டும். பின்னர் மண்ணின் தன்மையை அனுசரித்து 5 நாளுக்கு ஒருமுறை தண்ணீர் கட்டவேண்டும். மலைகளில் பயிரிட்டால் பனிக்கட்டி தோன்றும் காலத்தில் நீர் கட்டவேண்டும்.

களை கட்டுப்பாடு, பின்செய்நேர்த்தி: விதைத்த 15 நாளுக்குப் பின்னர் ஒரு களை எடுக்க வேண்டும். பின்னர் தேவைப்படும்போது களைக்கொத்தி களையெடுத்து, விதைத்த 30ஆவது நாளில் 60 கிலோ தழைச்சத்து கொடுக்கும் உரத்தை மேலுரமாக இடவேண்டும்.

காய் துளைப்பான்: 15 நாளுக்கு ஒருமுறை ஒரு லிட்டருக்கு 12 கிராம் கார்பரைல் 3 முறை தெளிக்கவேண்டும்.

அசுவினி: மெத்தைல் டெமட்டான் (அல்லது) டைமெத்தோயேட் (அல்லது) பாஸ்போமிடான் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1 மிலி என்ற அளவில் கலந்து தெளிக்கவேண்டும்.

அறுவடை: விதைத்த 75 நாள் கறிப் பட்டாணியை அறுவடை செய்யலாம். பட்டாணிப் பயிரில் காய்கள் தகுந்தபடி முற்றியதும் அறுவடையைத் தொடங்க வேண்டும். காய்கறிப் பருவம் அதாவது உண்ணும் பருவத்தைக் கடந்துவிட்டால் காய்களின் தரம் குறைந்துவிடும். அறுவடையின்போது அதிக வெப்பம் இருந்தாலும் தரம் குறைந்துவிடும். 3 முறை பட்டாணியை அறுவடை செய்யலாம். அறுவடையை காலையிலோ, முற்பகலிலோ செய்யவேண்டும்.

மகசூல்: ஹெக்டேருக்கு 110 நாளில் 8 முதல் 12 டன்கள் வரை மகசூல் பெறலாம்.

## தொடங்கியது வடகிழக்குப் பருவமழை



தமிழகம், புதுச்சேரி, கேரளம் உள்ளிட்ட தென் மாநிலங்களில் வட கிழக்குப் பருவமழை புதன்கிழமை தொடங்கியதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர்எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

இது குறித்து சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: தமிழகம், புதுச்சேரி, கேரளம், கர்நாடகம் உள்ளிட்ட தென் மாநிலங்களில் வடகிழக்குப் பருவமழை புதன்கிழமை தொடங்கியது. இந்த ஆண்டு சற்று தாமதமாகத் தொடங்கினாலும் மழை சராசரியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் நிகழாண்டில் பருவமழை, இயல்பு நிலையிலிருந்து நேர்மாறான திசையில் இருக்கும் என்று தெரிகிறது.

இந்த நிலையில், அண்மையில் இலங்கையை ஒட்டிய தென்மேற்கு வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி தொடர்ந்து அதே இடத்தில் நீடிக்கிறது. அது வலுப்பெறாமல் தாழ்வுப் பகுதியாக மட்டுமே நிலை கொண்டுள்ளது.

இதன் காரணமாக தமிழகம், புதுச்சேரியில் கடந்த 24 மணி நேரத்தில்

அனேக இடங்களில் மழை பெய்துள்ளது.

தமிழகம், புதுச்சேரியில் கடலோர மாவட்டங்களில் அனேக இடங்களிலும், உள் மாவட்டங்களில் ஒரு சில இடங்களிலும் மழை பெய்யும். அதே நேரத்தில், ஓரிரு இடங்களில் பலத்த மழை பெய்வதற்கான வாய்ப்புள்ளது.

சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்புள்ளது என்று எஸ்.ஆர்.ரமணன் கூறினார்.

சென்னையில் மழை: சென்னையின் பல்வேறு பகுதிகளில், புதன்கிழமை மழை பெய்தது. அதிகாலையில் சாரலுடன் தொடங்கிய மழை பின்னர் சற்றுப் பலமாக பெய்தது. ஈக்காட்டுத்தாங்கல், கிண்டி, பல்லாவரம், தாம்பரம், பட்டினப்பாக்கம், மயிலாப்பூர், எழும்பூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் நல்ல மழை பெய்தது. பிற்பகலில் வெயில் அடித்தது. பின்னர், மாலையில் மீண்டும் பல்வேறு பகுதிகளில் சாரலுடன் கூடிய மழை பெய்தது.

## பருப்பு: இருப்பு வைக்க கடும் கட்டுப்பாடு; தமிழக அரசு உத்தரவு

தமிழகத்தில் பருப்பு வகைகளை அனுமதிக்கப்பட்ட அளவில் மட்டுமே இருப்பு வைக்க வேண்டுமென தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

மொத்த வணிகர்கள், சில்லறை வணிகர்கள் என ஒவ்வொருவருக்கும் பருப்புகளை இருப்பில் வைப்பதற்கான அளவுகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

தமிழக பருப்பு வணிகர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் சென்னையில் புதன்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் உணவுத் துறை அமைச்சர் காமராஜ் பேசியதாவது:

பருப்பு உற்பத்தி அதிகம் நடைபெறும் மாநிலங்களில் பருவமழை

பொய்த்துள்ளது. இதனால், சாகுபடி பரப்பும், உற்பத்தியும் வெகுவாகக் குறைந்துள்ளது.



இதனால், பருப்பு வகைகளின் விலை இந்தியா முழுவதும் உயர்ந்துள்ளது. தமிழகத்தில் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் குறைந்த விலையில் பருப்புகள் கிடைக்க மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழகத்தில் அத்தியாவசியப் பொருள்கள் பதுக்கப்படுவது, கடத்தப்படுவது பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பருப்பு மொத்த வணிகர்களுக்கு மாநகராட்சி பகுதிகளில் 2.500 குவிண்டால் என்ற அளவிலும், சில்லறை வணிகர்களுக்கு 62.5 குவிண்டால் என்ற அளவிலும் இருப்பு வைத்துக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதர பகுதிகளில் மொத்த வணிகர்களுக்கு 1,250 குவிண்டால் என்ற அளவிலும் சில்லறை வணிகர்களுக்கு 50 குவிண்டால் என்ற அளவில் பருப்பு வகைகளை இருப்பு வைத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த அளவு அனைத்து வகை பருப்புகளையும் உள்ளடக்கியதாகும்.

பருப்பு வணிகர்கள், அனுமதிக்கப்பட்டுள்ள அளவில் மட்டும் பருப்புகளை இருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும். விலை உயர்வின்றி, விநியோகம் செய்ய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றார் அமைச்சர் காமராஜ்.

இந்தக் கூட்டத்தில், கூட்டுறவு, உணவுத் துறை முதன்மைச் செயலாளர் சிவதாஸ் மீனா, உணவுப் பொருள் வழங்கல்-நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் சூ.கோபாலகிருஷ்ணன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் கா.பாலச்சந்திரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.**ரூ.110-க்கு துவரம் பருப்பு** தமிழக அரசு கிலோ ரூ.110-க்கு விற்பனை செய்ய உள்ள துவரம் பருப்பை பாக்கெட்டுகளில் அடைக்கும் பணி இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது.

தமிழக அரசின் குறைந்த விலை துவரம் பருப்பு வரும் 1-ஆம் தேதி முதல் விற்பனை செய்யப்பட உள்ளது. இறக்குமதி செய்யப்படும் துவரம்பருப்பின் விலையும் குறைய வாய்ப்புள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

தமிழகம் உள்பட இந்தியா முழுவதும் துவரம், உளுத்தம் பருப்புகளின் விலை கடந்த சில நாள்களாக கடுமையாக உயர்ந்து வருகிறது. இந்த பருப்புகள் விலையைக் கட்டுப்படுத்த மத்திய அரசு இறக்குமதி செய்த துவரம்பருப்பில் இருந்து 500 மெட்ரிக் டன்களை தமிழக அரசு கேட்டுப் பெற்றுள்ளது. இந்தத் துவரம் பருப்பை, பருப்புகளாக உடைக்கும் பணிகள் கடந்த சில நாள்களாக நடைபெற்று வந்தன. இப்போது துவரம்பருப்பை பாக்கெட்டுகளில் அடைக்கும் பணிகள் தீவிரமடைந்துள்ளது. இந்த துவரம்பருப்பு ஒரு கிலோ ரூ.110 என்ற விலையிலும், அரை கிலோ ரூ.55-க்கும் விற்பனை செய்யப்பட உள்ளது.

சென்னை, கோவை, திருச்சி: வரும் 1-ஆம் தேதி முதல், சென்னை, கோவை, திருச்சி, மதுரை உள்ளிட்ட நகரங்களில் கூட்டுறவு-தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பல்பொருள் விற்பனை அங்காடிகள் மூலம்

விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, தமிழகத்தில் 91 அங்காடிகள் மூலம் துவரம் பருப்பு விற்கப்பட உள்ளது. பாக்கெட்டுகளில் அடைக்கும் பணிகள், சென்னையில் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம் போன்ற பிரதான கூட்டுறவு இடங்களில் வைத்து நடைபெற்று வருகிறது. அரை கிலோ, ஒரு கிலோ என தனித்தனியாக துவரம் பருப்புகளை பாக்கெட்டுகளில் அடைக்கும் பணியில் பணியாளர்கள் இரவு-பகலாக ஈடுபட்டு வருவதாக கூட்டுறவுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இறக்குமதி பருப்புகள்: இதனிடையே, பருப்பு வகைகளின் விலையைக் குறைப்பது தொடர்பாக, உணவுத் துறை அமைச்சர் ஆர்.காமராஜ் தலைமையில் சென்னையில் புதன்கிழமை ஆலோசனை நடத்தப்பட்டது. இந்தக் கூட்டத்துக்குப் பிறகு பருப்பு வியாபாரிகள் கூறியது:

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ துவரம் பருப்பை ரூ.133 முதல் ரூ.135 வரையில் மில் விலைக்கே விற்பனை செய்ய ஒப்புக் கொண்டுள்ளோம். இதனால், சில்லறை விற்பனையில் இறக்குமதி செய்யப்பட்ட துவரம்பருப்பு ஒரு கிலோ ரூ.145-க்கு மிகாமல் விற்க முடியும். இதுவரை சில்லறை விற்பனையில் ஒரு கிலோ ரூ.180-க்கு விற்பனை செய்யப்பட்ட இறக்குமதி துவரம் பருப்பின் விலை குறைந்து ரூ.145-க்கு கிடைக்க வழி ஏற்பட்டுள்ளது எனத் தெரிவித்தனர்.

### மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து செவ்வாய்க்கிழமை காலை நொடிக்கு 3,310 கன அடியாக இருந்தது புதன்கிழமை காலை நொடிக்கு 3,843 கன அடியாக அதிகரித்தது.

அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனம், கிழக்கு, மேற்குக் கால்வாய்

பாசனத்துக்கு நொடிக்கு 2,500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணைக்கு நீர்வரத்தை விட பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடுவது குறைவாக இருப்பதால் செவ்வாய்க்கிழமை காலை 60.89 அடியாக இருந்த நீர்மட்டம் புதன்கிழமை காலை 61.03 அடியாக உயர்ந்தது. அணையின் நீர் இருப்பு 25.46 டி.எம்.சி.யாக உள்ளது.

**தூய்மை உணவே முதல் தேவை!**

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற நிலை மாறிவிட்டது. இன்று "கலப்பட' உண்டி கொடுத்தோர் உயிர் பறித்தோரே என்று புது இலக்கியம் எழுதவேண்டி வரும். காரணம், இன்றைக்கு ஒவ்வா உணவினால் வரும் நோய்கள் பற்றிய அக்கறை அதிகரித்து வருகின்றது. அதிலும், சமீபத்தில் "லிஸ்டிரியா மோனோ சைட்டோஜென்கள்' எனும் நுண்கிருமித் தாக்கத்தினால் பரவும் நோய்கள் படுபிரபலம். "லிஸ்டிரியாசிஸ்' என்கிறார்கள். வேறு ஒன்றுமில்லை. இது ஒருவகை ஹிஸ்டிரியா மாதிரி, மனநோய். குறிப்பாக, இறைச்சி மற்றும் பால் பொருள்களினால் பரவும் ரகம். இது காய்ச்சல், உடல்வலி, குமட்டல், வயிற்றுப்போக்கு என்று முன்னும் பின்னும் ஓட ஓட விரட்டும். அதிலும் வயதானவர்கள், கர்ப்பிணிகள், மழலைகள், நோயெதிர்ப்புத் திறன் குன்றிய நோஞ்சான்கள் என்றும் ஆள் பார்த்துத் தாக்கும் நுண்கிருமி.

ஒரே கலப்பட உணவை, ஒரே முறையில் தயாரித்து, ஒரே பந்தியில் அல்லது ஒரே தட்டில் இட்டுப் பரிமாறிச் சாப்பிட்டாலும் இத்தகைய நோய், சிலரைத்தான் குறிவைத்துத் தாக்குமாம். கர்ப்பிணிகள் என்றால் "கன்னிக்குட'த்தில் மிதக்கும் இந்த பாக்டீரியா மண்ணிலும் மனித இரத்தத்திலும் "ஹாய்யாக' வசிக்கும். பாலாடைக் கட்டி, சுட்ட மாமிசம் என அதி வெப்ப உணவும், அதிகுளிர் பதனப் பெட்டியும் இவற்றின்

சுகவாச ஸ்தலங்கள். அதனால் பொதுவாக, உணவுகளைக் குளிர்பதனப் பெட்டிகளில் பனி உறைநிலை அளவுக்கேனும் பாதுகாக்க வேண்டும் என்கிறோம்.

இன்னொரு கலப்பு நோய், "டோக்சோபிளாஸ்மோசிஸ்'. இதற்கு "டோக்சோபிளாஸ்மா கொண்டாயி' என்ற முகிழ் உயிரி ஒட்டுண்ணியே காரணம். அரைவேக்காட்டு இறைச்சிக் கொழுப்பும், விலங்குகளின் மலம், சிறுநீர்க் கழிவுகளுமே இந்த ஒட்டுண்ணிக்கு வாடகை இல்லாத குடியிருப்புகள்.

பொதுவாக, வெப்ப நகர்ப்புறங்களிலும், ஈரப்பதம் மிக்க சேரிகளிலும் இவற்றின் இனப்பெருக்கம் அதிகம். இந்த நோய் சுண்டெலிகளை எளிதில் தாக்கும். அவற்றைத் தின்னும் பூனைகள் மலத்தின் வழி இந்த ஒட்டுண்ணி மனித உடம்புக்குள் ஏற்றுமதி ஆகும்.

மனித உடலில் முட்டைகளாகி வாழ்நாள் முழுவதும் உடம்புக்குள் பதுங்கியே இருக்கும். இதில் இன்னொரு விசேஷம் என்னவென்றால், இந்நோயாளி, தனக்கு இத்தகைய சுகக்கேடு உண்டு என்றே உணர்வதும் கிடையாது. ஊழலுக்குள் மூழ்கி இருப்பதால், உணராமலே வாழும் அரசியல்வாதிகள் போல. பலரும் தங்களுக்கு புளுக்காய்ச்சல் என்று நினைத்துக்கொண்டு கண்ணில் கண்ட மாத்திரைகளைத் தாங்களே வாங்கிச் சாப்பிடுவார்களாம். குருதிநீரில் "ஐ.ஜி.ஜி.' எனப்படும் "இம்மியுனோ குளோபுலின்-ஜி' என்ற புரதத்தினை ஆராய்ந்தால் நோய் கண்டு அறியலாம். ஆனால், நோயின் உக்கிரம் மூளையைப் பாதிக்கும்போதுதான் பித்துப் பிடித்தது தெரியவரும். பாதிப் பேர் தாங்கள் பேசுவது என்னவென்று புரியாமல் மேடையில் உளறுவார்கள். விழித்திரை அழற்சியால் கண்கள் கூசும். உங்கள் கண்ணில் நீர் வடிந்து கொண்டே இருக்கும். அப்புறம் என்ன, பார்வை மங்கும்.

வழக்கம்போல, கர்ப்பிணிகளுக்கான அபாயம் வேறுமாதிரி. இந்நோய் தாக்கினால் கருவில் வளரும் சிசுவைப் பாதிக்கும். பிள்ளை பிறந்து பல

மாதங்களுக்குப் பின்னர் கூட கண்பார்வைக் கோளாறு வரலாம். வலிப்பு உண்டாகலாம். புத்தி மந்தம் ஆகலாம்.

ஆக, இந்தக் "கலாம்' வேறு மாதிரி. (பாருங்கள் அமெரிக்காவில் ஒரு கிருமிக்கு "கலாம்' பெயரை வைத்து மானத்தை வாங்குகிறார்கள்? நிலாத் தரையில் நம் நாட்டுச் சந்திரயானின் "மிப்' மோதுகலன் விழுந்த இடத்திற்கு அல்லவா "கலாம்' பெயரை வைத்து இருக்க வேண்டும்?)

இத்தகைய நச்சு ஒட்டுண்ணியில் இருந்து உங்களைக் காத்துக்கொள்ள வேண்டுமா? உணவை 74 பாகைக்கேனும் சூடாக்கி உண்ணுங்கள். விண்வெளியின் "கிரையோஜெனிக்' பொறிகலன் அளவுக்கு பனி உறைநிலைக்கும் கீழ் உணவைப் பத்திரப்படுத்தவும், பழங்களைத் தோல் உரித்துச் சாப்பிடவும். ஆடு, மாடுகள் மாதிரி அப்படியே தோலோடு விழுங்காதீர்கள்.÷

"இருட்டுக் கடை அல்வா' மகிமை அறிவோம். ஆனால், இருட்டுக் கடைகளாகப் பாதையோரம் வைத்திருக்கும் "தாபா' (இந்தச் சொல்லினைப் புரட்டிப் படியுங்கள் "பாதை' ஆகும்!) மேஜைகளில், வெட்டிக் கிடைப்பதை "வெட்டி' விழுங்குவானேன்?

செக்கச்சிவந்த காதல் பெண்களைப் பிச்சுப் பிச்சுத் தின்னவா என்று சிலர் பாடல் எழுதினாலும் எழுதினார்கள். நம்மூர் இளைஞர்கள் சிலர், செக்கச்செவேல் என்றிருக்கும் சிகப்பான மாமிசத் துண்டுகளையே காதலிக்கிறார்கள். அவற்றைப் பொரித்து எடுக்க இருட்டுக்கடைகளில் கொதிநிலை அதிகமான பன்றிக் கொழுப்பு கையாளப்படுகின்றது. நாடாப் புழுக்களின் கோடை வாசஸ்தலம் அது.

வீட்டுச் சமையல் அறையில் அன்பு அன்னை அல்லது மனைவி (ஆண்களும் சமைக்கலாம், தப்பு இல்லை.) சமைத்த உணவில் எறும்பு கண்டால் கொதிக்கிறோம். ஆனால், கொதிக்கும் வாணலியில் குதூகலிக்கும் பன்றிக்கொழுப்பில் செய்த உணவை விரும்பி உண்ணுவதோ?

உடலில் அதுவும் சிறுகுடலில் ஒட்டினாலும், கத்திரியால் வெட்டினாலும் தலைசாயாத இந்த நாடாப் புழுக்களின் முட்டைகள் நரகத்தில் கொதிக்கும் கொப்பரையிலும் உயிர்வாழக் கூடியவை. பிறகென்ன, உண்டவர் மண்டையிலும் மூளைக்குப் பக்கத்தில் "பிளாட்' போட்டுக் குடியேறும். கண்கள் சிவக்கும். முகம் வலிப்பில் ஒரு பக்கம் கோணல் ஆகும். நாளாவட்டத்தில் பைத்தியம் உத்தரவாதம்.

கலப்பட உணவால் நோய்கள் ஒருபக்கம். நல்ல உணவிலும் ஊட்டச்சத்துக் குறை பலவீனம் இன்னொரு பக்கம். அதிலும் உலகத்தில் ஏழில் ஒருவருக்கு இத்தகைய நுண்ஊட்டச் சத்துக் குறைபாடு உள்ளதாம். குறிப்பாக, இந்தியாவில் மூன்று குழந்தைகளில் ஒருவர் இத்தகைய சவலைப் பிள்ளைதானாம்.

குறிப்பாக இரும்புச் சத்து, துத்தநாகம், "வைட்டமின் ஏ மற்றும் அயோடின் ஆகிய சத்துக் குறைபாட்டினர் உலகில் பாதிக்குமேல் இருக்கிறார்களாமே. பிறந்த ஆறு மாதம் முதல் மூன்று ஆண்டுகளுக்குள் இரும்புச் சத்துக் குறை உடைய குழந்தைகள் ஐந்துக்கு நாலு பேர் என்றால் வேறு என்ன சொல்ல?

ஒரு கிலோ பாசிப் பருப்பில் ஏறத்தாழ 160 மில்லி கிராம் துத்தநாகம் உள்ளது. அதனால் தானிய உணவு நன்று.

ஏ வைட்டமின் குறைபாட்டினால் மழலைப் பிஞ்சுகளில் மூவரில் இரண்டு பேர் சிகிச்சை பெற வேண்டி இருக்கிறதாம். சிகப்பான உணவே சிறந்தது என்று உணவியல் விஞ்ஞானிகளும் பரிந்துரைக்கின்றனர்.

கண் நலம் பேணவும், புற்றுநோய் வராமல் காக்கவும் காரோட்டினாய்டுகள் இயற்கைச் சத்து உதவும். இது ஏ வைட்டமின்களின் தாய். கண், சுவாச மண்டலம், சிறுநீர்ப் பாதை, சிறுகுடல் எங்கும் முறையான பாதுகாப்புப் படலம் பூசுவது இந்த வைட்டமினின் தொண்டு. பொதுவாக, இளஞ்சிகப்பு, மஞ்சள் நிறக் காய்கனிகளில் இந்தச் சத்து அடங்கி இருக்கிறது.

இவற்றில் 700}க்கும் மேற்பட்ட திசு வேதிமங்கள் உள்ளன. அவற்றில் வெறும் 24 சத்துகள் மட்டுமே நம் அன்றாட உணவில் இடம்பெறுகின்றன. காரட், தக்காளி, சர்க்கரை வள்ளிக் கிழங்கு, கீரை வகைகள், புதினா போன்ற காய்கறிகள் உடலுக்கு நல்லது.

எப்படியோ, தொழிற்சாலைகளில் லைக்கோப்பீன், பீட்டா - காரோட்டீன், காந்தாக்சந்தைன், சீயாக்சந்தைன், அஸ்டாக்சந்தைன் ஆகிய ஐந்து காரோட்டினாய்டுகள் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகின்றன.

அதிலும் ஏ வைட்டமின் அளவு மீறினாலும் சில சிரமங்கள் எழும். உடம்பில் தோல் உலரும். தலை அரிப்பு எடுக்கும். தலைமுடி உதிரும். கல்லீரல் பாதிக்கும். பசி எடுக்காது. குமட்டல் வரும்.

அயோடின் குறைவால் முன்கழுத்துக் கழலை நோயாளிகள் இந்தியாவில் 85 சதவீத மாவட்டங்களில் வசிக்கிறார்கள். வீடு கட்டி வாழ வேண்டும். விவசாயத்தையும், காப்பாற்றிப் போற்ற வேண்டும். இயற்கையை மட்டுமே நம்பினால், நவீன மக்கள் பெருக்க உலகினில் வளர்ந்துவரும் இந்த அதீத சூறைநோய்களுக்கு ஈடுகட்ட முடியாது. இதற்காகதான் நுண்ஊட்டச் சத்துகளையும் வலியுறுத்துகிறோம்.

பேய் முக நாய்களையும், ஆனை உயரப் பூனைகளையும் சமூக அந்தஸ்து கருதி வளர்ப்பவர்களுக்கும் ஒரு சொல். வேலைக்கு போகும் முன் நீங்கள் குளிக்கிறீர்களோ இல்லையோ, செல்லப் பிராணிகளை குளிப்பாட்டுங்கள். இல்லையென்றால் சம்பாதித்த பணம், கால்நடை மருத்துவச் செலவுக்கே போதாது. வருமானத்தில் பாதியை நாய் மேனியில் உலா போகும் நாடாக் கிருமி ஒட்டுண்ணிகளை ஒழிப்பதற்காகச் செலவிட வேண்டி வரும்.

சீனாவில் தயாரித்து மலிவான விலையில் பெட்டிக் கடைகளில் விற்பனை ஆகும் 'அஞ்சு ரூபா' பிஸ்கெட்டுகளிடம் கவனம் தேவை. செல்லப் பிராணிகளின் 'நாய் பிஸ்கோத்துகளை' செல்லக் குழந்தைகள்

திருடிச் சுவைத்தால் சின்ன வயதிலேயே சிறுநீரகக் கற்கள் உபாதை வருகிறதாம். அயல்நாட்டில் சமீபத்திய உணவியலாளர் எச்சரிக்கை செய்துள்ளனர்.

இத்தனைக்கும் மத்தியில் அழற்சி அல்லது ஒவ்வாமை என்ற நோய் சர்வ சாதாரணம். மூக்குச்சளி பிடித்து விட்டதோ, மூக்கினுள் "ஃபுளுட்டிக்காசோன் புரொப்பயனேட்', "ட்ரை அம்சினோலோன்', "மொமெட்டாசோன்', "பியுதிசோனாய்டு' என்று சொட்டு மருந்துகள் இருக்கவே இருக்கின்றன. தூசியும், கரப்பான் பூச்சியும் உண்டாக்கும் அதே அழற்சியை நாய், பூனை ஆகிய செல்லப் பிராணிகளும் இலவசமாக உங்களுக்கு வழங்கக் கூடும். எச்சரிக்கை. வயதான பிராணிகளின் மாமிசத்தையும் விற்றுப் பணம் பண்ணுகிறார்களாம் சில கடைக்காரர்கள். கன்றுக்குட்டி இறைச்சி என்று கதைக்கிறார்களாமே.

போகட்டும். ஒரு வழியாக, வாய் வழியாக, இத்தனை அழுக்கும் உள்ளே செலுத்துகிறோம்.

முதலில் அளவான தூய்மை உணவு. பின்னர்தான் வளமான தூய்மை இந்தியா.

கட்டுரையாளர்:

இஸ்ரோ விஞ்ஞானி (ஓய்வு). தூசியும், கரப்பான் பூச்சியும் உண்டாக்கும் அதே அழற்சியை நாய், பூனை ஆகிய செல்லப் பிராணிகளும் இலவசமாக உங்களுக்கு வழங்கக் கூடும், எச்சரிக்கை.

## பால் விலை உயர்வு தற்போதைக்கு இல்லை

கர்நாடகத்தில் பால் விலை உயர்வு தற்போதைக்கு இல்லை என்று, அந்த மாநில கூட்டுறவுத் துறை அமைச்சர் எச்.சி.மகாதேவபிரசாத் தெரிவித்தார்.

இதுகுறித்து பெங்களூரில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

பால் விலையை லிட்டருக்கு ரூ.4 அளவுக்கு உயர்த்துமாறு கர்நாடக பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு மற்றும் 13 மாவட்டங்களின் பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு கர்நாடக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளன.

எனினும்,பால் விலையை தற்போதைக்கு உயர்த்துவது இல்லை என்ற முடிவை கர்நாடக அரசு எடுத்துள்ளது. பால் உற்பத்தியாளர் கூட்டமைப்புகளின் கோரிக்கை தற்போதைக்கு கிடப்பில் போடப்பட்டுள்ளது.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பு நஷ்டத்தில் இயங்கி வருகின்றது. சேகரிக்கப்படும் பாலை சேமித்து வைப்பது பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்புக்கு சவாலாக உள்ளது. இந்தச் செலவை ஈடு செய்வதற்காக வங்கிகளில் கடன் பெற்றுள்ளதாக பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்புகள் தெரிவித்துள்ளன.

நீண்ட காலத்துக்கு பாலைப் பாதுகாக்க பெங்களூரு, மைசூரு, சாமராஜ்நகரில் டெட்ராபேக் மையங்கள் அமைக்கப்படும்.

கர்நாடக பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்பின் மேலாண் இயக்குநராக ஜெயராம் பதவி வகித்த போது, ரூ.400 கோடி மதிப்பிலான திட்டத்துக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியதில் முறைகேடு நடந்துள்ளதாக கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் ரேவண்ணா சுமத்தியுள்ள குற்றச்சாட்டில் உண்மையில்லை.

ஒப்பந்தப்புள்ளிக்கு அனுமதி வழங்குவது கூட்டமைப்பின் இயக்குநர்கள் குழுவின் பணியாகும். அதைச் செயல்படுத்துவது மட்டுமே மேலாண் இயக்குநரின் பணியாகும். எனினும், ரேவண்ணாவின் குற்றச்சாட்டு குறித்து மறுஆய்வு செய்ய அரசு தீர்மானித்துள்ளது.

பால் உற்பத்தியாளர்கள் கூட்டமைப்புகள் மூலம் தரமான பாலை சேமிக்க அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்க ரூ. 2 ஆயிரம் கோடியில் கருத்துரு தயாரிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து முதல்வர் சித்தராமையாவுடன் ஆலோசித்து இறுதி முடிவெடுக்கப்படும்.

கர்நாடகத்தில் தினமும் 74 லட்சம் லிட்டர் பால் சேகரிக்கப்படுகிறது. இதில் 33 லட்சம் லிட்டர் பால் விற்பனை செய்யப்படுகிறது. மீதமுள்ள பாலை மதிப்புக்கூட்டுப் பொருள்களாக மாற்றி விற்பனை செய்து வருகிறோம் என்றார்.

## சீமைக் கருவேல மரங்களை அகற்ற ஒருங்கிணைந்த செயல் திட்டம்: தமிழக அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு

சீமைக் கருவேல மரங்களை அகற்ற ஒருங்கிணைந்த செயல் திட்டத்தை உருவாக்கி செயல்படுத்துமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை புதன்கிழமை உத்தரவிட்டது.

தமிழகத்தில் சீமைக் கருவேல மரங்களை அப்புறப்படுத்தக் கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மதிமுக பொதுச் செயலர் வைகோ தாக்கல் செய்த மனு விசாரணையில் இருந்து வருகிறது.

இந்த மனு நீதிபதிகள் ஆர்.சுதாகர், வி.எம்.வேலுமணி அடங்கிய அமர்வு முன்பு புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. வனத்துறை முதன்மைச் செயலரின் அறிக்கையை கூடுதல் தலைமை முதன்மை வனப் பாதுகாவலர் எஸ்.எம்.அப்பாஸ் தாக்கல் செய்தார்.

பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான 2.72 லட்சம் ஹெக்டேரில் சீமைக் கருவேல மரங்கள் இருந்தன. இதில் 26,746 ஹெக்டேரில் இருந்த மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. எஞ்சியவற்றை அப்புறப்படுத்த ரூ.1021.29 கோடி செலவாகும், பணியை முடிக்க 2 ஆண்டுகள் ஆகும்.

ஊரக வளர்ச்சித் துறைக்குச் சொந்தமான 1.51 லட்சம் ஹெக்டேரில், 59,610 ஹெக்டேர் அளவுக்கு சீமைக்கருவேல மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. மீதம் உள்ள பகுதியில் மரங்களை அகற்ற ரூ.368.57 கோடி செலவாகும். பணி முடிக்க 3 ஆண்டுகள் தேவைப்படும்.

வனத்துறையின்கீழ் உள்ள நிலங்களில் 55 ஆயிரத்து 900 ஹெக்டேரில் உள்ள சீமைக்கருவேல மரங்கள் அகற்ற வேண்டும். இதற்கான நிதியை நாட்டு கருவேல மரங்கள் ஏலம் விடுவதன் மூலம் சரிசெய்யத் திட்டமிட்டுள்ளோம். வருவாய்த் துறைக்குச் சொந்தமான இடங்களில் 19 ஆயிரத்து 713 ஹெக்டேர் பரப்பில் இந்த மரங்கள் உள்ளன. இவற்றை அகற்ற ரூ.85.51 கோடி செலவாகும். இவற்றை அப்புறப்படுத்த 2 ஆண்டுகள் ஆகும் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. சீமைக் கருவேல மரங்கள் அகற்றும் பணியை, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள வேண்டும் என்று மனுதாரரான வைகோ வாதிட்டார்.

மேற்குத் தொடர்ச்சி மலையை பாரம்பரியச் சின்னமாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது. ஆகவே, இப் பகுதியில் சீமைக்கருவேல மரங்கள் பரவாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். சீமைக் கருவேல மரங்களுக்குப் பதிலாக லாபம் தரக்கூடிய மரங்களை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

சீமைக்கருவேல மரங்களை அகற்ற அனைத்து நடவடிக்கைகளும் தமிழக அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று அரசுத் தரப்பு வழக்குரைஞர் கோவிந்தன் தெரிவித்தார்.

இரு தரப்பு வாதங்களையும் பதிவு செய்த நீதிபதிகள், சீமைக் கருவேல மரங்களை அகற்றுவதில் ஒருங்கிணைந்த செயல் திட்டத்தை உருவாக்க வேண்டும். டெங்கு, மலேரியா ஒழிப்பில் தீவிரம் காட்டியதைப்போல, இதற்கும் விழிப்புணர்வு பிரசாரம் மேற்கொள்ள வேண்டும். மனுதாரர் வைகோ தெரிவித்துள்ள ஆலோசனைகளையும் பரிசீலித்து நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். சீமைக் கருவேல மரங்களை அகற்ற எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஜனவரி இறுதி வாரத்தில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என தமிழக அரசுக்கு உத்தரவிட்டனர்.

**கால்நடைத் துறை காலிப் பணியிடங்களுக்கு நாளை பதிவுதாரர்கள் பரிந்துரை**

தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையால் அறிவிக்கப்பட்டுள்ள லேப்- டெக்னீசியன், எலெக்ட்ரீசியன், ரேடியோகிராபர் மற்றும் லேப் அட்டெண்டர் ஆகிய காலிப் பணியிடங்களுக்கு, மாநில அளவிலான பதிவுமூப்புப் படி தகுதி வாய்ந்த பதிவுதாரர்கள் பரிந்துரை செய்யப்பட உள்ளனர்.

இதுகுறித்து திண்டுக்கல் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் ஜெகதீஷ் வெளியிட்டுள்ள செய்தி:

தகுதியுடைய விண்ணப்பதாரர்கள், அனைத்து அசல் கல்விச்சான்றுகள், சாதிச் சான்று, முன்னுரிமைப் பதிவு தொடர்பான சான்று, இணையதளம் மூலம் எடுக்கப்பட்ட வேலைவாய்ப்பு அலுவலக பதிவு அடையாள அட்டையுடன், திண்டுக்கல் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (அக்.30) காலை 11 மணிக்கு நேரில் ஆஜராக வேண்டும். குறிப்பிட்ட தேதிக்குப் பின்னர் வரப்பெறும் கோரிக்கை விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

வயது வரம்பு: 2015 ஜூலை 1ஆம் தேதிப் படி, ஆதிதிராவிட மற்றும் பழங்குடி வகுப்பினர் 35 வயது, பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய வகுப்பினர் 32 வயது, இதர வகுப்பினர் 30 வயதுக்குள் இருக்க வேண்டும். மாற்றுத் திறனாளிகளுக்கு உச்ச வயது வரம்பில் 10 ஆண்டுகள் சலுகை உண்டு.

லேப்- டெக்னீசியன்: 10ஆம் வகுப்பு தேர்ச்சியுடன் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் ஓராண்டுக்கான லேப்- டெக்னீசியன் சான்றிதழ் தேர்ச்சி பெற்று பதிவு செய்திருத்தல் வேண்டும்.

எலெக்ட்ரீசியன்: 10ஆம் வகுப்பு தேர்ச்சியுடன் டிப்ளமோ- இன்- எலெக்ட்ரிக்கல் அண்ட் எலெக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் அல்லது டிப்ளமோ இன் எலெக்ட்ரானிக்ஸ் அண்ட் கம்யூனிகேசன் இன்ஜினியரிங் அல்லது அரசு தொழிற்பயிற்சி நிலையத்தால் வழங்கப்படும் வயர்மென் அல்லது எலெக்ட்ரீசியன் சான்று பெற்று பதிவு செய்திருத்தல் வேண்டும்.

ரேடியோகிராபர்: 10ஆம் வகுப்பு தேர்ச்சியுடன் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் கதிரியக்க தொழில் நுட்புநர் சான்றிதழ் பெற்று பதிவு செய்திருத்தல் வேண்டும்.

லேப் அட்டெண்டர்: 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பதிவு மூப்பு அடிப்பைடயில், ஒவ்வொரு பிரிவினருக்கும் வெவ்வெறு கால நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி பதிவுதாரர்கள் பரிந்துரை செய்யப்பட உள்ளனர். இதுதொடர்பாக கூடுதல் விவரங்களுக்கு, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலரை நேரில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

**கொடைக்கானலில் அதிகரிக்கும் குளிர்**

கொடைக்கானலில் கடந்த சில நாள்களுக்கு முன் மழை பெய்தது.

அதனைத் தொடர்ந்து தற்போது 2 நாள்களாக பனிப் பொழிவு காணப்படுகிறது. இந்நிலையில் புதன்கிழமை மாலையில் 30 நிமிடம் சாரல் மழை பெய்தது. இதற்கிடையே சீதோஷண நிலை மாற்றத்தையடுத்து பலருக்கு காய்ச்சல் பரவி வருகிறது.

**போடியில் சாரல் மழை**

போடியில் புதன்கிழமை பரவலாக சாரல் மழை பெய்தது.

பிற்பகல் தொடங்கி மாலை வரை நீடித்த இந்த மழையால் குளிர்ச்சியான சூழல் நிலவியது. தொடர்ந்து பெய்த மழையால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. மலைப் பகுதிகளிலும் சாரல் மழை பெய்து

வருவதால் கொட்டகுடி ஆற்றில் தண்ணீர் வரத்து அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. இந்த மழையால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## பிளவக்கல் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட நடவடிக்கை: ஆட்சியர்

பிளவக்கல் அணை மற்றும் சாஸ்தா கோவில் அணைகளிலிருந்து விவசாயத்திற்கு தண்ணீர் திறந்து விட ஆவண செய்யப்படும் என மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் புதன்கிழமை தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் புதன்கிழமை, ஆட்சியர் அலுவலக கூட்ட மன்ற அரங்கில் ஆட்சியர் வே.ராஜாராமன் தலையில் நடைபெற்றது.

இதில், விவசாயிகளின் பல்வேறு கேள்விகளுக்கு பதிலளித்து மேலும் பேசிய ஆட்சியர், இப்கோ, டி.ஏ.பி. மற்றும் யூரியா கொள்முதல் செய்து போதுமான அளவு இருப்பு வைத்துக் கொள்ளவும், உரங்கள் பதுக்குவதை கண்காணிக்கவும் வேளாண்மை இணை இயக்குநருக்கு அறிவுரை வழங்கினார்.

தெற்கு தேவதானம் கிராமம், பிராமணங்குளம் கண்மாய் மடை மராமத்துப் பணியை, ஊராட்சி பொது நிதியிலிருந்து செய்து முடிக்க உதவி இயக்குநரை கேட்டுக் கொண்டார். கூமாப்பட்டி, புங்கன்குளம் கண்மாய் கரை, திருமலைப்பேரி கண்மாய், பந்தப்பாறை வரத்துக் கால்வாய் ஆகியவை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். தோட்டக்கலைத் துறை மற்றும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கத்திரி, மிளகாய், தக்காளி, வெங்காய விதைகள் காலத்தே வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்றார். கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சி.முத்துக்குமரன், வேளாண்மை இணை இயக்குநர் சி.கனகராசன்,

மாவட்ட வன உயிரின காப்பாளர் அசோக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**பிளவக்கல் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விட நடவடிக்கை: ஆட்சியர்**

பிளவக்கல் அணை மற்றும் சாஸ்தா கோவில் அணைகளிலிருந்து விவசாயத்திற்கு தண்ணீர் திறந்து விட ஆவண செய்யப்படும் என மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் புதன்கிழமை தெரிவித்தார்.

விருதுநகர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் புதன்கிழமை, ஆட்சியர் அலுவலக கூட்ட மன்ற அரங்கில் ஆட்சியர் வே.ராஜாராமன் தலையில் நடைபெற்றது.

இதில், விவசாயிகளின் பல்வேறு கேள்விகளுக்கு பதிலளித்து மேலும் பேசிய ஆட்சியர், இப்கோ, டி.ஏ.பி. மற்றும் யூரியா கொள்முதல் செய்து போதுமான அளவு இருப்பு வைத்துக் கொள்ளவும், உரங்கள் பதுக்குவதை கண்காணிக்கவும் வேளாண்மை இணை இயக்குநருக்கு அறிவுரை வழங்கினார். தெற்கு தேவதானம் கிராமம், பிராமணங்குளம் கண்மாய் மடை மராமத்துப் பணியை, ஊராட்சி பொது நிதியிலிருந்து செய்து முடிக்க உதவி இயக்குநரை கேட்டுக் கொண்டார். கூமாப்பட்டி, புங்கன்குளம் கண்மாய் கரை, திருமலைப்பேரி கண்மாய், பந்தப்பாறை வரத்துக் கால்வாய் ஆகியவை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். தோட்டக்கலைத் துறை மற்றும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கத்திரி, மிளகாய், தக்காளி, வெங்காய விதைகள் காலத்தே வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்றார்.

கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சி.முத்துக்குமரன், வேளாண்மை இணை இயக்குநர் சி.கனகராசன், மாவட்ட வன உயிரின காப்பாளர் அசோக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வேளாண் பல்கலைக்கழகத்தில் காணுயிர் புகைப்படக் கண்காட்சி தொடக்கம்

கோவை வேளாண் பல்கலைக்கழக வளாகத்தில் வன உயிரினங்கள் குறித்த புகைப்படக் கண்காட்சி புதன்கிழமை தொடங்கியது.

ஓசை சுற்றுச்சூழல் அமைப்பு, மாவட்ட வனத்துறை, ரோட்டரி சங்கம், பல்கலைக்கழக நாட்டு நலப்பணித் திட்டம் ஆகியவற்றின் சார்பில் 12-ஆவது ஆண்டாக நடைபெறும் இந்தக் கண்காட்சியை முதுமலை புலிகள் சரணாலய கள இயக்குநர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற மாவட்ட வன அலுவலர் எம்.செந்தில்குமார் பேசுகையில், "காட்டு விலங்குகள், பறவைகளின் கண்காட்சிகள் நடத்தப்படுவதன் நோக்கம், அந்த விலங்குகளை அழிவில் இருந்து பாதுகாப்பதே ஆகும். வனப் பகுதிக்குச் செல்லும் பொதுமக்கள் அங்குள்ள விலங்குகளைச் சீண்டுவது, துன்புறுத்துவது, அப்படி செய்வதை செல்லிடப்பேசியில் படமெடுப்பது என்பது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். அதுபோன்ற செயல்களில் ஈடுபடுவது குற்றம் என்பதையும், விலங்குகளிடம் அன்பு செலுத்த வேண்டும் என்பதையும் மாணவ-மாணவிகள் பொதுமக்களுக்கு விளக்க வேண்டும்' என்றார்.

ஓசை அமைப்பின் தலைவர் காளிதாசன் பேசுகையில், "மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி அரிய விலங்குகள் உள்ள பகுதிகள் பாதுகாக்கப்பட வேண்டிய பகுதிகளில் ஒன்றாகும். நமக்கு பெருமை தேடித் தரும் இந்த மலையையும், அதில் வாழும் விலங்குகளையும் மாணவர்கள், இளைஞர்கள் அறிந்து கொள்ள வேண்டும். தமிழர்கள் இயற்கையுடன் எவ்வாறு இணைந்து வாழ்ந்தனர் அவர்களின் வாழ்க்கை முறை எப்படி இருந்தது என்பதையும் இக்கண்காட்சி விளக்கும் வகையில் அமைந்துள்ளது' என்றார்.

விழாவுக்கு தலைமை வகித்த வேளாண் கல்லூரி முதன்மையர் முனைவர் ச.மகிமை ராஜா பேசுகையில், "இந்தக் கண்காட்சி புகைப்படக் கலைஞர்களின் திறமையை வெளிக் கொண்டு வருவதுடன் மக்களிடையே பல்லுயிர் பெருக்கத்தை பாதுகாப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் உள்ளது. அனைத்து உயிரினங்களும் ஒன்றையொன்று சார்ந்து வாழ படைக்கப்பட்டவை. மனிதர்கள் அதை உணர்ந்து செயல்பட வேண்டும்' என்றார். நவம்பர் 1-ஆம் தேதி வரை நடைபெறும் இந்தக் கண்காட்சியில் 50-க்கும் மேற்பட்ட புகைப்படக் கலைஞர்களின் சுமார் 1,500 புகைப்படங்கள் இடம் பெற்றுள்ளன.

**பயிர்களை சேதப்படுத்தும் மயில்களை கட்டுப்படுத்த கோரிக்கை**

திருப்பூர் மாவட்டத்தில் விவசாயப் பயிர்களை சேதப்படுத்தி வரும் மயில்களை கட்டுப்படுத்த வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருப்பூர் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு, ஆட்சியர் கு.கோவிந்தராஜ் தலைமை வகித்தார்.

கூட்டத்தில், பல்லடம் வட்டத்தில் கடந்த 3 மாதங்களாக பட்டா மாறுதல் செய்வது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. கிராம நிர்வாக அலுவலகம், வருவாய் ஆய்வாளர் அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய இடங்களில் பட்டா மாறுதல் எங்கு செய்வது என்பது குறித்த தகவல்களை பொதுமக்கள் பார்வைக்கு படும்படி தகவல் பலகையில் ஒட்டி வைக்க வேண்டும். தாராபுரம் வட்ட அமராவதி பாசன தென்னை விவசாயிகள் அரசின் காப்பீட்டு திட்டம் மூலம் இணைந்து நிவாரணத் தொகை பெற முடியாமல் உள்ளது. உடுமலை பகுதியில் அம்மா சிமென்ட் சீராக கிடைப்பதில்லை. இதற்கு, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். திருப்பூர் நொய்யல் ஆற்றில் சாயக் கழிவுகள் கலப்பதால் நீர் மாசுபடுகிறது. எனவே, கோவையில் இருந்து வரும் நொய்யல் ஆற்று நீரை சூலூரில் தடுத்து நிறுத்தி, வட்டமலை ஓடை பகுதிக்கு வாய்க்கால்

அமைத்து திருப்பி விடவேண்டும். விவசாயப் பயிர்களை சேதப்படுத்தி வரும் மயில்களை கட்டுப்படுத்த வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை விவசாயிகள் வலியுறுத்தி பேசினர்.

**விவசாயிகள் பயிற்சி முகாம்**

கோபி அருகே நம்பியூர் வட்டாரம், குருமந்தூரை அடுத்த நடுப்பாளையத்தில் வேளாண்மை வணிகத் துறை சார்பில் விவசாயிகள் பயிற்சி முகாம் புதன்கிழமை நடைபெற்றது.

அட்மா எனும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டம் சார்பில் நடைபெற்ற இப்பயிற்சியில், ஈரோடு வேளாண்மை வணிகத் துறை துணை இயக்குநர் ராமசுப்பிரமணியம் பங்கேற்றுப் பேசியதாவது:

விவசாயிகள் விளை பொருள்களை மதிப்புக் கூட்டி தரம் பிரித்து விற்கும்போது அதிக விலை கிடைக்கிறது. கோபி வட்டாரம் அளுக்குளியை அடுத்துள்ள பிள்ளையார் கோயில் துறையில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குளிர்பதனக் கிடங்கு விரைவில் விவசாயிகள் பயன்பாட்டுக்கு வரவுள்ளது.

சத்தியமங்கலம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் ஊரக வணிக மையம் இயங்கி வருகிறது. இங்கு தானியங்கள், மக்காச்சோளம், கொப்பரைத் தேங்காய் போன்றவற்றை இருப்பு வைக்கலாம். இங்கு 100 டன்கள் திறன் கொண்ட குளிர்பதனக் கிடங்கும் உள்ளது. இதிலும், விவசாயிகள் இடு பொருள்களை இருப்பு வைப்பதுடன், பொருளீட்டுக் கடன்களும் பெறலாம் என்றார்.

இப்பயிற்சி முகாமுக்கு, நம்பியூர் வட்டார அட்மா திட்ட விவசாயிகள் ஆலோசனைக் குழுத் தலைவர் பெருமாள் தலைமை வகித்தார். நம்பியூர் வேளாண்மை உதவி இயக்குநர் அ.நே.ஆசைத்தம்பி திட்ட விளக்கவுரையாற்றினார். மைராடா வேளாண்மை அறிவியல் நிலைய

மனையியல் துறை வல்லுநர் சிவா நெல்லிக்காயில் மதிப்புக்கூட்டி விற்பனை செய்வது குறித்து செயல்விளக்கமளித்தார்.

வேளாண்மை அலுவலர் (வேளாண் விற்பனை) கார்த்திகேயன், உதவி வேளாண் அலுவலர் விஜயகுமார், அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் அருணாச்சலம் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். உதவி வேளாண் அலுவலர் (வேளாண் வணிகம்) செந்தில் கணேஷ் நன்றி கூறினார்.

**தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கியது இயல்பான அளவுக்கு பெய்யும் என வானிலை மையம் அறிவிப்பு**




சென்னை,

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை நேற்று தொடங்கியது. இதை அதிகாரபூர்வமாக சென்னை வானிலை மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் அறிவித்தார். மேலும் இயல்பான அளவுக்கு மழை பெய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

வடகிழக்கு பருவமழை

இந்தியாவில் வடகிழக்கு பருவமழையை பெரிதும் நம்பி இருக்கும் மாநிலம் தமிழ்நாடு. ஏன் என்றால் மற்ற மாநிலங்களில் தென் மேற்கு பருவமழை காலத்தில் அதிக மழை பெய்யும். ஆனால் தென் மேற்கு பருவமழை காலத்தில் தமிழ்நாட்டில் சிறிதளவுதான் மழை பெய்யும். வடகிழக்கு பருவமழைதான் அதிக அளவில் தமிழ்நாட்டில் பெய்யும்.

தமிழ்நாட்டில் தென் மேற்கு பருவமழை நின்று விட்டது. தென் மேற்கு

பருவமழை சராசரி அளவு பெய்துள்ளது. கடந்த 3 வருடங்களாக வடகிழக்கு பருவமழை நன்றாக பெய்யவில்லை. அதாவது போதிய அளவுக்கு பெய்யவில்லை. இதனால் ஏரிகள், குளங்கள் அனைத்தும் நிரம்பவில்லை. சில நீர் நிலைகள் மட்டும்தான் நிரம்பின.எனவே இந்த வருடமாவது வடகிழக்கு பருவமழை போதிய அளவுக்கு பெய்து ஏரிகள், குளங்கள் நிரம்ப வேண்டும். விவசாயம் நன்றாக இருக்கவேண்டும் பயிர்கள் நன்றாக விளையவேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு வாரம் தள்ளிப்போய் தொடங்கியது

வடகிழக்கு பருவமழையின் அளவை அளக்கும் காலம் அக்டோபர் மாதம் 1-ந்தேதி முதல் டிசம்பர் 31-ந்தேதி வரையாகும். ஆனால் வடகிழக்கு பருவமழை அக்டோபர் மாதம் 20-ந்தேதி தான் சராசரியாக தொடங்கும். கடந்த வருடம் அக்டோபர் மாதம் 20-ந்தேதிக்கு முன்பாகவே வடகிழக்கு பருவமழை தொடங்கிவிட்டது. ஆனால் இந்த வருடம் வடகிழக்கு பருவமழை, சராசரி தேதியை விட ஒரு வாரத்திற்கு மேல் தள்ளிப்போய் நேற்று தொடங்கிவிட்டது.இது குறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நிருபர்களிடம் கூறியதாவது:-

அதிகாரபூர்வ அறிவிப்பு

நேற்று முன்தினம் தென் மேற்கு வங்கக்கடலில் இலங்கை அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது அதே இடத்தில் நிலை கொண்டுள்ளது. அதன் காரணமாக தமிழ்நாட்டில் வட கடலோர மாவட்டங்களில் அநேக இடங்களிலும், உள் மாவட்டங்களில் சில இடங்களிலும் மழை பெய்துள்ளது.கடலோர மாவட்டங்களில் அநேக இடங்களில் மழை பெய்துள்ளதால் வடகிழக்கு பருவமழை (நேற்று)

தமிழ்நாடு மற்றும் அதை யொட்டி உள்ள கேரளா, கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் தொடங்கிவிட்டது என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்படுகிறது.இயல்பான அளவு மழை பெய்யும்அடுத்த 24 மணி நேரத்திற்கு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் கடலோர மாவட்டங்களில் அநேக இடங்களிலும், உள் மாவட்டங்களில் சில இடங்களிலும் மழை பெய்யும். நீண்ட கால வானிலையாக தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை இயல்பான அளவுக்கு பெய்யும். அக்டோபர் மாதம் 1-ந்தேதியில் இருந்து வடகிழக்கு பருவமழை கணக்கிடப்படுவதால் இதுவரை 11 செ.மீ.மழை பெய்துள்ளது.இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

நேற்று காலை 8-30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:- வல்லம் 9 செ.மீ., தாம்பரம், மேட்டுபாளையம் தலா 7 செ.மீ., செம்மரம்பாக்கம் 5 செ.மீ., பாபநாசம், செந்துறை, அரியலூர் தலா 4 செ.மீ., மகாபலிபுரம்,கிருஷ்ணகிரி, ஆர்.எஸ்.மங்கலம், திருவையாறு, துவாக்குடி, மைலாடி, மேட்டூர், திருச்சி விமானநிலையம் தலா 3 செ.மீ., திருமானூர், தஞ்சாவூர், குமரப்பாளையம், நாமக்கல், திருக்காட்டுப்பள்ளி, பவானி, பரமத்தி வேலூர், விருத்தாசலம், புதுச்சேரி, தேன்கனிக்கோட்டை தலா 2 செ.மீ. மழை பெய்துள்ளது. மேலும் பல இடங்களில் மழை பதிவாகி உள்ளது.

மீனவர்களுக்கு எச்சரிக்கை

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கடலோரங்களில் மீனவர்கள் யாரும் இன்று(வியாழக்கிழமை) கடலுக்கு மீன் பிடிக்கச்செல்ல வேண்டாம் என்று வானிலை மையம் எச்சரித்து உள்ளது. மேலும் கடலோரங்களில் 45 கிலோ மீட்டர் முதல் 55 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

பலத்த மழை

தமிழகத்தில் நேற்று சென்னை, திருநெல்வேலி, தூத்துக்குடி, தஞ்சை, கடலூர், ஈரோடு, கோவை, திண்டுக்கல், தேனி, நீலகிரி, பெரம்பலூர் உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக பலத்த மழை பெய்தது.

சென்னையிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் நேற்று காலை மேக மூட்டமாக காணப்பட்டது. மாலையில் பலத்த மழை கொட்டியது.

3 பேர் பலிபெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுகா பாடாலூர் கிராமத்தை சேர்ந்தவர் சாமிநாதன். இவருடைய மனைவி சின்னம்மாள்(வயது 70). மகன் சிதம்பரம்(49). இருவரும் நேற்று மதியம் தங்களது விவசாய நிலத்தில் வேலை பார்த்து கொண்டு இருந்தனர். அப்போது திடீரென இடி- மின்னலுடன் பலத்த மழை கொட்டியது. இதனால் மரத்தின் அடியில் ஒதுங்கி நின்ற தாயும், மகனும் மின்னல் தாக்கி பலியாயினர்.தஞ்சை மாவட்டம், கும்பகோணம் அருகே உள்ள கண்ணாரகுடியைச் சேர்ந்தவர் ராஜேஷ்கண்ணா. இவருடைய மனைவி மலர்க்கொடி (வயது40). சத்துணவு ஊழியர். நேற்று முன்தினம் இரவு அந்த பகுதியில் பெய்த பலத்த மழையின் காரணமாக ராஜேஷ்கண்ணா வீடு அருகே மின்கம்பி அறுந்து கிடந்ததது. இதைக் கவனிக்காமல் மிதித்த மலர்க்கொடி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார்.

## தமிழ்நாட்டில் பருப்பு வியாபாரிகள் எவ்வளவு இருப்பு வைத்துக்கொள்ளலாம்? உணவுத்துறை அமைச்சர் தகவல்



சென்னை,

தமிழ்நாட்டில் பருப்பு வியாபாரிகள் எவ்வளவு இருப்பு வைத்துக்கொள்ளலாம்? என்பது பற்றி உணவுத்துறை அமைச்சர் காமராஜ் பேசினார்.

பருப்பு வியாபாரிகளுடன் ஆலோசனை

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:-

உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் ரா.காமராஜ் தலைமையில், பருப்பு வணிகர்களுடன் கலந்தாய்வு கூட்டம் 28-ந் தேதி (நேற்று) சேப்பாக்கம் எழிலகத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் அமைச்சர் காமராஜ் பேசியதாவது:-

பெரும்பான்மையாக பருப்பு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் பருவமழை பொய்த்த காரணத்தால், சாகுபடி பரப்பளவும், உற்பத்தியும் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், பருப்பு வகைகளின் விலை இந்தியா முழுவதும் உயர்ந்துள்ளது.

அரசு நடவடிக்கைகள்

தமிழ்நாட்டில் பொதுமக்களுக்கு இவ்விலையேற்றத்தின் பாதிப்பு ஏற்படாதவண்ணம் குறைந்த விலையில் கிடைக்க முதல்-அமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழகம் முழுவதுமுள்ள 34 ஆயிரத்து 352 ரேஷன் கடைகள் மூலம், குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ துவரம் பருப்பு, ஒரு கிலோ உளுந்தம் பருப்பு ஆகியவை ரூ.30 என்ற விலையிலும், பாமாயில் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.25 என்ற விலையிலும் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.

மானியச்சுமை

இதன்படி, ஒவ்வொரு மாதமும் 13 ஆயிரத்து 461 மெட்ரிக் டன் துவரம் பருப்பு, 7 ஆயிரம் மெட்ரிக் டன் உளுந்தம் பருப்பு, ஒரு கோடியே 50 லட்சம் பாக்கெட் பாமாயில் ஆகியவை ஒதுக்கீடு செய்யப்பட்டு, சராசரியாக 98 சதவீதம் நுகர்வு செய்யப்படுகிறது.

இப்பொருட்கள் வழங்கப்படும் சிறப்பு பொது வினியோக திட்டத்திற்கான மானியத்தை முந்தைய மத்திய அரசு 2012-ம் ஆண்டு ஜூன் 30-ந் தேதியோடு நிறுத்திவிட்டபோதிலும், இதனால் ஏற்படும் மானியச்சுமை சுமார் ஆயிரத்து 400 கோடி ரூபாயை தமிழக அரசே ஏற்றுக்கொண்டு இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

நவம்பர் 1 முதல்...

முதல்-அமைச்சர் ஜெயலலிதா செயல்படுத்தி வரும் இத்திட்டங்களை பின்பற்றி ஆந்திரா, தெலுங்கானா போன்ற மாநிலங்களில் துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.40-க்கும், அரியானாவில் ஒரு கிலோ ரூ.50-க்கும் ரேஷன் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. 1.11.2015 முதல் சென்னை, கோவை, திருச்சி, மதுரை உள்ளிட்ட நகரங்களில் கூட்டுறவு

மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக பல்பொருள் விற்பனை அங்காடிகள் மூலம் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.110 என்ற விலையிலும், அரை கிலோ ரூ.55 என்ற விலையிலும் விற்பனை செய்யப்படும் என்று முதல்-அமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

உத்திகள்

அதன்படி, 91 அங்காடிகள் மூலம் விற்பனை செய்ய, அங்காடிகளுக்கு துவரம் பருப்பு நுகர்வு செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு முதல்-அமைச்சர் ஜெயலலிதா அளித்துவரும் பல்வேறு சலுகைகளின் பயனாக, தமிழ்நாட்டில் துவரை சாகுபடி செய்யும் நிலப்பரப்பு உயர்ந்துள்ளது. இதற்காக ஒரு இயக் கம் செயல்படுத்தப்படும்,துவரை சாகுபடி அதிகரிக்க பல்வேறு உத்திகள் கடைப்பிடிக்கப்படும் என்றும் முதல்- அமைச்சர் ஜெயலலிதாவின் அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் பருப்பு தேவைக்கு தன்னிறைவு ஏற்படும் நிலை உருவாகும்.

பருப்பு இருப்பு எவ்வளவு?

தமிழ்நாட்டில் அத்தியாவசிய பொருள்கள் பதுக்கப்படுவது மற்றும் கடத்தப்படுவது பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பருப்பு மொத்த வணிகர்களுக்கு மாநகராட்சி பகுதிகளில் 2,500 குவிண்டால் என்றும், சில்லரை வணிகர்களுக்கு 62.5 குவிண்டால் என்ற அளவிலும் பருப்பு இருப்பு வைத்துக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதர பகுதிகளில் முறையே 1,250 குவிண்டால் மற்றும் 50 குவிண்டால் என்ற அளவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த அளவு அனைத்து வகை பருப்புகளையும் உள்ளடக்கிய மொத்த அளவாகும். பருப்பு வணிகர்கள், அனுமதிக்கப்பட்டுள்ள அளவில் மட்டும் பருப்பு இருப்பு வைத்து, விலை உயர்வின்றி, வினியோகம் செய்ய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தர வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.

பங்கேற்றோர்

அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தருவதாக பருப்பு வணிகர்கள் தெரிவித்தனர். இந்த கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை செயலாளர் சிவ்தாஸ்மீனா, உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் சு.கோபாலகிருஷ்ணன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நிர்வாக இயக்குனர் கா.பாலச்சந்திரன், உணவு பொருள் குற்ற புலனாய்வுத்துறை கூடுதல் இயக்குனர் கே.ராதாகிருஷ்ணன் மற்றும் பருப்பு வணிகர்கள் கலந்துகொண்டனர்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## தமிழக அரசின் நடவடிக்கையால் துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.145-க்கு விற்க இயலும் பருப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் அறிக்கை



சென்னை,

தமிழ்நாடு பருப்பு உற்பத்தியாளர்கள் சங்க செயலாளர் ஆர்.ராஜ்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

28-10-2015 அன்று சென்னை சேப்பாக்கம் எழிலக கட்டிட கூட்டரங்கில் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் தமிழ்நாடு பருப்பு வணிகர்கள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் தமிழக மக்களுக்கு பருப்பு வகைகளை சீரான முறையிலும், குறைந்த விலையிலும் விற்பனை செய்ய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை பாராட்டுவதுடன் பருப்பு வணிகர்களின் முழு ஒத்துழைப்பையும் நல்குவதென தெரிவிக்கப்பட்டது. மேலும், வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.133 முதல் ரூ.135 வரை மில் விலைக்கு விற்பனை செய்ய சம்மதிப்பதாகவும், இதனால் சில்லறை விற்பனையில் இறக்குமதி செய்யப்பட்ட துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.145-க்கு மிகாமல் விற்க இயலும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதுவரை சில்லறை விற்பனையில் ஒரு கிலோ ரூ.180-க்கு விற்பனை செய்யப்பட்ட இறக்குமதி துவரம் பருப்பின் விலை, தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக இறக்குமதி செய்யப்பட்ட துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.145-க்கு விற்க இயலும் என்பதையும் பொதுமக்களுக்கு பருப்பு வியாபாரிகள் சங்கத்தின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## பருப்பு வகைகள் பதுக்கி வைகப்பட்டுள்ளதா? மளிகைகடை குடோன்களில் அதிகாரிகள் அதிரடி சோதனை



கடலூர்

விலை உயர்வை கட்டுப்படுத்தும் வகையில் கடலூரில் மளிகை கடை குடோன்களில் பருப்பு வகைகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதா? என அதிகாரிகள் அதிரடி சோதனை நடத்தினார்கள்.

துவரம் பருப்பு

அத்தியாவசிய மளிகை பொருட்களில் ஒன்றான துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.200–க்கும் அதிகமாக விற்பனை செய்யப்பட்டது. அதேபோல மற்ற பருப்பு வகைகளின் விலையும் உயர்ந்தது.

தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் நிலையில் விலை உயர்ந்து வரும் பருப்பு வகைகள் பதுக்கலை தடுத்து நிறுத்த அதிரடி சோதனை நடைபெற்று வருகிறது.

அதிகாரிகள் சோதனை

அந்த வகையில் கடலூர் மாவட்டத்தில் மாவட்ட உணவு பொருள் கடத்தல் மற்றும் தடுப்பு பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் குமார், மாவட்ட உணவு வழங்கல் துறையின் பறக்கும்படை தாசில்தார் மகேஷ் ஆகியோர் தலைமையில் போலீஸ்காரர்கள் மற்றும் அதிகாரிகளை கொண்ட குழுவினர் அதிரடி சோதனை நடத்தி வருகிறார்கள்.

கடலூர் கடற்கரை சாலையில் உள்ள கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையில் நேற்று அதிகாரிகள் திடீர் சோதனை மேற்கொண்டனர். தொடர்ந்து கடலூர் பாரதிசாலையில் உள்ள பல்பொருள் அங்காடியிலும் அதிகாரிகள் சோதனை மேற்கொண்டனர். ஆனால் பருப்பு வகைகள் பதுக்கி வைக்கப்படவில்லை என தெரியவந்துள்ளது.

இது குறித்து அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

<u>கடும் நடவடிக்கை எடுக்கப்படும்</u>

பருப்பு வகைகளை பொறுத்தவரை மாவட்ட தலைநகரங்கள் மற்றும் இதர பகுதிகளில் மொத்த விற்பனையாளர்கள் 1,250 குவிண்டால் வரையிலும், சில்லறை விற்பனையாளர் 50 குவிண்டால் வரையிலும் இருப்பில் வைத்து விற்பனை செய்யலாம். இதற்கு மேல் இருப்பு வைத்திருந்தால் அவை பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக கருதி பறிமுதல் செய்யப்படுவதோடு கடையின் உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். கடலூரில் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை, தனியார் மளிகைகடை குடோன்கள், பல்பொருள் அங்காடிகள் என 7 இடங்களில் திடீர் சோதனை மேற்கொண்டோம். அதேபோல் நேற்று முன்தினம் பண்ருட்டி பகுதியில் 17 இடங்களிலும் ஆய்வு செய்தோம். இதில் குறிப்பிட்ட அளவுக்கு மேல் பருப்பு வகைகள் இருப்பில் வைக்கப்படவில்லை. எனினும் இந்த சோதனை தொடரும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## வடகிழக்கு பருவமழை எதிரொலி: மாவட்டம் முழுவதிலும் பரவலாக மழை அதிகபட்சமாக 44 மில்லி மீட்டர் பதிவு



கடலூர்,

வடகிழக்கு பருவமழை எதிரொலியின் காரணமாக கடலூர் மாவட்டம் முழுவதிலும் நேற்று பரவலாக மழை பெய்தது. அதிகபட்சமாக கீழ்செருவாயில் 44 மில்லி மீட்டர் பதிவானது.

<u>வடகிழக்கு பருவமழை</u>

தமிழகத்துக்கு அதிக மழைப்பொழிவை தரும் வடகிழக்கு பருவமழை ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 20–ந் தேதிக்கு பிறகு பெய்ய தொடங்கும். ஆனால் இந்த ஆண்டு பருவமழை சற்று தாமதமாக பெய்ய தொடங்கும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்தது.

இந்த நிலையில் இலங்கையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி தொடர்ந்து அதே இடத்தில் நீடிப்பதால் கடலோர மாவட்டங்களில் அனேக இடங்களில் மழை பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும், தற்போதைய நிலையில் அனேக இடங்களில் மழை பெய்ய தொடங்கி இருப்பதால் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்தது.

கடலூரில் மழை

அதன்படி நேற்று மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. மாவட்டத்தின் தலைநகரான கடலூரில் நேற்று அதிகாலையில் மழை பெய்தது. பின்னர் காலையில் வெயில் அடிக்க தொடங்கியது. பகல் 12.45 மணியளவில் மீண்டும் மழை பெய்தது. இதனால் சாலை மற்றும் தெருக்களில் வழிந்தோடிய மழைநீர் சாலையோரத்தில் தாழ்வான பகுதிகளில் தேங்கியது. கடலூர் லாரன்ஸ்சாலை சுரங்கப்பாதையில் சுமார் 2 அடி உயரத்துக்கு தண்ணீர் நிரம்பி நின்றதால் பாதசாரிகளும், வாகன ஓட்டிகளும் செல்ல முடியாமல் தவித்தனர்.

பருவமழை பெய்ய தொடங்கியதை அடுத்து பொதுமக்கள் கொட்டும் மழையில் கையில் குடையை பிடித்துக்கொண்டும், வாகன ஓட்டிகள் தலையில் தொப்பி, மழை கோட் ஆகிவற்றை அணிந்து சென்றதையும் காண முடிந்தது. சுமார் 15 நிமிடம் மழை பெய்தது. அதன் பின்னர் மீண்டும் வெயில் அடிக்க தொடங்கியது.

மழை அளவு

கடலூர் மட்டுமின்றி விருத்தாசலம், வானமாதேவி, கீழ்செருவாய், கொத்தவாச்சேரி, வேப்பூர், பெலாந்துறை, குப்பநத்தம், மே.மாத்தூர், காட்டுமன்னார்கோவில், லால்பேட்டை, சிதம்பரம், ஸ்ரீமுஷ்ணம் உள்பட மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது.

நேற்று காலை 8.30 மணியுடன் கூடிய 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கீழ்செருவாயில் 44 மில்லி மீட்டர் மழையும், குறைந்த பட்சமாக பண்ருட்டியில் ஒரு மில்லி மீட்டர் மழையும் பதிவானது. மாவட்டம் முழுவதிலும் சராசரியாக 12.56 மில்லி மீட்டர் மழை பெய்தது. பிற இடங்களில் பெய்துள்ள மழை அளவு விவரம் மில்லி மீட்டரில் வருமாறு:–

கொத்தவாச்சேரி – 24

வேப்பூர் – 23

பெலாந்துறை – 21

விருத்தாசலம் – 19.60

காட்டுமயிலூர் – 18

வானமாதேவி – 16.80

கடலூர் – 15.40

மே.மாத்தூர் – 15

குப்பநத்தம் – 14.20

காட்டுமன்னார்கோவில் – 10

லால்பேட்டை – 10

ஸ்ரீமுஷ்ணம் – 7

அண்ணாமலைநகர் – 5.40

புவனகிரி – 4

பரங்கிப்பேட்டை – 4

லக்கூர் – 3.30

சிதம்பரம் – 3

தொழுதூர் – 3

சேத்தியாத்தோப்பு – 2

**ஈரோட்டில் இடி–மின்னலுடன் பலத்த மழை**



ஈரோடு,

ஈரோட்டில் நேற்று இடி –மின்னலுடன் பலத்த மழை பெய்தது.

<u>இடி –மின்னலுடன் மழை</u>

தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை அக்டோபர் 29–ந் தேதி (நேற்று) தொடங்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்து இருந்தது. அதன்படி ஈரோடு மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக ஆங்காங்கே மழை பெய்து வருகிறது.

நேற்று முன்தினம் இரவு சுமார் 2 மணி நேரம் ஈரோட்டில் இடி –மின்னலுடன் பலத்த மழை கொட்டி தீர்த்தது. இந்த மழையால் ரோடுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. மேலும் பல இடங்களில் சாக்கடை கழிவுநீர், மழைவெள்ளத்துடன் கலந்து ஓடியது. தாழ்வான இடங்களில் மழைநீர் குளம் போல் தேங்கி நின்றது.

ஈரோடு மாநகரில் பல இடங்களில் பாதாள சாக்கடை பணிகள் நடந்து வருவதால், வீதிகள் முழுவதிலும் சேறும், சகதியுமாக காணப்பட்டது. இதனால் நேற்றுக்காலை மாணவ –மாணவிகள் மற்றும் பொதுமக்கள் வீதிகளில் நடந்து செல்ல மிகவும் சிரமப்பட்டனர்.

ஈரோடு மாவட்டத்தில் நேற்று அதிகாலை பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

வரட்டுப்பள்ளம் –24

அம்மாபேட்டை –23

பவானி –20

ஈரோடு –14

பெருந்துறை –3

சென்னிமலை –1

கோபிசெட்டிபாளையம் –1

அதிகபட்சமாக வரட்டுப்பள்ளம் பகுதியில் 24 மில்லி மீட்டர் மழை அளவும், குறைந்தபட்சமாக சென்னிமலை மற்றும் கோபிசெட்டிபாளையம் பகுதியில் 1 மில்லி மீட்டர் மழை அளவும் பதிவாகி உள்ளது.

25 மில்லி மீட்டர்...

இந்த நிலையில் ஈரோட்டில் நேற்று காலையும் வானம் மப்பும், மந்தாரமுமாக காணப்பட்டது. மதியம் 12 மணி அளவில் வானில் கருமேகங்கள் திரண்டன. அதைத்தொடர்ந்து 2 மணி அளவில் சாரல் மழை பெய்யத்தொடங்கியது. பின்னர் பலத்த மழையாக மாறி, மாலை 3 மணி வரை கொட்டி தீர்த்தது. மழையில் நனையாமல் இருக்க பொதுமக்கள் குடை பிடித்தபடி ரோடுகளில் நடந்து சென்றனர்.

இந்த மழையால் ஈரோடு கொங்காலம்மன் கோவில் வீதி, ஆர்.கே.வி. ரோடு, நாச்சியப்பா வீதி, குமலன்குட்டை, பெரியவலசு, முனிசிபல் காலனி மற்றும் பல வீதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. மேலும் ஈரோடு நேதாஜி தினசரி காய்கறி மார்க்கெட் பகுதியில் மழை வெள்ளம் புகுந்ததால், காய்கறி வாங்க வந்த பொதுமக்கள் மிகவும் சிரமப்பட்டனர்.

ஈரோடு மாவட்டத்தில் நேற்று மதியம் பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

ஈரோடு –25

பெருந்துறை –2

பவானிசாகர் –2

ஈரோட்டில் அதிகபட்சமாக 25 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

**நீலகிரியில் வடகிழக்கு பருவமழை தொடங்கியது சாலையில் மண்அரிப்பை தடுக்க மணல் மூட்டைகள் தயார்**



குன்னூர்

நீலகிரியில் வடகிழக்கு பருவமழை நேற்று தொடங்கியது. இதன் காரணமாக தேசிய நெடுஞ்சாலையில் மண்அரிப்பை தடுக்க 2 ஆயிரம் மணல் மூட்டைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளது.

<u>வடகிழக்கு பருவமழை</u>

தமிழகம் முழுவதும் வடகிழக்கு பருவமழை நேற்று முதல் பெய்ய தொடங்கியது. நீலகிரி மாவட்டத்தில் பல இடங்களில் மழை பெய்தது. குன்னூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில்நேற்று காலை முதல் 11 மணி வரை வானம் மேகமூட்டம் இல்லாமல் சூரிய வெளிச்சத்துடன்

காணப்பட்டது. பின்னர் திடீரென்று மேகமுட்டம் சூழ்ந்து மழை பெய்ய தொடங்கியது. இந்த மழை மிதமான மழையாக பெய்து கொண்டு இருந்தது.

ஆண்டுதோறும் வடகிழக்கு பருவமழை காலத்தில் குன்னூர்–மேட்டுப்பாளையம் சாலையில் மண்சரிவு, மரங்கள் விழுதல் போன்ற சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. மழை, வெள்ளச்சேதங்களை தடுக்க முன்எச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள தமிழக அரசு அந்த துறைகளுக்கு அறிவுரை வழங்கி உள்ளது. இது தொடர்பாக தேசிய நெடுஞ்சாலை துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:–

2 ஆயிரம் மணல் மூட்டைகள்

மேட்டுப்பாளையம் முதல் கக்கநல்லா வரை உள்ள சாலையை தேசிய நெடுஞ்சாலை துறையினர் கண்காணித்து வருகின்றனர். பருவமழை காலம் என்பதால் மண்சரிவு உள்ளிட்ட சம்பவங்களை தடுக்கும் பொருட்டு குன்னூர்–மேட்டுப்பாளையம் சாலையில் பர்லியாரில் ஒரு பொக்லைன் எந்திரம் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளது. இதே போல பொக்லைன் வாகனங்கள் குன்னூரில் ஒன்றும், ஊட்டியில் ஒன்றும், மேட்டுப்பாளையத்தில் ஒன்றும் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளன.

தேசிய நெடுஞ்சாலையில் பருவமழையின் போது மண்சரிவு ஏற்படாமல் தடுக்க 2 ஆயிரம் மணல் முட்டைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டு உள்ளன. தேசிய நெடுஞ்சாலை துறையில் ஆட்கள் பற்றாக்குறையாக இருப்பதால் அவசர பணிகளுக்கு ஒப்பந்த தொழிலாளர்களை நியமனம் செய்து அவர்களை கொண்டு துரிதமாக பணிகளை முடிக்க தேசிய நெடுஞ்சாலைத்துறை முடிவு செய்து உள்ளது.

மழை காலத்தில் மரங்கள் ரோட்டில் விழுந்தால் அதை துண்டாக்கி அகற்ற தற்போது தேசிய நெடுஞ்சாலைத்துறை வசம் 2 மின்வாள்கள் உள்ளன. மேலும் தேவைக்கு ஏற்ப மின்வாளை வாடகைக்கு எடுக்கவும் திட்டமிட்டப்பட்டு உள்ளது. மழை வெள்ளம் தங்கு தடையின்றி செல்ல

சாலையின் ஓரத்தில் உள்ள கற்கள் சீரமைக்கும் பணிக்கும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>மரங்கள் விழுந்தன</u>

பந்தலூர் தாலுகா பகுதியில் நேற்று முன்தினம் பகல் 3 மணி முதல் பலத்த மழை பெய்தது. இதனால் பல இடங்களில் மரக்கிளைகள் மின்கம்பங்கள் மீது விழுந்தன. இதனால் பந்தலூர், கொளப்பள்ளி, உப்பட்டி ஆகிய இடங்களில் மின்தடை ஏற்பட்டது. தகவல் அறிந்த மின்வாரியத்துறையினர் மரக்கிளைகள் விழுந்த இடங்களில் ஆய்வு மேற்கொண்டு புனரமைப்பு பணிகள் மேற்கொண்டனர்.

முள்ளன்வயல் பகுதியில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. இதில் வாழை, யூகலிப்டஸ் மரங்கள் சரிந்து விழுந்தன. பந்தலூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில நேற்றும் காலை முதல் மழை பெய்து கொண்டு இருந்தது.

<u>கொலக்கம்பை</u>

கொலக்கம்பை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான சேலாஸ், தூதூர்மட்டம், அறையட்டி, ஆருகுச்சி, உலிக்கல் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று காலை 9.30 மணி வடகிழக்கு பருவமழை பெய்ய தொடங்கியது. தொடர்ந்து மழை பெய்ததால் அந்த பகுதியில் கடும் குளிர் நிலவியது. மழையில் நனைந்து கொண்டே தேயிலை தோட்ட தொழிலாளர்களும், விவசாயிகளும் தங்கள் பணியில் ஈடுபட்டனர். மேகமுட்டம் சூழ்ந்து இருந்ததால் வாகன ஓட்டிகள் முகப்பை விளக்கை எரியவிட்டு மலைப்பாதையில் வாகனங்களை இயக்கினர்.

## திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டில் பெரிய வெங்காயம் விலை கிடுகிடு உயர்வு



திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டில் 20–க்கும் மேற்பட்ட வெங்காய குடோன்கள் உள்ளன. இங்கு பெரிய மற்றும் சின்ன வெங்காயம் மொத்தமாக கொள்முதல் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்டுக்கு கடந்த வாரம் பெங்களூரில் இருந்து மிகச்சிறிய ரக பெரிய வெங்காயம் விற்பனைக்கு வந்திருந்தது. சுமார் 25 டன் வரை விற்பனைக்கு வந்திருந்த இந்த வெங்காயம் ஒரு கிலோ ரூ.10–க்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்த நிலையில் நேற்று இதே வெங்காயத்தின் விலை கிடுகிடு என உயர்ந்து ஒரு கிலோ ரூ.18–க்கு விற்கப்பட்டது. அதே போல கடந்த வாரம் ரூ.30–க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ பெரிய வெங்காயம் ரூ.40–க்கு விற்கப்பட்டது. இது குறித்து வெங்காய மொத்த வியாபாரிகள் சிலர் கூறியதாவது:–

பெங்களூரில் இருந்து வந்த சிறிய ரக வெங்காயம் வரத்து குறைந்து விட்டதால் ஒரு கிலோவுக்கு ரூ.8 வரை உயர்ந்து விட்டது. அதே போல

நல்ல தரமான பெரிய வெங்காயமும் வரத்து குறைந்தததால் ஒரு கிலோவுக்கு ரூ.10 வரை விலை உயர்ந்து விட்டது. சின்ன வெங்காயத்தின் விலையும் கிலோவுக்கு ரூ.5 வரை உயர்ந்து ஒரு கிலோ ரூ.45–க்கு விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## வேலூர் ஜெயிலில் பண்ணை மீன் விற்பனை நிலையம் சிறைத்துறை டி.ஐ.ஜி. முகம்மது ஹனீபா தொடங்கி வைத்தார்



வேலூர்,

வேலூர் ஜெயிலில் கைதிகளை கொண்டு உருவாக்கிய மீன் பண்ணையில் வளர்ந்த மீன்கள் விற்பனை நேற்று தொடங்கியது. இதனை சிறைத்துறை டி.ஐ.ஜி. முகம்மது ஹனீபா தொடங்கி வைத்தார்.

<u>வேலூர் ஜெயில்</u>

வேலூர் மத்திய ஜெயிலில் தண்டனை கைதிகளாகவும், விசாரணை கைதிகளாகவும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். ஜெயிலில் இருந்து கைதிகள் விடுதலையானதும் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும், பொருளாதார நிலை அடையவும் அவர்களுக்கு கைத்தொழில்கள் கற்று தரப்படுகின்றன. வேலூர் ஜெயிலில் விவசாயம் செய்யப்படுகிறது. மேலும் தோல்

பொருட்கள் உற்பத்தி செய்தல், தச்சு வேலைகள் கைதிகளுக்கு கற்று தரப்படுகிறது.

ஜெயிலின் வெளியில் 'பிரீடம் பஜார்' என்ற பெயரில் காய்கறிகள், பிஸ்கெட், இனிப்புகள் விற்பனையகம், காலை உணவகம், துணி தேய்த்தல், முடி திருத்தகம், தையல் கடை, டீக்கடை, மாலையில் திறந்தவெளி துரித உணவகம் ஆகியவை செயல்பட்டு வருகிறது. இவை அனைத்தும் முற்றிலும் தண்டனை மற்றும் நன்னடத்தை கைதிகளை கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த மாதம் தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக கைதிகளை கொண்டு செங்கல் சூளை தொடங்கப்பட்டது.

<u>மீன்பண்ணை</u>

இந்த நிலையில் கடந்த மார்ச் மாதம் ஜெயில் வளாகத்தில் மீன் வளர்ப்பு பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டன. இதில் கண்ணாடி கெண்டை மீன், பங்கஸ் மீன்கள், கோல்டு மீன், வளர்க்கப்பட்டன. அதைத்தொடர்ந்து பீரிடம் பஜார் அருகே பண்ணை மீன் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டு அதன் தொடக்க விழா நேற்று நடந்தது.

விழாவில் சிறைத்துறை டி.ஐ.ஜி. முகம்மது ஹனீபா கலந்து கொண்டு மீன் விற்பனை நிலையத்தை தொடங்கி வைத்தார். இதில் ஜெயில் சூப்பிரண்டு (பொறுப்பு) கிருஷ்ணகுமார், பெண்கள் ஜெயில் சூப்பிரண்டு ராஜலட்சுமி, கூடுதல் சூப்பிரண்டு ஊர்மிளா, சிறை அலுவலர் தாமரைச்செல்வன், வேலூர் செஞ்சிலுவை சங்க மாவட்ட செயலாளர் இந்தர்நாத் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பின்னர் டி.ஐ.ஜி. முகம்மது ஹனீபா கூறியதாவது:–

<u>புதிய வாழ்க்கை</u>

வேலூர் ஜெயிலில் உள்ள தண்டனை கைதிகள் அனைவருக்கும் ஏதாவது ஒரு தொழில் கற்று தரப்படுகிறது. இதன் மூலம் அவர்கள் வெளியில் சென்றதும் புதிய வாழ்க்கையை தொடங்க வாய்ப்புகள் ஏற்படுத்தி தரப்படுகிறது.

மீன்கள் ஒரு கிலோ ரூ.80 முதல் 100 வரை என, மார்க்கெட்டை விட குறைந்த விலையில் மீன் விற்பனை செய்யப்படுகிறது. தானியங்கள், கீரைகள் மூலம் முழுக்க, முழுக்க சைவ உணவுகளை கொடுத்து சுகாதாரமாகவும், சுத்தமாகவும் மீன்கள் வளர்க்கப்படுகின்றன. மீன் வளர்ப்பு மற்றும் விற்பனை பணியில் மீன்வளத்துறையில் ஓய்வு பெற்ற சார்பு ஆய்வாளர் சத்தியநாராயணன் ஆலோசனையின்படி, ஆயுள் தண்டனை கைதிகள் ஜெயபால், ராமலிங்கம், அனுமந்தராவ், துரைபாண்டி, மணிகண்டன், ஜெயராஜ் ஆகிய 6 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பட்டாசு கடை

பொதுமக்களின் தேவையை பார்த்து, தினமும் மீன்கள் விற்பனை செய்யப்படும். மீன்விற்பனையில் தொய்வு ஏற்பட்டால் வாரத்தில் 3 நாட்கள் விற்பனை செய்யப்படும்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஜெயில் பஜாரில் பட்டாசு கடை வைக்க அனுமதி கிடைத்தால் பட்டாசு கடை திறக்கப்படும்.

வேலூர் ஜெயிலில் விரைவில் கைதிகளை கொண்டு போட்டோ ஸ்டூடியோ தொடங்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

58 கிலோ விற்பனை

நேற்று ஒரே நாளில் 58 கிலோ மீன் விற்பனை செய்யப்பட்டது. இதன் மூலம் ரூ.5 ஆயிரம் வருமானம் கிடைத்துள்ளதாக சிறைத்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பருப்பு வகைகளை பதுக்கி வைப்போர் மீது கடும் நடவடிக்கை குற்றப்புலனாய்வு பிரிவு போலீசார் எச்சரிக்கை




விழுப்புரம்,

மளிகை கடைகள், குடோன்களில் குற்றப்புலனாய்வு பிரிவு போலீசார் அதிரடி சோதனை நடத்தினர். அப்போது பருப்பு வகைகளை பதுக்கி வைத்திருப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று போலீசார் எச்சரிக்கை விடுத்தனர்.

<u>பருப்பு வகைகள் விலை உயர்வு</u>

வடமாநிலங்களில் கடந்த ஆண்டு போதிய அளவு மழை இல்லாததால் நடப்பாண்டில் தானிய வகைகளில் துவரம் பருப்பு, உளுந்து, பாசி பருப்பு ஆகியவற்றின் விளைச்சல் பாதித்தது. இதன் காரணமாக வட மாநிலங்களில் இருந்து தமிழகத்திற்கு வர வேண்டிய பருப்பு வகைகளின் வரத்து குறைந்தது. இதனால் ஒரு கிலோ துவரம் பருப்பு விலை ரூ.225 வரையும், உளுந்து ரூ.170 வரையும் உயர்ந்தன. இந்த விலை உயர்வை

கட்டுப்படுத்த வேண்டும் என நாடு முழுவதும் பல்வேறு தரப்பினர் மத்திய அரசை வலியுறுத்தி வருகின்றனர்.

இதனிடையே இந்த விலை உயர்வை பயன்படுத்தி மளிகை கடைகள், குடோன்களில் பருப்பு வகைகளை வியாபாரிகள் இருப்பு வைக்க ஆரம்பித்தனர். இதை கண்காணிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி தற்போது தமிழகம் முழுவதும் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் மற்றும் மாவட்ட வழங்கல் துறை அதிகாரிகள், குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வு பிரிவு போலீசார் என தனித்தனியாக அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர்.

கடைகளில் சோதனை

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு விழுப்புரம் எம்.ஜி.சாலை, கே.கே.சாலை, பாகர்ஷா வீதி, நேருஜி சாலை உள்ளிட்ட இடங்களில் உள்ள 15–க்கும் மேற்பட்ட மளிகை கடைகள், குடோன்களில் குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வு பிரிவு போலீஸ் இன்ஸ்பெக்டர் குமார், சப்–இன்ஸ்பெக்டர் பாலமுருகன் ஆகியோர் தலைமையில் சிறப்பு சப்–இன்ஸ்பெக்டர்கள் கிருஷ்ணமூர்த்தி, கலைச்செல்வன், ஏட்டு ராஜி ஆகியோர் அதிரடி சோதனை நடத்தினார்கள்.

அப்போது துவரம் பருப்பு, உளுந்து ஆகியவை பதுக்கி வைத்துள்ளனரா? எனவும், இருப்பின் விவரம் குறித்தும் ஆய்வு செய்தனர். இதில் மேற்கண்ட கடைகள் மற்றும் குடோன்களில் அனுமதிக்கப்பட்ட அளவு மட்டுமே பருப்பு வகைகளை வைத்திருந்தது தெரியவந்தது. மேலும் பருப்பு வகைகளை எந்த காரணத்தை கொண்டும் பதுக்கி வைக்கக்கூடாது எனவும், மீறி பதுக்கி வைத்தால் சம்பந்தப்பட்ட கடை உரிமையாளர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என போலீசார் எச்சரித்தனர்.

இதேபோல் நேற்று திண்டிவனம், திருக்கோவிலூர், செஞ்சி பகுதிகளில் உள்ள மளிகை கடைகள், குடோன்களில் பருப்பு வகைகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதா? என போலீசார் அதிரடி சோதனை நடத்தினார்கள்.

## பரவலாக மழை அதிகபட்சமாக திண்டிவனத்தில் 11.20 மில்லிமீட்டர் பதிவானது



விழுப்புரம்,

விழுப்புரம் மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்தது. இதில் அதிகபட்சமாக திண்டிவனத்தில் 11.20 மில்லிமீட்டர் பதிவானது.

பரவலாக மழை

இலங்கையை ஒட்டியுள்ள தென்மேற்கு வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி தொடர்ந்து அதே இடத்தில் நீடிக்கிறது.

இன்னும் வலுப்பெறவில்லை. இந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாக தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் கடந்த 2 நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் நேற்று முன்தினம் முதல் சாரல் மழை பெய்து வருகிறது. இந்த மழை நேற்றும் நீடித்தது. விழுப்புரத்தில் நேற்று காலை முதல் வானம் மப்பும், மந்தாரமுமாக இருந்தது. பகல் 12 மணியளவில் லேசான சாரல் மழை பெய்யத் தொடங்கியது. இந்த மழை இடைவிடாமல் 20 நிமிடம் தொடர்ந்து தூறிக்கொண்டு இருந்தது. தொடர்ந்து மாலை வரை அவ்வப்போது விட்டுவிட்டு சாரல் மழை பெய்த வண்ணம் இருந்தது.

இதனால் சாலைகளில், மழைநீர் வழிந்தோடியது. தாழ்வான பகுதியில் தண்ணீர் தேங்க தொடங்கியது. இந்த திடீர் மழையினால் பாதசாரிகள் நனைந்தபடி சென்றனர். ஒரு சிலர் மட்டும் குடை பிடித்தபடி சென்றதை காண முடிந்தது. இரு சக்கர வாகன ஓட்டிகளும் மழையில் நனைந்தபடியே சென்றனர். பகலிலேயே வானம் மேக மூட்டத்துடன் இருந்ததால் கார், லாரி, பஸ், வேன் உள்ளிட்ட வாகனங்கள் முகப்பு விளக்குகளை ஒளிரவிட்டபடி சென்றன.

<u>பொதுமக்கள் மகிழ்ச்சி</u>

இதேபோல் விக்கிரவாண்டி, உளுந்தூர்பேட்டை, செஞ்சி, மேல்மலையனூர், திருக்கோவிலூர், திண்டிவனம், திருவெண்ணெய்நல்லூர், மயிலம், கள்ளக்குறிச்சி, சங்கராபுரம், வானூர், மரக்காணம் உள்ளிட்ட மாவட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் நேற்று பரவலாக மழை பெய்தது. இந்த மழையினால் வெப்பம் தணிந்து இதமான குளிர்ந்த காற்று வீசியது. தொடர்ந்து பெய்து வரும் இந்த மழையினால் பொதுமக்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**மாநகராட்சி பகுதியில் வணிகர்கள் 2,500 குவிண்டால் பருப்பு ஸ்டாக் வைக்கலாம்**



சென்னை: உணவு அமைச்சர் காமராஜ் தலைமையில் சென்னையில் நேற்று பருப்பு வணிகர்களுடன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை முதன்மை செயலாளர் ஷிவ்தாஸ் மீனா, உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் கோபாலகிருஷ்ணன், சிவில் சப்ளை ஏடிஜிபி ராதாகிருஷ்ணன் மற்றும் பருப்பு வணிகர்கள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் அமைச்சர் காமராஜ் பேசியதாவது: பருப்பு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் பருவமழை பொய்த்த காரணத்தால், சாகுபடி பரப்பளவும், உற்பத்தியும் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், பருப்பு வகைகளின் விலை இந்தியா முழுவதும் உயர்ந்துள்ளது. இதனால் தமிழகத்திலும் பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். குறைந்த விலையில் கிடைக்க

அரசு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. வருகிற 1ம் தேதி முதல் சென்னை, கோவை, திருச்சி, மதுரை உள்ளிட்ட நகரங்களில் கூட்டுறவு மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக கழக பல்பொருள் விற்பனை அங்காடிகள் என 91 இடங்களில் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.110 என்ற விலையில் விற்பனை செய்யப்படும். பருப்பு மொத்த வணிகர்கள் மாநகராட்சி பகுதிகளில் 2500 குவிண்டாலும், சில்லரை வணிகர்களுக்கு 62.5 குவிண்டால் என்ற அளவிலும் பருப்பு இருப்பு வைத்துக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மற்ற பகுதிகளில் முறையே 1250 குவிண்டால் மற்றும் 50 குவிண்டால் என்ற அளவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

ரூ.145க்கு பருப்பு விற்க வியாபாரிகள் சம்மதம்

இந்நிலையில் தமிழ்நாடு பருப்பு வியாபாரிகள் சங்கம் சார்பில், அதன் செயலாளர் ராஜ்குமார் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட துவரம் பருப்பு சில்லறை விலையில் ஒரு கிலோ ரூ.145க்கு விற்க முடிவு செய்ய உணவு அமைச்சர் காமராஜ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் வணிகர்கள் சம்மதம் தெரிவித்துள்ளதாக கூறினார்.

**பதுக்கல்காரர்களிடம் இருந்து பறிமுதல் செய்த 98,000 டன் பருப்பு அடுத்த வாரம் முதல் விற்பனை**



மும்பை: பறிமுதல் செய்யப்பட்ட 98,000 டன் பருப்பு வகைகள் அடுத்த வாரம் முதல் சந்தையில் விற்பனை செய்யப்படும் என நுகர்வோர் விவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது. பருப்பு வகைகள் விலை வரலாறு காணாத அளவுக்கு உச்சத்துக்கு சென்றது. இதை கட்டுப்படுத்த வெளிநாடுகளில் இருந்து பருப்பு வகைகளை மத்திய அரசு இறக்குமதி செய்துள்ளது. இது தவிர, இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், உணவு பதப்படுத்துதல் நிறுவனங்கள், பெரிய அளவிலான டிபார்ட்மென்டல் ஸ்டோர்கள் பருப்பு வகைகளை இருப்பு வைக்க கட்டுப்பாடுகள் விதித்து மத்திய அரசு அதிரடி உத்தரவு பிறப்பித்தது. பதுக்கலை கண்காணிக்குமாறும், அதிரடி சோதனைகளை நடத்துமாறும் மாநில அரசுகளையும் கேட்டுக்கொண்டது.இதன்படி, நாடு முழுவதும் நடத்தப்பட்ட அதிரடி ரெய்டில் இதுவரை சுமார் 98ஆயிரம் டன்களுக்கு மேல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதை தொடர்ந்து, மும்பை வேளாண் விளைபொருள் விற்பனை மையத்தில் பருப்பு வகைகளின் விலை சுமார் 15 சதவீதம் வரை குறைந்து விட்டது. மொத்த விலையில் துவரம்பருப்பு கிலோ ரூ.150க்கு வந்து விட்டது. மற்ற பருப்பு வகைகளும் இதுபோல் குறைந்து வருகின்றன. தீபாவளி பண்டிகை நெருங்கும் நிலையில் இந்த ரெய்டால் தட்டுப்பாடு ஏற்பட்டு விலை உயரும் அபாயமும் ஏற்பட்டுள்ளது என மகாராஷ்டிராவில் உள்ள பருப்பு

மொத்தவிலை வியாபாரிகள் சிலர் தெரிவித்தனர்.

இதற்கிடையில் பறிமுதல் செய்யப்பட்ட பருப்புகள் அடுத்த வாரம் முதல் மாநில அரசுகள் சப்ளை செய்யும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதுகுறித்து நுகர்வோர் விவகார அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கையில், ‘‘பருப்பு பதுக்கலை தடுக்க பல்வேறு இடங்களில்சோதனைகள் நடந்து வருகின்றன. நேற்று பறிமுதல் செய்யப்பட்ட 15,000 டன்னையும் சேர்த்து இதுவரை சுமார் 98,000 டன் பருப்பு வகைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. பதுக்கலுக்கு எதிரான இந்த நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இதுதவிர மாநில அரசுகள் பருப்பு வகைகளை கிலோ ரூ.120 முதல் ரூ.140 வரை விற்று வருகின்றன’’ என தெரிவிக்கப்பட்டுள்ளது. பறிமுதல் செய்யப்பட்ட பெரும்பாலான பருப்பு வகைகள் கடந்த 3 முதல் 4 மாதங்களாக பதுக்கி வைக்கப்பட்டவை என அரசு வட்டாரங்கள் கூறுகின்றன. நுகர்வோர் விவகார அமைச்சக அதிகாரி ஒருவர் கூறுகையில், ‘‘பறிமுதல் செய்யப்பட்ட பருப்பு வகைகள் அடுத்த வாரத்தில் இருந்து அந்தந்த மாநில அரசுகள் மூலம் சந்தைக்கு சப்ளை செய்யப்படும். இதனால் பருப்பு விலை மேலும் குறைவதற்கு வாய்ப்புகள் உள்ளன என்றார். தமிழக முழுவதும் பருப்பு குடோன்களை பட்டியல் எடுத்து அதனை கண்காணிக்க உத்தரவிடப்பட்டுள்ளது. கோவை, சேலம் மாவட்டங்களிலுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட குடோன்களில் பருப்பு பதுக்கப்பட்டுள்ளதா என்பது குறித்து உணவு கடத்தல் தடுப்பு பிரிவு அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தினர்.இதில பதுக்கல் பருப்பு ஏதும் பறிமுதல் செய்யப்படவில்லை.

**வடகிழக்கு பருவமழை தொடங்கியது : தமிழகத்தில் 4 நாட்களுக்கு கன மழை**



சென்னை: தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியதை அடுத்து நான்கு நாட்களுக்கு தமிழகம், புதுச்சேரியில் கனமழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் இந்த ஆண்டுக்கான வடகிழக்கு பருவமழை நேற்று தொடங்கியது. இதன் அறிகுறியாக தென்மேற்கு வங்கக் கடலில் இலங்கை அருகே தமிழக கடலோரத்தை ஒட்டிய பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்பு உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி அதே இடத்தில் நிலை கொண்டுள்ளது.

இதனால் தமிழகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. சென்னையில் நேற்று முன்தினம் இரவு முதல் விட்டு விட்டு மழை பெய்து வருகிறது. தமிழகத்தில் நேற்று அதிகபட்சமாக வல்லத்தில் 90 மிமீ மழை பெய்துள்ளது. தாம்பரம், மேட்டுப்பாளையம் 70 மிமீ, செம்பரம்பாக்கம் 50 மிமீ, பாபநாசம், செந்துறை, அரியலூர் 40 மிமீ, மாமல்லபுரம், கிருஷ்ணகிரி, திருவையாறு, மேட்டூர் 30 மிமீ, தஞ்சாவூர், குமாரபாளையம், நாமக்கல், திருக்காட்டுப்பள்ளி, விருத்தாசலம், தேன்கனிக்கோட்டை 20 மிமீ, கடலூர், சென்னை விமான நிலையம் 10 மிமீ மழை பெய்துள்ளது. இந்நிலையில் தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் நிலை கொண்ட அந்த குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி மேலும் வலுவடைந்து வட மேற்கு திசையில் நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக தமிழகம், புதுச்சேரியில்

நான்கு நாட்களுக்கு மழை பெய்யும். சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்யும். காற்றழுத்த தாழ்வு பகுதி வலுவடைவதால் கடலில் மணிக்கு 45 கிமீ வேகத்தில் இருந்து 55 கிமீ வேகத்தில் காற்று வீசும் என்பதால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளனர். மேலும், தமிழக, கேரள துறைமுகப்பகுதிகளில் புயல் எச்சரிக்கை கூண்டு எண் 1 ஏற்றவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு வேளாண் பயிற்சி**

நெட்டப்பாக்கம், : மத்திய அரசின் கெய்ல் நிறுவனம் மற்றும் வேப்ஸ் தோண்டு நிறுவனமும் இணைந்து விவசாயிகளுக்கு ஐந்து நாள் இலவச பயிற்சியை கரையாம்புத்தூரில் நடத்தியது. ஸ்டார் கிளினிக் உரிமையாளர் ஆனந்தன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக கரையாம்புத்தூர் இந்தியன் வங்கி மேலாளர் அஜித்குமார் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு கருத்துரை வழங்கினார். வேளாண் பயிற்சி மற்றும் விவசாய ஆலோசனை மைய அலுவலர் அங்காளன் நன்றி கூறினார். உழவர் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை, சாகுபடி தொழில்நுட்பங்கள், மண்புழு உரஉற்பத்தி, காளான் உற்பத்தி, அறுவடை தொழில்நுட்பங்கள், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. இதில் 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் பரமநாதன், பக்தவச்சலம் ஆகியோர் செய்திருந்தனர்.

**கடற்பாசிகள் சாகுபடி மாற்று தொழிலால் மீனவபெண்கள் மகிழ்ச்சி**

ராமநாதபுரம், : கடற்கரை பகுதியில் மீன்பிடி தொழிலைத்தவிர தற்போது மாற்றுத்தொழிலாக கடற்பாசி வளர்த்தல் அதிகளவில் நடந்து வருவதால்

மீனவ பெண்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தமிழ்நாட்டில் தெற்கு கடற்கரை பகுதிகள், குஜராத், லட்சத்தீவு, அந்தமான் நிகோபார் கடலோர பகுதிகளில் கடற்பாசிகள் அதிகமாக காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் ராமேஸ்வரம் முதல் கன்னியாகுமரி வரையிலான ஆயிரத்து 863 ச.கி.மீ. பரப்பளவில் உள்ள கடல்பகுதிகளில் 75 ஆயிரத்து 373 டன் எடையில் கடற்பாசிகள் உள்ளதாக ஆராய்ச்சியாளர்களால் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தியாவில் மட்டும் சுமார் ஆயிரத்து 153 வகை சார்ந்த கடற்பாசிகள் உள்ளன. இந்த கடற்பாசிகளில் 60 வகைகள் வணிகத்தில் முக்கிய இடம் பிடிக்கின்றன. கடற்பாசிகள் பொதுவாக கடலோர பகுதிகள், ஆழம் குறைந்த பகுதிகள், 180 மீட்டர் வரையிலான ஆழ்கடல் பகுதிகள், பாறைபகுதிகள் மற்றும் பவளப்பாறை பகுதிகளில் காணப்படுகின்றன. இவைகள் உணவுப்பொருள் மற்றும் மருந்துபொருள் தயாரிப்பில் முக்கிய இடம் வகிக்கின்றன. கடற்பாசிகள் இந்தியாவில் இதுவரை சோதனை அடிப்படையிலேயே வளர்க்கப்பட்டு வந்தன. சமீபகாலமாக கடற்பாசி வளர்ப்பு செம்மைபடுத்தப்பட்டு ஊரகத்தொழிலாக வளர்ச்சி அடைந்துள்ளது. உலகளவில் கடற்பாசிகளின் உபயோகங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த பாசிகளை பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்கள் நேரிடையாக கொள்முதல் செய்வதால் இந்த கடற்பாசி வளர்ப்பு மீனவர்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது.கடற்பாசிகளை வளர்க்கும் தொழில்நுட்பத்தை ஏற்கனவே மண்டபம் கேம்பில் உள்ள மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சி நிலையமும், மத்திய உப்பு மற்றும் கடல் வேதியியல் ஆராய்ச்சி நிலையமும் கண்டுபிடித்து கடற்பாசி வளர்ப்பின் முக்கியத்துவத்தை தெரியபடுத்தியுள்ளன.தற்போது மீனவ பெண்களின் மேம்பாட்டிற்காக தமிழக அரசு ஏற்கனவே அறிவித்த பட்ஜெட்டில் இந்த தொழிலுக்கு முழுவரிவிலக்கு அளித்தது. கடந்த 2001ல் பெண்கள் சுய உதவிகுழுக்கள் மூலம் ஆரம்பிக்கப்பட்ட இந்த தொழில் தற்போது நல்ல வளர்ச்சி அடைந்துள்ளது. தற்போது இந்த கடற்பாசிகளை சேகரிக்கும் தொழிலில்

பல மீனவ பெண்கள் ஈடுபட்டுள்ளனர். மண்டபம், பாம்பன் தோணித்துறை, வேதாளை கடற்பகுதியில் அதிகளவில் கப்பாபைகஸ் அல்வரிசி என்ற கடற்பாசி பயிரிடப்படுகிறது. இது கேராஜினின் மூலப்பொருளை உற்பத்தி செய்ய பயன்படும் கடற்பாசியினமாகும். இந்தபாசி தடிமனாக இருப்பதால், மீன்கள் இதை உணவாக உட்கொள்வதில்லை. சுந்தரமுடையான் அருகேயுள்ள சீனியப்பா தர்ஹா கடற்கரை பகுதியில் கோரைபாசிகள் என அழைக்கப்படும் சர்காஸம் என்ற பாசி சேகரிக்கப்படுகின்றன. இவைகள் பெரும்பாலும் ஆழ்கடலில் பாறைகள் இருக்கும் பகுதியில் வளர்கின்றன. கடல் நீரோட்டம் மற்றும் கடல் அலைகள் அதிகமாக இருக்கும்போது வேருடன் பிடுங்கப்பட்டு இவைகள் கரைக்கு வந்து சேர்கின்றன. இதுதவிர மீனவர்களும் நாட்டுப்படகில் சென்று ஆழ்கடலில் முத்துக்குளிப்பதை போன்று இந்தவகை பாசிகளை சேகரிக்கின்றனர். இந்தபாசிகளை சேகரிக்கும் மீனவபெண்கள் கடற்கரை பகுதிகளில் நன்றாக உலரவைத்து ஒரு டன்னிற்கு ரூ.3 ஆயிரம் விலையில் மொத்த வியாபாரிகளிடம் விற்கின்றனர். கடற்பாசிகளை வளர்ப்பதற்காக மீனவ பெண்கள் மூங்கில் தட்டிகள் அமைத்து கடலில் மிதக்கவிட்டு 45 நாட்கள் முதல் 60 நாட்கள் கழித்து அதை அறுவடை செய்கின்றனர். பின்னர் அதை நன்றாக வெயிலில் உலர வைத்து, மூடையாக பேக்கிங் செய்து வெளி இடங்களுக்கு ஏற்றுமதி செய்கின்றனர். இதன் மூலம் மாதத்திற்க்கு ரூ.4 ஆயிரம் முதல் ரூ.6 ஆயிரம் வரை மீனவபெண்கள் வருவாய் ஈட்டி வருகின்றனர்.

இந்த தொழிலுக்கு தேவையான மூங்கில், வலைகள் மற்றும் உலர வைப்பதற்கு தேவையான மூலப்பொருட்கள் ஆகியவற்றை மீனவபெண்கள் வாங்குவதற்க்கு வங்கிகள் கடன் உதவிகள் வழங்குகின்றன. இதுகுறித்து மத்திய கடல் மீன்வள ஆராய்ச்சியாளர்கள் கூறுகையில், ‘சர்காஸம் வகை கடற்பாசியிலிருந்து சோடியம் அல்ஜினேட் என்ற வேதிப்பொருள் தயாரிக்கப்படுகிறது. இவை

அதிகளவில் டெக்ஸ்டைல் தொழில்நுட்பத்தில் துணிகளுக்கு நிறங்களை சேர்க்கும் பணியில் பயன்படுத்தப்படுகிறது.

இதுதவிர மெடிசன் மற்றும் உணவுப்பொருட்கள் தயாரிப்பிலும் முக்கிய பங்காற்றுகிறது. பெரும்பாலும் இவைகள் குஜராத் மாநிலத்திற்கு அதிகளவில் அனுப்பி வைக்கப்படுகின்றன. வெளிமார்க்கெட்டில் ஒரு டன் ரூ.7 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரை விற்கப்படுகின்றன. கடற்பாசிகளில் இருந்து கிடைக்கும் அகார், கேராஜினின் மற்றும் அல்ஜின் ஆகிய மூலப்பொருட்கள் நாம் அன்றாடம் பயன்படுத்தும் உணவு, மருந்து, பால், இனிப்பு மற்றும் வர்ணம் போன்ற பொருட்களில் சேர்த்து பயன்படுத்தலாம். இதற்காக ஆராய்ச்சி நிலையத்தில் பல்வேறு ஆய்வுகளை செய்து வருகிறோம்’ என்றனர்.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## தமிழக அரசின் நடவடிக்கையால் துவரம் பருப்பு கிலோ ரூ.145-க்கு விற்க இயலும்: பருப்பு உற்பத்தியாளர்கள் சங்கம் அறிக்கை



சென்னை, அக்.29-

தமிழ்நாடு பருப்பு உற்பத்தியாளர்கள் சங்க செயலாளர் ஆர்.ராஜ்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-28-10-2015 அன்று சென்னை சேப்பாக்கம் எழிலக கட்டிட கூட்டரங்கில் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் தமிழ்நாடு பருப்பு வணிகர்கள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் தமிழக மக்களுக்கு பருப்பு வகைகளை சீரான முறையிலும், குறைந்த விலையிலும் விற்பனை செய்ய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை பாராட்டுவதுடன் பருப்பு வணிகர்களின் முழு ஒத்துழைப்பையும் நல்குவதென தெரிவிக்கப்பட்டது.மேலும், வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.133 முதல் ரூ.135 வரை மில் விலைக்கு விற்பனை செய்ய சம்மதிப்பதாகவும், இதனால் சில்லறை விற்பனையில் இறக்குமதி செய்யப்பட்ட துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.145-க்கு மிகாமல் விற்க இயலும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இதுவரை சில்லறை விற்பனையில் ஒரு கிலோ ரூ.180-க்கு விற்பனை செய்யப்பட்ட இறக்குமதி துவரம் பருப்பின் விலை, தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக இறக்குமதி செய்யப்பட்ட துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.145-க்கு விற்க இயலும் என்பதையும் பொதுமக்களுக்கு பருப்பு வியாபாரிகள் சங்கத்தின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம்.இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

**தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தொடங்கியது: இயல்பான அளவுக்கு பெய்யும் என வானிலை மையம் அறிவிப்பு**



சென்னை, அக்.29-

இந்தியாவில் வடகிழக்கு பருவமழையை பெரிதும் நம்பி இருக்கும் மாநிலம் தமிழ்நாடு. ஏன் என்றால் மற்ற மாநிலங்களில் தென் மேற்கு பருவமழை காலத்தில் அதிக மழை பெய்யும். ஆனால் தென் மேற்கு பருவமழை காலத்தில் தமிழ்நாட்டில் சிறிதளவுதான் மழை பெய்யும். வடகிழக்கு பருவமழைதான் அதிக அளவில் தமிழ்நாட்டில் பெய்யும். தமிழ்நாட்டில் தென் மேற்கு பருவமழை நின்று விட்டது. தென் மேற்கு பருவமழை சராசரி அளவு பெய்துள்ளது. கடந்த 3 வருடங்களாக வடகிழக்கு பருவமழை நன்றாக பெய்யவில்லை. அதாவது போதிய அளவுக்கு பெய்யவில்லை. இதனால் ஏரிகள், குளங்கள் அனைத்தும் நிரம்பவில்லை. சில நீர் நிலைகள் மட்டும்தான் நிரம்பின. எனவே இந்த வருடமாவது வடகிழக்கு பருவமழை போதிய அளவுக்கு பெய்து ஏரிகள், குளங்கள் நிரம்ப வேண்டும். விவசாயம் நன்றாக இருக்கவேண்டும் பயிர்கள் நன்றாக விளையவேண்டும் என்று விவசாயிகள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

வடகிழக்கு பருவமழையின் அளவை அளக்கும் காலம் அக்டோபர் மாதம் 1-ந்தேதி முதல் டிசம்பர் 31-ந்தேதி வரையாகும். ஆனால் வடகிழக்கு

பருவமழை அக்டோபர் மாதம் 20-ந்தேதி தான் சராசரியாக தொடங்கும். கடந்த வருடம் அக்டோபர் மாதம் 20-ந்தேதிக்கு முன்பாகவே வடகிழக்கு பருவமழை தொடங்கிவிட்டது. ஆனால் இந்த வருடம் வடகிழக்கு பருவமழை, சராசரி தேதியை விட ஒரு வாரத்திற்கு மேல் தள்ளிப்போய் நேற்று தொடங்கிவிட்டது.இது குறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் நிருபர்களிடம் கூறியதாவது:-

நேற்று முன்தினம் தென் மேற்கு வங்கக்கடலில் இலங்கை அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது அதே இடத்தில் நிலை கொண்டுள்ளது. அதன் காரணமாக தமிழ்நாட்டில் வட கடலோர மாவட்டங்களில் அநேக இடங்களிலும், உள் மாவட்டங்களில் சில இடங்களிலும் மழை பெய்துள்ளது.கடலோர மாவட்டங்களில் அநேக இடங்களில் மழை பெய்துள்ளதால் வடகிழக்கு பருவமழை (நேற்று) தமிழ்நாடு மற்றும் அதை யொட்டி உள்ள கேரளா, கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் தொடங்கிவிட்டது என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்படுகிறது.

அடுத்த 24 மணி நேரத்திற்கு தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் கடலோர மாவட்டங்களில் அநேக இடங்களிலும், உள் மாவட்டங்களில் சில இடங்களிலும் மழை பெய்யும். நீண்ட கால வானிலையாக தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை இயல்பான அளவுக்கு பெய்யும். அக்டோபர் மாதம் 1-ந்தேதியில் இருந்து வடகிழக்கு பருவமழை கணக்கிடப்படுவதால் இதுவரை 11 செ.மீ.மழை பெய்துள்ளது.இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார். நேற்று காலை 8-30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-வல்லம் 9 செ.மீ., தாம்பரம், மேட்டுபாளையம் தலா 7 செ.மீ., செம்மரம்பாக்கம் 5 செ.மீ., பாபநாசம்,

செந்துறை, அரியலூர் தலா 4 செ.மீ., மகாபலிபுரம்,கிருஷ்ணகிரி, ஆர்.எஸ்.மங்கலம், திருவையாறு, துவாக்குடி, மைலாடி, மேட்டூர், திருச்சி விமானநிலையம் தலா 3 செ.மீ., திருமானூர், தஞ்சாவூர், குமரப்பாளையம், நாமக்கல், திருக்காட்டுப்பள்ளி, பவானி, பரமத்தி வேலூர், விருத்தாசலம், புதுச்சேரி, தேன்கனிக்கோட்டை தலா 2 செ.மீ. மழை பெய்துள்ளது.மேலும் பல இடங்களில் மழை பதிவாகி உள்ளது.தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கடலோரங்களில் மீனவர்கள் யாரும் இன்று(வியாழக்கிழமை) கடலுக்கு மீன் பிடிக்கச்செல்ல வேண்டாம் என்று வானிலை மையம் எச்சரித்து உள்ளது. மேலும் கடலோரங்களில் 45 கிலோ மீட்டர் முதல் 55 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசும் என்றும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் நேற்று சென்னை, திருநெல்வேலி, தூத்துக்குடி, தஞ்சை, கடலூர், ஈரோடு, கோவை, திண்டுக்கல், தேனி, நீலகிரி, பெரம்பலூர் உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக பலத்த மழை பெய்தது.சென்னையிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் நேற்று காலை மேக மூட்டமாக காணப்பட்டது. மாலையில் பலத்த மழை கொட்டியது. பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுகா பாடாலூர் கிராமத்தை சேர்ந்தவர் சாமிநாதன். இவருடைய மனைவி சின்னம்மாள்(வயது 70). மகன் சிதம்பரம்(49).இருவரும் நேற்று மதியம் தங்களது விவசாய நிலத்தில் வேலை பார்தது கொண்டு இருந்தனர். அப்போது திடீரென இடி- மின்னலுடன் பலத்த மழை கொட்டியது. இதனால் மரத்தின் அடியில் ஒதுங்கி நின்ற தாயும், மகனும் மின்னல் தாக்கி பலியாயினர்.

தஞ்சை மாவட்டம், கும்பகோணம் அருகே உள்ள கண்ணாரகுடியைச் சேர்ந்தவர் ராஜேஷ்கண்ணா. இவருடைய மனைவி மலர்க்கொடி (வயது40). சத்துணவு ஊழியர்.நேற்று முன்தினம் இரவு அந்த பகுதியில்

பெய்த பலத்த மழையின் காரணமாக ராஜேஷ்கண்ணா வீடு அருகே மின்கம்பி அறுந்து கிடந்ததது. இதைக் கவனிக்காமல் மிதித்த மலர்க்கொடி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார்.

## தமிழ்நாட்டில் பருப்பு வியாபாரிகள் எவ்வளவு இருப்பு வைத்துக்கொள்ளலாம்?: உணவுத்துறை அமைச்சர் தகவல்



சென்னை, அக்.29-

தமிழ்நாட்டில் பருப்பு வியாபாரிகள் எவ்வளவு இருப்பு வைத்துக்கொள்ளலாம்? என்பது பற்றி உணவுத்துறை அமைச்சர் காமராஜ் பேசினார்.இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:-உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் ரா.காமராஜ் தலைமையில், பருப்பு வணிகர்களுடன் கலந்தாய்வு கூட்டம் 28-ந் தேதி (நேற்று) சேப்பாக்கம் எழிலகத்தில் நடைபெற்றது.இந்த கூட்டத்தில் அமைச்சர் காமராஜ் பேசியதாவது:-பெரும்பான்மையாக பருப்பு உற்பத்தி செய்யும் மாநிலங்களில் பருவமழை பொய்த்த காரணத்தால், சாகுபடி பரப்பளவும், உற்பத்தியும் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், பருப்பு வகைகளின் விலை இந்தியா முழுவதும் உயர்ந்துள்ளது.தமிழ்நாட்டில் பொதுமக்களுக்கு இவ்விலையேற்றத்தின் பாதிப்பு ஏற்படாதவண்ணம் குறைந்த விலையில் கிடைக்க முதல்-அமைச்சர் ஜெயலலிதா

தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழகம் முழுவதுமுள்ள 34 ஆயிரத்து 352 ரேஷன் கடைகள் மூலம், குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ துவரம் பருப்பு, ஒரு கிலோ உளுந்தம் பருப்பு ஆகியவை ரூ.30 என்ற விலையிலும், பாமாயில் ஒரு லிட்டர் பாக்கெட் ரூ.25 என்ற விலையிலும் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.இதன்படி, ஒவ்வொரு மாதமும் 13 ஆயிரத்து 461 மெட்ரிக் டன் துவரம் பருப்பு, 7 ஆயிரம் மெட்ரிக் டன் உளுந்தம் பருப்பு, ஒரு கோடியே 50 லட்சம் பாக்கெட் பாமாயில் ஆகியவை ஒதுக்கீடு செய்யப்பட்டு, சராசரியாக 98 சதவீதம் நுகர்வு செய்யப்படுகிறது.

இப்பொருட்கள் வழங்கப்படும் சிறப்பு பொது வினியோக திட்டத்திற்கான மானியத்தை முந்தைய மத்திய அரசு 2012-ம் ஆண்டு ஜூன் 30-ந் தேதியோடு நிறுத்திவிட்டபோதிலும், இதனால் ஏற்படும் மானியச்சுமை சுமார் ஆயிரத்து 400 கோடி ரூபாயை தமிழக அரசே ஏற்றுக்கொண்டு இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

முதல்-அமைச்சர் ஜெயலலிதா செயல்படுத்தி வரும் இத்திட்டங்களை பின்பற்றி ஆந்திரா, தெலுங்கானா போன்ற மாநிலங்களில் துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.40-க்கும், அரியானாவில் ஒரு கிலோ ரூ.50-க்கும் ரேஷன் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

1.11.2015 முதல் சென்னை, கோவை, திருச்சி, மதுரை உள்ளிட்ட நகரங்களில் கூட்டுறவு மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக பல்பொருள் விற்பனை அங்காடிகள் மூலம் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.110 என்ற விலையிலும், அரை கிலோ ரூ.55 என்ற விலையிலும் விற்பனை செய்யப்படும் என்று முதல்-அமைச்சர் ஜெயலலிதா

அறிவித்துள்ளார்.

அதன்படி, 91 அங்காடிகள் மூலம் விற்பனை செய்ய, அங்காடிகளுக்கு துவரம் பருப்பு நுகர்வு செய்யப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு முதல்-அமைச்சர் ஜெயலலிதா அளித்துவரும் பல்வேறு சலுகைகளின் பயனாக, தமிழ்நாட்டில் துவரை சாகுபடி செய்யும் நிலப்பரப்பு உயர்ந்துள்ளது. இதற்காக ஒரு இயக் கம் செயல்படுத்தப்படும்,

துவரை சாகுபடி அதிகரிக்க பல்வேறு உத்திகள் கடைப்பிடிக்கப்படும் என்றும் முதல்- அமைச்சர் ஜெயலலிதாவின் அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் பருப்பு தேவைக்கு தன்னிறைவு ஏற்படும் நிலை உருவாகும்.

தமிழ்நாட்டில் அத்தியாவசிய பொருள்கள் பதுக்கப்படுவது மற்றும் கடத்தப்படுவது பெரிதும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பருப்பு மொத்த வணிகர்களுக்கு மாநகராட்சி பகுதிகளில் 2,500 குவிண்டால் என்றும், சில்லரை வணிகர்களுக்கு 62.5 குவிண்டால் என்ற அளவிலும் பருப்பு இருப்பு வைத்துக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதர பகுதிகளில் முறையே 1,250 குவிண்டால் மற்றும் 50 குவிண்டால் என்ற அளவில் அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்த அளவு அனைத்து வகை பருப்புகளையும் உள்ளடக்கிய மொத்த அளவாகும்.

பருப்பு வணிகர்கள், அனுமதிக்கப்பட்டுள்ள அளவில் மட்டும் பருப்பு இருப்பு வைத்து, விலை உயர்வின்றி, வினியோகம் செய்ய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தர வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.

அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு தருவதாக பருப்பு வணிகர்கள் தெரிவித்தனர். இந்த கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மை செயலாளர் சிவ்தாஸ்மீனா, உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர் சு.கோபாலகிருஷ்ணன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நிர்வாக இயக்குனர் கா.பாலச்சந்திரன், உணவு பொருள் குற்ற புலனாய்வுத்துறை கூடுதல் இயக்குனர் கே.ராதாகிருஷ்ணன் மற்றும் பருப்பு வணிகர்கள் கலந்துகொண்டனர்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை

கடலூர், அக்.29–

கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது.

வடகிழக்கு பருவமழை தொடங்கியதை தொடர்ந்து நேற்று கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. கடலூர், நெல்லிக்குப்பம் மற்றும் சுற்றுப்பகுதிகளில் நள்ளிரவு 12 மணி அளவில் சுமார் 1 மணிநேரம் மழை பெய்தது. பண்ருட்டி, வடலூர், குறிஞ்சிப்பாடி ஆகிய பகுதிகளில் இரவில் 1 மணிநேரத்துக்கும் மேலாக இடி–மின்னலுடன் கனமழை கொட்டித்தீர்த்தது.

இதுதவிர விருத்தாசலம், கம்மாபுரம், மங்கலம்பேட்டை, நெய்வேலி உள்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று விட்டு, விட்டுமழை தூறியது. ஸ்ரீமுஷ்ணம் மற்றும் சுற்றுப்புற கிராமங்களில் இன்று அதிகாலை 3 மணி முதல் 4 மணிவரை பலத்த மழை பெய்தது.

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர், திருநாவலூர், உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றுப்பகுதியில் நேற்று பகலில் விட்டு, விட்டு மழை பெய்தது. பிறகு இரவு 8.30 மணி அளவிலும் சுமார் ½ மணிநேரம் பெய்த மழையால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்தது. அடுத்தடுத்து பெய்த மழையால் உளுந்து விவசாயிகள்

மகிழ்ச்சியடைந்தனர். விழுப்புரத்திலும் பகலில் ½ மணி நேரம் மழை பெய்தது.

தி இந்து
தமிழால் இணைவோம்

**துவரம் பருப்பு விலையை குறைக்க தமிழக அரசு நடவடிக்கை__: கடைகளில் கிலோ ரூ.145-க்கு விற்பனை_- அமைச்சர் நடத்திய கூட்டத்தில் வணிகர்கள் ஒப்புதல்**



தமிழகத்தில் துவரம் பருப்பு விலையை குறைக்க வணிகர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். இது தொடர்பாக அமைச்சர் நடத்திய ஆலோசனை கூட்டத்தில், இறக்குமதி துவரம் பருப்பு கடைகளில் கிலோ ரூ.145-க்கு விற்க சம்மதம் தெரிவித்துள்ளனர்.

நாடு முழுவதும் துவரம் பருப்பு மற்றும் உளுந்தம் பருப்பு விலை அதிகரித்துள்ளது. குறிப்பாக, துவரம் பருப்பு விலை முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு கிலோ ரூ.220 வரை விற்கப்பட்டது. விலையை கட்டுப்படுத்த மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்தன.

வெளிநாடுகளில் இருந்து முழு துவரையை இறக்குமதி செய்து, பருப்பாக மாற்றி குறைந்த விலையில் விற்க ஏற்பாடு செய்யப்பட்டது. மத்திய அரசு இறக்குமதி செய்த முழு துவரையில், 500 மெட்ரிக் டன் தமிழகத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து கூட்டுறவு விற்பனை அங்காடிகளில் நவம்பர் 1-ம் தேதி முதல் கிலோ ரூ.110 என்ற விலையில் துவரம் பருப்பு விற்கப்படும் என முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். அதன்படி, மத்திய அரசு வழங்கிய முழு துவரையை பருப்பாக மாற்றும் பணி வேகமாக நடந்து வருகிறது.

இந்நிலையில், வெளி மார்க் கெட்டில் பருப்பு விலையை கட்டுப் படுத்த தமிழக அரசு நடவடிக்கை மேற் கொண்டது. இதுதொடர்பாக பருப்பு வணிகர்களுடனான கலந்தாய்வு கூட்டம் சென்னை சேப் பாக்கம் எழிலகத்தில் உணவுத்துறை அமைச்சர் காமராஜ் தலைமையில் நேற்று நடந்தது. இதில், உணவுத் துறை செயலர் சிவ்தாஸ் மீனா, உணவுப்பொருள் வழங்கல் ஆணையர் சூ.கோபாலகிருஷ்ணன், நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் கா.பாலச்சந்திரன், உணவுப்பொருள் குற்ற புலனாய்வுத்துறை கூடுதல் டிஜிபி கே.ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கூட்டத்தில், அமைச்சர் காமராஜ் பேசியதாவது:**

பருப்பு உற்பத்தி செய்யும் மாநிலங் களில் பருவமழை பொய்த்ததால், சாகுபடி பரப்பும் உற்பத்தியும் குறைந்தது. இதனால், பருப்பு வகைகளின் விலை உயர்ந்துள்ளது. தமிழகத்தில் சென்னை, கோவை, திருச்சி, மதுரை உள்ளிட்ட நகரங்களில் ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.110, அரை கிலோ ரூ.55 என்ற விலையில் நுகர்பொருள் வாணிபக்கழக பல்பொருள் அங்காடிகளில் நவம்பர் 1-ம் தேதி முதல் விற்கப்படும் என முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். இதன்படி, 91 அங்காடிகளுக்கும் துவரம் பருப்பு அனுப்பப்பட்டு வருகிறது.

தற்போது விவசாயிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் காரணமாக தமிழகத்தில் துவரை சாகுபடி பரப்பு அதிகரித்துள்ளது. மேலும் துவரை சாகுபடிக்கான இயக்கம் ஒன்று செயல்படுத்தப்படும். சாகுபடியை அதிகரிக்க பல்வேறு உத்திகள் கடைபிடிக்கப்படும். தமிழகம் பருப்பு சாகுபடியில் விரைவில் தன்னிறைவு அடையும். தமிழகத்தில் அத்தியாவசிய பொருட்கள் பதுக்கல், கடத்தல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பருப்பு மொத்த வணிகர்களுக்கு அனைத்து பருப்புகளுக்குமான மொத்த அளவில் மாநகராட்சிகளில் 2,500 குவிண்டால், சில்லறை வணிகர்களுக்கு 62.5 குவிண்டால், இதர பகுதிகளில் 1,250 குவிண்டால் மற்றும் 50 குவிண்டால் என்ற அளவில் இருப்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. வணிகர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள அளவில் மட்டும் இருப்பு வைத்து, விலை உயர்வின்றி விநியோ கிக்க அரசு எடுக்கும் நடவடிக் கைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் பேசினார்.

**ரூ.145-க்கு விற்கலாம்**

ஆய்வுக் கூட்டத்துக்குப் பிறகு தமிழ்நாடு பருப்பு வணிகர்கள் சங்கத் தலைவர் ஆர்.ராஜ்குமார் வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் பருப்பு வகைகளை குறைந்த விலையில் விற்க அரசு எடுக்கும் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும். வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.133 முதல் ரூ.135 வரை மில் விலைக்கு விற்கப்படும். இதனால், இதுவரை கிலோ ரூ.180-க்கு விற்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட துவரம் பருப்பு, இனி சில்லரை விலையில் ஒரு கிலோ ரூ.145-க்கு மிகாமல் விற்க முடியும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.